Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily






## காளி கோயில் இடித்தழிப்பு தம்புள்ளையில் பதற்றநிலை

*படைத்தரப்பு அராஜகமெனக் குற்றச்சாட்டு; அடுத்த இலக்கு பள்ளியென மக்கள் அச்சம்*

கொழும்பு, ஒக். 30
தொடர் தாக்குதலுக்கு உள்ளாகி வந்த, 32 வருடங்கள் பழைமை வாய்ந்த தம்புள்ளை காளி கோயில், பௌத்த பிக்கு தலைமையில் படைத் தரப்பினர் எனத் தம்மை அடையாளம் காட்டிக்கொண்ட குழுவினரால் நேற்று அதிகாலை முற்று முழுதாக இடித்துத் தரைமட்டமாக்கப் பட்டுள்ளது. இதனால், அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.


கோப்புப்படம்

எவ்வித முன்னறிவிப்புகளுமின்றி நேற்று அதிகாலை ஆலயத்துக்குள் அத்துமீறி புகுந்த குழுவினர் ஆலயத்தை இடித்தழித்து அட்டகாசம் புரிந்துள்ளனர். காடையர் குழுவின் வெறித்

21

## அடிகாயங்களுடன் யுவதி கிணற்றில் சடலமாக மீட்பு

*கொலை எனச் சந்தேகம்*




யாழ்ப்பாணம், ஒக்.30
அடி காயங்களுடன் இளம் பெண் ஒருவரின் சடலம் புத்தூர் பகுதியிலுள்ள தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.
இந்தப் பெண்ணின் மரணம் தொடர்பாக சந்தேகம் தெரிவிக்

21

# வடக்குத் தமிழர்களுடன் சேர்ந்து நிற்கும் இந்தியா

*டில்லியில் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் திட்டவட்டம்*

கொழும்பு, ஒக்.30
வடக்கு மாகாண சபையைத் தமிழர்கள் என்ன நோக்கத்துக்காக தெரிவுசெய்தார்களோ அவர்கள் அதனை அடைவதற்கு இந்தியா உதவ வேண்டும். அத்துடன் வடக்கு தமிழர்களுடன் சேர்ந்து நிற்க வேண்டியது இந்தியாவின் கடமை என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார்.
அடுத்த மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ள நிலையில், அதற்குத் தமிழகம் எங்கும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் புதுடில்லியில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடமாகாணத்திலுள்ள தமிழர்கள் இந்தியாவிடமிருந்து பெருமெடுப்பில் எதிர்பார்க்கின்றனர். எனவே இவர்களின் பின்னால் நிற்பது இந்தியாவின் கடமை.
வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள சபையுடன் நிற்க வேண்டிய கடப்பாடு எமக்குள்ளது. நாம் போராடி அழுத்தம் கொடுத்து அங்கு தேர்தலை நடத்த வைத்துள்ளோம். 30 ஆண்டுகளில் முதன் முறையாக அங்கு தேர்தல் நடத்தப்பட்டுள்ளது.
அங்கு ஒரு முதலமைச்சர் இருக்கின்றார். அவர்களை நாம் கைவிட முடியாது. நாம் அவர்களுடனே நிற்க வேண்டும். அவர்கள் எதனை அடைவதற்காகத் தெரிவு செய்யப்பட்டார்களோ அதனை அடைவதற்கு நாம் உதவ வேண்டும்.
பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் பங்குபற்றுவதை எதிர்க்கும் தமிழக அரசியல் கட்சிகள், வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். அவர்கள் இப்போது கள நிலவரங்களைப் புரியாமல் குருடாக இருக்க முடியாது. அங்கு வடக்கு மாகாணத்தில் ஒரு தெரிவு செய்யப்பட்ட அரசு உள்ளது - என்றார் அவர். (த-5)



## இராணுவ அராஜகங்களுக்கு விரைவில் முடிவுகட்டுவோம்

*அமெரிக்கா செல்ல முன் மாவை சூளுரை*

கொழும்பு, ஒக்.30
"சர்வதேசத் தலைவர்களின் உதவியுடன் இராணுவத்தின் அராஜகத்திற்கு விரைவில் முடிவு கட்டுவோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்றுத் தெரிவித்தார்.
வலிகாமம் வடக்குச் சம்பவம் இராணுவத்தின் அராஜகத்தை மீண்டுமொரு தடவை சர்வதேசத்திற்கு எடுத் துக்காட்டியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
வலி. வடக்கு கட்டுவன் பகுதியில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் சிறப்புரிமையை மீறும் வகையில் அநாகரிகமான வார்த்தைகளைப் பிரயோகித்து அவருடன் முரண்பட்ட இராணுவ அதிகாரிக்கு எதிராக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.
வலி. வடக்குத் தமிழ் மக்களின் வீடுகள் இடித் தழிக்கப்படுவதைப்

21

## சிங்களக் குடியேற்றத்துக்கு அமைச்சர் வாசுதேவ எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30
சிங்கள மக்கள் சுயவிருப்புடன் வடக்கில் குடியேறுவதைத்தடுப்பதும் எதிர்ப்புத் தெரிவிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்று. ஆனால் அரசினால் சிங்கள மக்கள் குடியேற்றப்படுவதை எதிர்ப்பதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சிவில் நிர்வாகத்தில் இராணுவத் தலையீட்டை எதிர்ப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பாக சமூக ஒருமைப்பாடு மற்றும் தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவிக்கையில்,
சிங்கள மக்கள் தமது வர்த்தகம் மற்றும்

21

## புலிகளுக்கு ஆயுதம்; சுரேஷுக்கு இரு வருட சிறை

கொழும்பு, ஒக்.30
விடுதலைப் புலிகளுக்கு ஆயுத தளபாடங்களை வாங்க உதவினார் எனக் குற்றம்சாட்டப்பட்ட கனேடியத் தமிழரான சுரேஷ் சிறிஸ்கந்தராஜாவுக்கு அமெரிக்க நீதிமன்றம் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள் ளது.
கனடாவின் வாட்டர்லூ பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற போது, விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டி, வான் பொறியியல் கருவிகள், நீர்மூழ்கிகள், போர்க்கப்பல்களின் வடிவமைப்புகள் தொடர்பாக ஆய்வு செய்து பெற்றுக்கொடுக்கவும், இரவுப்பார்வை கருவிகள் மற்றும் தொடர்பாடல் கருவிகளையும் வாங்கிக் கொடுக்கவும் முயன்றார் என 2006 ஆம் ஆண்டில் சுரேஷ் அமெரிக்காவில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.
இவருக்கு எதிராக, தீவிரவாத அமைப்புக்கு உதவியதாக குற்றம்சாட்டப்பட்டு அமெரிக்க நீதி

21

## காணாமற்போனோர் விவரங்கள் ஆணைக்குழுவுக்கு

யாழ்ப்பாணம், ஒக்.30
மன்னார் பிரஜைகள் குழுவினரால் சேகரிக்கப்பட்ட காணாமல் போனோர் தொடர்பான விவரங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி கொழும்பில் வைத்து ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையில், வடக்கு - கிழக்கு பகுதிகளில் காணாமற்

21

## வடமாகாண முதலமைச்சரின் கருத்துகள் திருப்தியில்லை

*வடமேல் மாகாண முதல்வர் கூறுகிறார்*

குருணாகல், ஒக்.30
வடமாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் அண்மைக் காலமாகத் தெரிவித்து வரும் கருத்துக்கள் எமக்குத் திருப்தியளிப்பதாக இல்லை என வடமேல் மாகாண முதல்வர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.
வடமேல் மாகாண சபையின் முதலாவது கூட்டத் தொடர் நேற்று

21



## இராணுவத்தால் அச்சுறுத்தப்பட்ட ஊடகவியலாளர்கள் முறைப்பாடு

*மனித உரிமை ஆணைக்குழுவில்*

யாழ்ப்பாணம், ஒக்.30
வலி.வடக்கில் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்ட 5 ஊடகவியலாளர்களும், இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளனர்.
வலி.வடக்குப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயவேலியினுள் இராணுவத்தினரால் வீடுகள் இடித்தழிக்கப்படுவதை சென்று நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஊடகவியலாளர்கள் நேரில் சென்று ஒளிப்படம் எடுத்தனர்.
இதன் போது உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இருந்து வெளியே வந்த இராணுவத்தினர், ஊடகவியலாளர்களின் ஒளிப் படக் கருவிகளைப் பறித்து எடுக்கப்பட்ட படங்களை அழித்தனர். அத்துடன் இது தொடர்பான படங்கள்

21

# வலி.வடக்குப் பிரச்சினையை கேலிக் கூத்தாக்குகிறது அரசு

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக்.30
வலி. வடக்குப் பிரச்சினைக்கு சட்டரீதியாகத் தீர்வு காணத் தமிழ் மக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள நிலையில், அந்த சட்ட நடவடிக்கைகளைக் கேலிக் கூத்தாக்கும் வகையில் இலங்கை அரசு செயற்பட்டு வருகின்றது.
இவ்வாறான கட்டமைப்பு சார் இன அழிப்புப் பிரச்சினைகளை சர்வதேச சமூகம் வெறும் சட்டக் கோணத்தில் மாத்திரம் நோக்காது. அரசியற் பிரச்சினையாகக் கருதி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தியுள்ளது.
வலி.வடக்கில் வீடுகள் அழிக்கப்படுகின்றன. இதனைப் பார்வையிடச் சென்ற ஊடகவியலாளர்கள் இராணுவத்தினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். இது இலங்கை அரசின் மொத்த சட்ட ஆட்சியைக் கேலித் கூத்தாக்குவதுடன், மனித உரிமை மீறல் செயற்பாடும், ஊடக சுதந்திரத்தை அடக்க முற்படும் செயற்பாடுமாகும். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.
வலி.வடக்கு பகுதியிலுள்ள காணிகளை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவித்து அந்தப் பகுதி மக்களை மீண்டும் அங்கு குடியமர வைப்பதற்காக அரச இயந்திரத்தின் ஓர் அங்கமான இலங்கையின் உயர் நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் பெருமளவான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு அவை நிலுவையிலுள்ளன.
அந்த அரச இயந்திரத்தின் மற்றொரு அங்கமான இராணுவத்தினரால் வீடழிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையிலுள்ள போது, அந்த வழக்கின் விடயப் பொருளின் தன்மையானது பேணிப் பாதுகாக்கப்படல் வேண்டுமென்பது சட்டவிதி. அவ்வாறிருக்க இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு சட்ட ஆட்சியை நகைப்பிற்கிடமான வகையில் மீறியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# மூன்று பிரதேச சபைகள் நகரசபைகளாக தரமுயரும்

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்.மாவட்டத்திலுள்ள மூன்று பிரதேச சபைகளை நகர சபையாகத் தரமுயர்த்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ். வரதீஸ்வரன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்.மாவட்டத்தில் நல்லூர், வலி.தெற்கு மற்றும் வலி.தென்மேற்கு ஆகிய மூன்று பிரதேச சபைகளையும் நகர சபைகளாகத் தரமுயர்த்துமாறு அதன் தவிசாளர்களால் பத்திரங்கள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
அவற்றைத் தரமுயர்த்துவதற்கான அனைத்து வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒரு

> “ஒரு நாளில் நகர சபையாகத் தர முயர்த்த முடியும். ஆனால் அதனை அரசியல் வாதிகளே முன் னெடுக்க வேண்டும்.

நாளில் நகர சபையாகத் தரமுயர்த்த முடியும். ஆனால் அதனை அரசியல் வாதிகளே முன்னெடுக்க வேண்டும். தரமுயர்த்துமாறு கோரும் விண்ணப்பங்கள் எப்போதோ கிடைத்து விட்டன. அதற்கு உள்ளூராட்சி அமைச்சினால் செய்யப்பட வேண்டிய பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுவிட்டன. விரைவில் அந்தச் சபைகள் நகர சபைகளாகத் தரமுயர்த்தப்படுமென எதிர் பார்க்கிறேன் - என்றார். (த-4)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வுகள் இன்று புதன் கிழமை மு.ப.8.30 மணிக்கு பரமேஸ்வரன் கலையரங்கில் இடம்பெறவுள்ளன.
கல்லூரி அதிபர் இ.பாலகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வட மாகாண விவசாய கமநல சேவைகள் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் சுற்றாடல் துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன் ஆகியோர் கலந்துகொள்வர். (த-400)

# வாக்கு எண்ணும் இடங்களிலும் கண்காணிப்பாளர்கள் வேண்டும்

## தேர்தலைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் பரிந்துரை

யாழ்ப்பாணம், ஒக்.30
தேர்தல் வாக்கு எண்ணப்படும் இடங்களில் தேர்தல் கண்காணிப்பாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் மத்திய நிலையம், அதன் கண்காணிப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் சில பரிந்துரைகளையும் குறிப்பிட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வாக்குகளை எண்ணும் இடத்தில் கண்காணிப்பாளர்கள் மீண்டும் அனுமதிக்கப்படாமையானது, எமக்கு வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.
தேர்தல் செயன்முறைகளைக் கண்காணிக்கும் முழுமையான சிவில் சமூகத்துக்கு இது முக்கியமான தடையாகும். உள்ளூர்க் கண்காணிப்பாளர்களின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதற்கு ஆணையாளரையும் மற்றும் அரசியல்வாதிகளையும் வேண்டிக் கொள்வதுடன் அதற்கமைய சர்வதேச நியமங்களுடன் அவர்களின் வகிபாகம் மற்றும் செயற்பாடுகளில் தெளிவான மற்றும் முழுமையான விளக்கத்துடன் தேர்தல் சட்டங்களில் அவர்களுக்கான அங்கீகரித்தலுடன் இடமளிக்க வேண்டும் - என்றுள்ளது. (த-5)

# ஓமந்தை விபத்தில் வயோதிபர் ஒருவர் சாவு

வவுனியா, ஒக்.30
ஓமந்தை பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் நேற்று மாலை இடம்பெற்ற அம்புலன்ஸ் - சைக்கிள் விபத்தொன்றில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.
மல்லாவியிலிருந்து வவுனியா பொது வைத்தியசாலை நோக்கி சென்றுகொண்டிருந்த அம்புலன்ஸ் வாகனத்துடன் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.
சைக்கிளில் சென்றவரான ஓமந்தை அரசங்குளம் பகுதியைச் சேர்ந்த எஸ்.சொர்ணலிங்கம் (வயது 70) என்பவரே உயிரிழந்தவராவார்.
உயிரிழந்தவரின் சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக வவுனியா போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்த விபத்துத் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த-400-402)

# குற்றச் செயல்களைத் தடுக்க மாணவர்களிடமிருந்து கருத்து

## புதிய திட்டத்தை யாழ். பொலிஸார் நடைமுறைப்படுத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்.30
சூழலில் அவதானிக்கும், குற்றச் செயல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களிடம் இருந்து தகவல் பெற்று அதன் ஊடாக சம்பவங்களை ஆராய்ந்து சட்ட நடவடிக்கை எடுக்க திட்டம் ஒன்றை பொலிஸார் ஆரம்பித்து உள்ளனர்.
யாழ். பொலிஸ் நிலையப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் இந்தத் திட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
குற்றச் செயல்கள் மற்றும் குற்றச் செயல்கள் இடம்பெறும் இடங்கள், சமூக சீர்கேடுகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்தச் செயற்பாட்டை தாம் முன்னெடுத்துள்ளதாகக் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.
இதன்படி தமிழ்ப் பொலிஸார் ஒருவர் உள்ளிட்ட 3 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று உயர் தர வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடி தகவல்களைப் பெற்று வருகின்றனர்.
மாணவர்கள் தமது பிரதேசங்களிலும், சென்று வரும் இடங்களிலும் அவதானிக்கும் குற்றச் செயல்கள் சமூக சீர்கேடுகள் என்பவற்றைக் கேட்டறிவதுடன், இவ்வாறான சம்பவங்களால் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும் பொலிஸார் கேட்டறிந்து வருகின்றனர்.
பொது இடங்களில் மதுபோதையில் இடையூறு விளைவிப்பவர்கள், தனியார் கல்வி நிலையங்களை அண்மித்து நின்று மாணவர்களுக்கு இடையூறு விளைவிப்பவர்கள், தவறான முறையில் நடக்க முயற்சிப்பவர்கள், குறித்து தகவல்களை மாணவர்களிடம் இருந்து பெற்று, அந்தப் பகுதிகளுக்கு சென்று குற்றச் செயல்களைத் தடுப்பதே இதன் நோக்கம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன் பொது இடங்கள், பஸ் நிலையம் எனப் பல இடங்களிலும் குறித்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஜ-4)

# சட்ட விரோதமாகப் பற்சிகிச்சை யாழ்.நகரில் மூவருக்குத் தண்டம்

## 4 பேருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் சட்ட விரோதமாக பற் சிகிச்சைகளை மேற்கொண்டு வந்த குற்றத்தை ஒப்புக் கொண்ட மூவருக்கு யாழ்.நீதிமன்று தலா 5000 ரூபா அபராதம் விதித்ததோடு, எதிர்காலத்தில் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடக் கூடாது என்றும் எச்சரித்துள்ளது.
இதே குற்றச்சாட்டுள்ள மேலும் நான்கு சிகிச்சை நிலைய இயக்குநர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைக்காக அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள ஆகிய மூன்று பல் மூக்குக் கண்ணாடி நிலையங்களிலேயே சட்ட விரோதமாகப் பற்சிகிச்சை நடைபெற்று வந்துள்ளது.
யாழ். நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் இந்த வழக்குகள் விசாரணைக்கு வந்தன.
யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள 7 சிகிச்சை நிலையங்களுக்கு எதிராக கடந்த புதன் கிழமை யாழ். நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
குறித்த சிகிச்சை நிலைய நடத்துநர்கள், பல் வைத்தியர்கள் எவரும் இல்லாது தாமாகவே பல் அடைத்தல், பல் கட்டுதல், பல் பிடுங்குதல், பல் ஒழுங்கமைத்தல் உட்பட்ட சிகிச்சைகளைச் செய்து வந்துள்ளனர். இந்தச் சட்ட விரோதச் செயலை நிறுத்துமாறு யாழ்.பிராந்திய சுகாதாரப் பகுதியினரால் பல தடவை அறிவுறுத்தப்பட்ட போதும், சிகிச்சை நிறுத்தப்படவில்லை. இந்த நிலையில் சுகாதாரப் பகுதியினரால் கடந்த வருடம் யாழ். நீதிமன்றுக்கு இது தொடர்பில் பொலிஸாரூடாக குறித்த நிலைய நடத்துநர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.
இந்த நிலையில் கடந்த புதன் கிழமை 7 பேருக்கும் எதிராக நீதிமன்றில் சுகாதாரப் பகுதியினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது .
தம்மை மருத்துவ உத்தியோகத்தர்களாக இனங்காட்டி நோயாளர்களை மோசடி செய்தமை, இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யாது பற்சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொண்டமை, உரிய தகுதிகளைக் கொண்டிருக்காது பொது மக் களை ஏமாற்றியமை மற்றும் மருத்துவ தொழிலை புரிவதற்கு உரித்துடையவர் என்ற நம்பகத் தன்மையை ஏற்படுத்தியமை மற்றும் பல் வைத்தியருக்கு உரிய தகுதி இல்லாது பொதுமக்களிடம் கட்டணங்களை அறவிட்டமை என குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.
ஏழு பேரும் நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டனர். அவர்களில் மூன்று பேர் சட்ட விரோதமாக பற் சிகிச்சை மேற்கொண்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.
மேலும் மூன்று பேர் குற்றச்சாட்டை மறுத்ததனால் அவர்கள் மீதான வழக்கு அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மற்றொருவர் தொழில்நுட்ப உதவியாளர் (ரெக்னீசியன்) அவர் யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக தனது நிலையத்தை நடத்தி வருகிறார். அவருக்கு எதிரான வழக்கு விசாரணை ஜனவரிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.
தொழில்நுட்ப உதவியாளர்கள் எவருமே பற் சிகிச்சை முறைகள் எதனையும் செய்யத் தகுதியற்றவர்கள். பல் வைத்தியர்கள் கூறும் அளவுப் பிரமாணங்களுக்கேற்ப பல், கிளிப் என்பவற்றைச் செய்து வைத்தியரிடம் கொடுப்பதே அவர்களின் பணி. அவர்கள் பொது மக்களின் சிகிச்சைகளில் தொடர்புபடமுடியாது என்று வைத்தியர்கள் தெரிவித்தனர். (ஜ-4)




# கிளிநொச்சியில் நேற்று வீடொன்றில் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக்.30
கிளிநொச்சி 155ஆம் கட்டையில் நேற்று அதிகாலை வீடு புகுந்த திருடர்கள், 6 பவுண் நகைகள் மற்றும் 10 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.
வீட்டின் முன்வேலியைப் பிரித்து உள்ளே சென்ற திருடர்கள் வீட்டின் கதவையும் பிரித்து அறைகள், சமையல் அறை என அனைத்தையும் மணிக்கணக்கில் சல்லடை போட்டுத் தேடியுள் ளனர். அலுமாரிக்குள் இருந்த பணம், நகைகளைத் திருடியுள்ளனர்.
திருடிய பொருள்கள் போதாமையால் வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் கையை வைத்து அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுக்க திருடன் முனைந்துள்ளான். பெண் விழித்துக்கொண்டு கூக்குரல் இட்டபோது திருடன் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டான்.
சம்பவம் தொடர்பில் கிளிநொச் சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## வடக்கு மாகாண சபையுடன் ஐ.ஓ.எம். இணைந்து பணி



யாழ்ப்பாணம். ஒக், 30

வடக்கு மாகாண சபையுடன் இணைந்து ஐ.ஓ.எம் நிறுவனம் எதிர்காலத்தில் பணியாற்றும் என்று அந்த நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டீ கிறோகரி தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன். மாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன் , த. குருகுலராஜா, ப. சத்தியலிங்கம், பா. டெனீஸ்வரன் மற்றும் அமைச்சர்களின் செயலாளர்கள் ஆகியோருக்கும், ஐ.ஓ.எம் நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் யாழ். பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் ஐ.ஓ.எம் நிறுவனத்தால் வட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் வேலைத் திட்டங்களை இனங்காணும் போது வடக்கு மாகாண சபையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இத்துடன் வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்படுவதற்கும் ஐ.ஓ.எம் வதிவிடப் பிரதிநிதி சம்மதம் தெரிவித்துள்ளார். (த-5)

## மிருசுவில் நூலகத்தில் வாசிப்பு மாத நிகழ்வுகள்

தென்மராட்சி, ஒக்.30

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தும் நிகழ்வுகளின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 1.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும்.

பிரதேச சபைத் தலைவர் சி.துரைராஜா தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும், சிறப்பு விருந்தினர்களாக பிரதேச சபை செயலாளர் செல்வி.தி.தர்சினி, பிரதேச சபை சனசமூக அபிவிருத்தி அலுவலர் திருமதி செ.ஜெகதீஸன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் இ.தெய்வேந்திரம்பிள்ளையும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கல், நூல்கள் அன்பளிப்புப் பெறல், இலவச அங்கத்துவம் வழங்கல், கலை நிகழ்வுகள் போன்றவை இடம்பெறும். (வ-9)

# யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது அதிவேக தபால் சேவை வாகனம்




யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணத்திலிருந்து அதிவேக தபால் சேவையை வழங்குவதற்கான தபால் வாகனம் நேற்று யாழ்.தபாலகத்தை வந்தடைந்தது. தபால் திணைக்களத்தால் இலங்கை முழுவதும் அதி வேக தபால் சேவையை வழங்குவதற்காக 9 வாகனங்கள் அரசால் வழங்கப்பட்டுள்ளன. இதில் யாழ்ப்பா ணத்திலிருந்து சேவையை வழங்குவதற்கான வாகனம் நேற்று யாழ்ப்பாண பிரதம தபாலகத்துக்கு கொண்டு வரப்பட்டது.

இது தொடர்பாக இலங்கைத் தபால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி வீரசிங்கம் குமரகுரு தெரிவித்ததாவது:-

தபால் திணைக்களத்தின் புதிய சிந்தனைக்கு அமைவாக அதிவேக தபால் சேவையை வழங்குவதற்காக அரசால் 9 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதிவேக தபால் சேவையை இலங்கையின் சகல மாவட்டங்களிலும் நகரங்களிலும் இணைக்கப்பட்ட வலையமைப்பின் ஊடாக எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பித்து வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான புதிய வாகனங்களும், சாரதிகளும் அந்தந்த வாகனங்களில் பொதியை ஏற்றி இறக்குவதற்கான பொதி சுமப்பாளர்கள் என ஒவ்வொரு வாகனத்திலும் இருவர் வீதம் அந்தந்த வாகனங்களில் சேவையில் இருப்பர்.

அதன் முதற் கட்டமாக அந்தந்த இடங்களுக்கு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வவுனியா, தம்புள்ள, குருநாகல், காலி, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களுக்கு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சேவை வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா ஊடாக தம்புள்ளைக்கும் அங்கிருந்து மட்டக்களப்புக்கும் குருநாகலிருந்து இரத்தினபுரிக்கும், குருநாகலில் இருந்து கொழும்பு ஊடாக களுத்துறைக்கும் காலி, அம்பாந்தோட்டையிலிருந்து இரத்தினபுரிக்கும் என பரீட்சார்த்தமான சேவையை வழங்க வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த வாகனத் தொடர் ஊடாக அதிவேக தபால் சேவை நடைபெறும். யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வவுனியாவிலிருந்த வாகனம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய சேவையாக பொதி சேவையை குறிப்பாக தொகையான பொதி சேவையாக பூக்கூடைகள், பழவகைகள், மரக்கறிகள், நிறுவனங்களின் உதிரிப்பாகங்கள் போன்ற பொருள்களை பாரமெடுத்து அந்தந்த இடங்களுக்கு கிடைக்கக் கூடியதான சேவையை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது வழங்கப்படுகின்ற பொதிச் சேவையில் மாவட்டத்துக்குள் அனுப்பப்படுகின்ற பொதிகளில் முதல் 50 கிராமுக்கு 50 ரூபாவும் வெளி மாவட்டங்களுக்கு அனுப்புவதற்கு முதல் 50 கிராமுக்கு 60 ரூபாவும் மேலதிகமாக ஒவ்வொரு 50 கிராமுக்கும் 40 ரூபாவும் அறவிடப்படுகிறது. மிக விரைவில் பொதுமக்களால் ஏற்றுக் கொள்ளக் கூடிய குறைந்த கட்டணத்தை செலுத்தக் கூடியதான சேவையை நடத்த திறைசேரி அனுமதி தந்தால் வழங்கக் கூடியதாக இருக்கும். தபால் திணைக்களம் வர்த்தக ரீதியில் பொதி சேவையை விரிவு படுத்தத்திட்டமிட்டுள்ளது. பொதிப் பரிமாற்றல் சேவை என்பது எல்லா நாடுகளிலும் தபால் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது அதிவேக தபால் சேவையில் யாழ்ப்பாணத்திலிருந்து 24 மணித்தியாலயத்துக்குள் தொடர்புடையவர்களுக்கு பொதி கிடைக்கக் கூடியதாக இருக்கும். குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்கள் இதனால் நன்மையடையலாம்.-என்றார். (வ-14)

## முற்றவெளியில் களைகட்டியது தீபாவளி புடைவை வியாபாரம்



யாழ்ப்பாணம்.ஒக்.30

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகரில் முற்றவெளிப் பகுதியில் தென்னி லங்கை வியாபாரிகளது புடைவைக் கடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகரின் பிரதான வீதிகளில் நடைபாதைக் கடைகளுக்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் தென்னி லங்கை வியாபாரிகளது நடைபாதைக் கடைகளுக்கான இடம் முற்ற வெளிப் பகுதியில் ஒதுக்கப்பட்டுள்ளது.

முற்றவெளிப் பகுதியில் வீதியின் இருபுறமும் நடைபாதைக் கடைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு போடப்பட்ட நடைபாதைக் கடைகளில் புடைவைகள் வாங்குவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். (வ-14)

## பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்க போதியளவு வாகன வசதி இல்லை

### நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் வடக்கு முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.30

மாகாண சபைகளில் தேவைக்கு அதிகமாக வாகனங்கள் உள்ள நிலையில். பிரதேச சபைகளில் ஒரேயொரு வாகனத்துடன் பணிகளை முன்னெடுக்க முடியாதுள்ளது. எனவே மேலதிக வாகனங்களைப் பெற்றுத் தருமாறு நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்த குமார் வடமாகாண முதலமைச்சரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் பிரதேச சபைக்கு என ஒரேயொரு வாகனமே வழங்கப்பட்டுள்ளது. பணி நிமித்தம் தவிசாளர் அதில் சென்றுவிட்டால் செயலாளர் செல்வதற்கு வாகனம் இல்லை. எனவே சிறப்பான பணியை சபைமுன்னெடுத்துச் செல்வதற்கு வாகனப் பற்றாக்குறையும் ஒரு வகையில் தடையாக உள்ளது. அநேகமான பிரதேச சபைகளிலும் வாகனப் பிரச்சினை உள்ளதை அவதானிக்க முடிகிறது. அதேநேரம் மாகாண சபைகளில் தேவைக்கு அதிகமாக வாகனங்கள் உள்ளன. எனவே அவற்றைப் பெற்றுத் தர வேண்டும் - என்றார். (4)

## மருதனார்மடம் பகுதியில் வர்த்தகரிடையே மோதல்

வலி.வடக்கு, ஒக். 30

தென்னிலங்கையில் இருந்து வந்து நடைபாதைக் கடைகள் அமைத்து வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கும், மருதனார்மடம், பகுதியில் அமைந்துள்ள கடை வர்த்தகர்களுக்கும் இடையே நேற்று செவ்வாய்க்கிழமை பகல் முறுகல் நிலை ஏற்பட்டது. எனினும் பொலிஸார் தலையிட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

யாழ்ப்பாணத்தில் தீபாவளிப் பண்டிகையையொட்டி தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகள் அதிகமானோர் கிராமங்கள், நகரங்கள் என்ற வேறுபாடுகள் இன்றி பாரவூர்திகள், 'படி'ரக வாகனங்கள், ஓட்டோக்கள் மற்றும் வீதியோரங்களிலும் கடைகளைப் பரப்பி வியாபாரத்தை மேற் கொண்டு வருகின்றனர்.

இதனால் அங்குள்ள வர்த்தகர்கள் வியாபார ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். (வ-86)

## கட்டுரைப் போட்டி

கைதடி, ஒக்.30

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் வைர விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக பாடசாலை அதிபர் எஸ்.சிவானந்தன் அறிவித்துள்ளார்.

பாடசாலையில் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிகளில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்கள் இந்தக் கட்டுரைப் போட்டியில் பங்கு கொள்ளலாம். (வ-288)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 ★ 08 ★ 1928
இறப்பு 05 ★ 11 ★ 2007

அமரர்

### வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்



திதி: (30.10.2013) புதன்கிழமை

தெய்வமாய் நின்று எம்மை
வழி நடத்திய எமது குடும்பத்தலைவனே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்

சேர் லேன், திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். 021 320 6334

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### இரத்தினவேல் வேதரத்தினம்



அளவெட்டி வடக்கு, கூத்தன் சீமாவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினவேல் வேதரத்தினம் 28.10.2013 திங்கட்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாதஸ்வர வித்துவான் இரத்தினவேல் அவர்களின் பாரியாரும், கேதீஸ்வரன்(நாதஸ்வரம்), ஞானசம்பந்தன் (நாதஸ் வரம்), காலஞ்சென்ற விக்கினேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருள்மொழி, புவனேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், தர்சினி பிரதாபன் (கனடா),ஜனனி பாலமுருகன் (லண்டன்) பிரணவாகரன்,வேலதிபன், வர்ஷினி ஆகியோரின் பேர்த்தியும், பிரவீன், ஜஸ்வின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அளவெட்டி வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று(29.10.2013) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூத்தன் சீமா,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
077 725 0920, 075 597 7246

(39572)(5.6.3)

தகவல்:
இ.கேதீஸ்வரன்,
இ.ஞானசம்பந்தன்

### திருமதி பரிபூரணம் வெற்றி உடையார்



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பண்ணாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரிபூரணம் வெற்றி உடையார் நேற்று (29.10.2013) செவ் வாய்க் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென் சனியர் மயில்வாகனம் பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகளும் அண்ணாவியார் பொன் னையா வெற்றி உடையார் அவர்களின் மனைவியும், சரஸ் வதி (சுவிஸ்), காலஞ்சென்ற குலவீரசிங்கம் மற்றும் திரவியம், சற்குணசிங்கம் (சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்க தலை வர்), துரைசிங்கம் (முன்னாள் பால்சபை உற்பத்தி முகாமை யாளர், மல்ரிசொப் உரிமையாளர்) ஆகியோரின் அன்பு சகோ தரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30/10/2013) புதன்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக அன்னாரின் பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

(39588)

தகவல்
சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### கணேசன் சிறிதரன் (கனடா)



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிடமாகவும் கொண்ட கணேசன் சிறிதரன் கடந்த (25.10.2013) வெள்ளிக் கிழமை கனடாவில் கால மானார்.

அன்னார் சங்கீதாவின் (யாழ்ப்பாணம்) அன்புக் கண வரும், கணேசன் சிவபாக்கியம் தம்பதியரின்(கொழும்பு) அன்பு மகனும், மனோ கரன்-கன கேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகரனின் (சுவிஸ்) அன்புச் சகோ தரனும், சாரங்கன், சுதர்சன், நிசாந்தன், தயாநிதி, ஆகி யோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.07, முஸ்லீம் கல்லூரி வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

தகவல்: சி.சங்கீதா
(மனைவி)

### கரைதுறைப்பற்றில் கருத்தமர்வு

முல்லைத்தீவு ஒக்.30 கரித்தாஸ் - கியூடெக் நிறவனத்தின் ஏற் பாட்டில் கருத்தமர்வு ஒன்று இடம் பெற்று ள்ளது.

கடந்த 28 ஆம் திகதி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத் தின் கேட்போர் கூடத் தில் முல்லைத்தீவு மேலதிக அரச அதிபர் சி.மோகன்ராஜ் தலைமையில் இந் தக் கருத்தமர்வு இடம்பெற்றது.

அரச உத்தியோகத் தர்களின் அடிப்படை உரிமைகள், பெண் களின் உரிமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக இங்கு கருத்துரைகள் வழங் கப்பட்டன. இதில் யாழ். மனித உரி மைகள் ஆணைக் குழுவின் இணைப் பாளர் ரி.கனகராஜ் கலந்து கொண்டு முக்கிய உரையை நிகழ்த்தினார்.

மேலும் கரைதுறைப் பற்று பிரதேச செய லர் பிரிவிலுள்ள கிராம அலுவலர்கள், மாதர் அமைப்புக் களின் பிரதிநிதிகள் எனப் பலர் இதில் கலந்துகொண்டுபயன் பெற்றனர்.

(க-433)

### பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.30 யாழ். நாவாந்துறை றோ.க வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வித் தியாலய பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப் பாளர் எஸ். உதயகுமா ரும், சிறப்பு விருந்தி னராக வளர்பிறை நிறுவனப் பணிப் பா ளர் அருட்தந்தை ரி.அமலதாஸும் கலந்து கொள்ளவுள் ளனர். (த-400)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 567 1111

## மரண அறிவித்தல்

### அப்பாக் குட்டி ஜெயபாலசிங்கம்



கொக்குவில் கிழக்கை, பிறப்பிடமாகவும், உடுவிலை வாழ்விடமாகவும், கொழும்பு மாளிகாவத்தையில் வசித்தவருமான அப்பாக்குட்டி ஜெயபாலசிங்கம் நேற்று முன்திகம் (28.10.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி-ஆச்சிப்பிள்ளை தம்பதி யரின் இளைய புதல்வனும், காலஞ்சென்றவர்களான கந்தையா, இராசையா சுபத்திரை (பொன்குட்டி) மற்றும் கனகம்மா இரத்தினம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நேசமலரின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஜெயரட்ணம் மலர்ச்சாலையில் நாளை (31.10.2013) வியாழக்கிழமை வைக்கப் பட்டு, இறுதிக்கிரியைகள் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுபத்திரை மஹால்,
புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
தொடர்பு: 077 674 2013

(சி/13469)
(10,14)

தகவல்: மைத்துனர்,
மருமக்கள்,
A.K. சின்னத்துரை

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா தம்பிராசா



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணையை வசிப்பிட மாகவும் கொண்ட நாகம்மா தம்பிராசா (29.10.2013) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார்தம்பிராசாவின் (பிரபல ரயர்க் கடை உரிமையாளர்) அன்பு மனை வியும், பொன்னுத்துரை -செல்லாச்சி தம்பதிரின் அன்பு மகளும், செல்லையா -தம்பிராசா தம்பதியரின் அன்பு மருமகளும், யோகராணி (ஜேர்மனி), யோகமலர், யோகேஸ்வரி, யோகம்மா (ஜேர்மனி) யோகராசா (ஜேர்மனி) ஆகி யோரின் அன்புத் தாயும், இராஜசிங்கம்(ஜேர்மனி), காலஞ்சென்ற காசிநாதர் மற்றும் குணசேகரம், ஸ்ரீராதாகிருஷ்ணன்(ஜேர்மனி), காலஞ்சென்ற தயாநிதி ஆகியோரின் அன்பு மாமியும், மயூரன் (நோர்வே), றஜித்தா (லண்டன்), கிரிசாந்தன் , நிசாந்தினி(ஜேர்மனி), தனுசிகா (ஜேர்மனி), லக்சிகா (ஜேர்மனி), ஜோதீசன் (ஜேர்மனி), யோநீதன் (ஜேர்மனி), மதனிகா, சிந்துஜா (லண்டன்), மசீபன் (லண்டன்), சகீர்ஷன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகீசா, அஸ் மிதா, அக்ஷ்சணா, யதுன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகைள் இன்று (30.10.2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். 077 8449231

தகவல்: பிள்ளைகள், மருமகன்.

## மரண அறிவித்தல்

### திருமதி இராசமணி மகாலிங்கம்



பத்தமேனி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலணி மகாலிங்கம் கடந்த 26.10.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை-தங்கம்மா (லண்டன்) அவர்களின் அன்பு மகளும், ஞானாமுர்தம் (லண்டன்), காலஞ் சென்ற யோகலிங்கம், மகேஸ்வரி, சறோஜினிதேவி (லண்டன்), சிவசுப்பிரமணியம் (லண்டன்), மகாதேவன் (லண்டன்), ஆகி யோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கதிர்காமு, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும், கதிர்காமு மகாலிங் கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்கான பாக்கியம், இராசம்மா, துரைச்சாமி, மற்றும் பரமேஸ்வரி, நல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், இரவீந்திரன் (ரவி-லண்டன்), ரஜனி (ரதி) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தி, பால்ராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், பிரசன்னா, பிறேம லோஜன், பிரியங்கா, அஞ்சலா, பகீதரன், பானுஜா, ரக்ஷியா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீனாட்சி அம்மன் கோயில் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(சி/13472)
(10,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி புனிதவதனி இராஜேந்திரகுமார்



யாழ்ப்பாணம் 2 ம் குறுக்குத் தெருவை பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப் பிடமாகவும் கொண்ட புனிதவதனி இரா ஜேந்திரகுமார் (26.10.2013) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந் தம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மக ளும் காலஞ்சென்ற பாலசிங்கம் தவ மணி தம்பதியரின் அன்பு மருமகளும் பாலசிங்கம் இராஜேந்திரகுமாரின் ( பொபி - செயலாளர், YMCA ) அன்பு மனைவி யும் டினே ஸ்குமார், நொய்லின் (லண் டன்) ஆகி யோரின் பாசமிகு தாயாரும் டிலோன் (லண்டன்), ராதா ஆகியோரின் மாமியாரும் ஜொஸ்லினின் (லண் டன்) பேர்த்தியும், ஜெயராஜா (நோர்வே காலஞ்சென்ற தர்மராஜா, யோக ராஜா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று 30.10. 2013 புதன்கிழமை அன்று பி.ப 3 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

(C/13477)

077 3144934, 021 2250420

தகவல்
குடும்பத்தினர்.

# யாழ்.தட்டாதெருச் சந்தியில் போக்குவரத்து அமளி



யாழ்.தட்டாதெருச் சந்தியில் காலை வேளையில் கடும் போக்குவரத்து நெரிசல்-நெருக்கடி. யாழ்.பிரதான முக்கிய சந்திகளில் இதுவும் ஒன்று. காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரையில்-பாடசாலை நாள்களில் சந்தி அல்லோலகல்லோலப்படும். போக்குவரத்து ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கப் பலரும் தவறுவதால், அந்த ஒரு மணி நேரமும் பயங்கரமாக இருக்கும். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற நிலைதான்....! போக்குவரத்துப் பொலிஸார் எவரும் அங்கு கடமையில் இருப்பதில்லை. காலையிலும், மதியவேளையிலும், மாலையிலும் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டால், விபரீதங்களைத் தவிர்க்கலாம் என்று பொதுமக்கள் தரப்பில் குரல் எழுப்பப்பட்டு வருகின்றது. (ஓ-21)

யாழ்ப்பாணம்.ஒக்.30

யாழ்ப்பாணம்- கே.கே.எஸ் வீதியில் விபத்து நடக்காத நாளே இல்லை என்று கூறலாம். நாளாந்தம் ஏதோ ஓர் இடத்தில் விபத்து நடந்து வருகிறது.

யாழ்-கே.கே.எஸ். வீதி தற்போது போக்குவரத்து நெரிசலான வீதியாக மாறியுள்ளது. வீதி புனரமைக்கப்பட்டு -'காப்பெற்' போட்ட பின்னர் வாகனங்கள் கண்மண் தெரியாமல் ஓடுகின்றன. யமனின் எருமை வாகனம் போல் இன்று 'டிப்பர்' மாறி விட்டது. அதே போன்று மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும் கூட கையில் கயிற்றுடன் உயிரைப் பறிக்கத் தயாராகவே ஓடித் திரிகிறார்கள்.

கே.கே.எஸ்.வீதியில் தட்டாதெருச் சந்தி தற்போது மிகவும் ஆபத்தான இடமாக மாறியுள்ளது. அடுத்த அபாயகரமான இடங்களாக மருதனார்மடம் சந்தி மற்றும் சுன்னாகம் பகுதிகள் மாறியுள்ளன. இந்தப் பகுதிகளில் நாள் தவறாமல் ஏதோ ஓரிடத்தில் விபத்து நடந்து விடுகிறது. அண்மைக்காலத்தில் குறிப்பிட்ட இந்த இடங்களில் நடந்த விபத்துக்களில் கடந்த சில மாதங்களில் மட்டும் 10 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். வேறு சிலர் அவயவங்களை இழந்து ஊனமுற்றுள்ளனர். இன்னும் பலர் படுகாயமுற்றுள்ளனர்.

தட்டாதெருச் சந்தி காலை வேளையிலும் பிற்பகல் பாடசாலைகள் முடிவடையும் நேரங்களிலும் மாலை வேளையும் போக்குவரத்து நெரிசல் மிக்கதாக மாறுகிறது.

காலை 7.30 மணி முதல் 9.30 மணி வரையில் வாகன ஓட்டம் அதிகம். அதுவும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லும் நேரங்களில் 7.30 மணி முதல் 8.30 மணிக்கு இடையில் அங்கும் இங்குமாக ஒரே வாகன ஓட்டம். பாடசாலைப் பிள்ளைகளின் சைக்கிள்கள், பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு அடுத்தடுத்து மோட்டார் சைக்கிள்கள், அலுவலகங்கள் மற்றும் தொழில் நிமித்தம் அதி வேகத்துடன் செல்லும் மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள், இவற்றுக்குப் போட்டியாக மினிபஸ்கள், போக்குவரத்துச் சபை பஸ்கள். இந்த வாகனங்களின் கண்மூடித்தனமான ஓட்டங்களை நேரில் பார்த்தால் உடல் புல்லரிக்கும். எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று அச்சம் தொற்றிக் கொள்ளும். அந்த நேரம் அந்தளவுக்கு பயங்கரமாக இருக்கும்.

**விபத்துக்கள் நடக்க காரணம் என்ன?**

•அதிவேகம் - விவேகமற்ற கண்மூடித்தனமான வேகம்.

•போக்குவரத்து விதிகள் குறித்து அறிந்திராமை அல்லது தெரிந்தும் அலட்சியப்படுத்தும் போக்கு.

•'பிறேக்' இல்லாமை மற்றும் உதிரிப்பாகங்கள் சீராகச் செயற்படாமை

•கல்வி அறிவுள்ளவர்களும் கூட போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் வாகனங்களைச் செலுத்துவது.

இவை கவலை தருபவையாகும். (ஓ)

# நல்லூர் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தை மாற்றியமைக்குக

## ஊழியர் பொதுச் சங்கத்தின் நல்லூர் கிளை வடமாகாண முதலமைச்சரிடம் கோரிக்கை

வலி.தென்மேற்கு ஒக்.30

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல வருடங்களாகத் திணைக்களத்தால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களால் வழி நடத்தப்பட்டு வருவதால், அங்கு கடமையாற்றும் பணியாளர்களுக்கு மட்டுமல்ல சங்கத்தின் வளர்ச்சிக்கும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே, சங்கத்தினதும் பணியாளர்களினதும் நலன்கருதிப் பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டி ஜனநாயக முறையில் இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கூட்டுறவு ஊழியர் பொதுச் சங்கத்தின் நல்லூர்க் கிளை வடமாகாண முதலமைச்சரைக் கோரியுள்ளது.

குறித்த சங்கத்தில் இடம்பெற்று வரும் ஊழல் தொடர்பில் கூட்டு றவு ஊழியர் தொழிற்சங்கத்தின் நல்லூர்க் கிளையின் உப தலைவரும் செயலாளரும் கையெழுத்திட்டு முதலமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நல்லூர் ப.நோ.கூ.சங்கம் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாகத் திணைக்களத்தால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. சங்கத்தை வழிநடத்தி வரும் அவர்கள், தங்களுக்குச் சார்பான தகுதியற்ற பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுத்துள்ளனர். சங்கத்தில் தகுதியான பணியாளர்கள் பலர் இருந்த போதிலும், அவர்கள் புறந்தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் அனைத்தையும் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, பொதுச் சபைக் கூட்டத்தை வைத்து ஜனநாயக ரீதியில் இயக்குநர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பணியாளர் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். சங்கத்தை நல்நிலைக்குக் கொண்டுவருவதற்கு வசதியாக, 65 வயது கடந்த நிலையிலும் பொது முகாமையாளராகக் கடமையாற்றுபவரை நீக்கி வேறொரு தகுதியான பொது முகாமையாளரை நியமிப்பதற்கான ஒழுங்குகளையும் மேற்கொள்ள வேண்டும்.-என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் வடமாகாண சபை தவிசாளர், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர், வடமாகாண கூட்டுறவு ஆணைக் குழுவின் செயலாளர், யாழ். அரச அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதனுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, தற்போது நல்லூர் ப.நோ.கூ.சங்கத்தின் இயக்குநர் சபை பிரதேச செயலாளர் செந்தில்நந்தனன் தலைமையில் சிறப்பாகவும், அதேவேளை இலாபத்துடனும் இயங்கி வருகின்றது.

இருந்த போதும் ஒவ்வொரு ப.நோ.கூ.சங்கங்களுக்குமான இயக்குநர் சபைகளைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்காக வாக்காளர் பட்டியல்களைத் தயார் செய்யும் நடவடிக்கைகளில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

முதலில் மருதங்கேணி ப.நோ.கூ. சங்கத்துக்கான இயக்குநர் சபைத் தெரிவும், அடுத்து நல்லூர் ப.நோ.கூ.சங்கத்துக்கான இயக்குநர் சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளன.

நல்லூர் ப.நோ.கூ.சங்கத்துக்கான பணியாளர்களை உள்ளக ரீதியாகவே நேர்முகப்பரீட்சைகள் மூலம் தெரிவு செய்துள்ளோம். அதில் எந்த விதமான குளறுபடிகளும் இடம்பெறவில்லை எனவும் உறுதிபடத் தெரிவித்தார். (வ-115-400)



உள்ளூராட்சி வாரத்தையொட்டி வேலணை பிரதேச சபையால் திங்கட்கிழமை சாட்டி கடற்கரையில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. வேலணை பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மரக்கன்றை நடுகின்றனர். (வ-7)

# பயிர்ச் செய்கைக் கடனுக்கு பயிர்க்காப்புறுதி அவசியம்

அச்சுவேலி, ஒக்.30

அரச வங்கிகளில் பருவகாலப் பயிர்ச்செய்கைக் கடன்களைப் பெற்றுக்கொள்வதானால், பயிர்க் காப்புறுதி செய்யப்பட வேண்டும். செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நில அளவைக் கருத்தில் கொண்டே கடன் தொகையும் தீர்மானிக்கப்படும் என கமத்தொழில் காப்புறுதி அதிகார சபையின் யாழ்-கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் து.கிரிதரன் தெரிவித்தார்.

காப்புறுதியை அடிப்படையாகக் கொண்டு பயிருக்கான கடன்வசதி வழங்குவது தொடர்பாகக் கமத்தொழில் காப்புறுதி அதிகார சபையின் யாழ்-கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நடைமுறை இந்த வருடம் பெரும்போகச் செய்கைக்கான கடன் வழங்கலில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது.


யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நெற் பயிர்ச்செய்கை, வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய் பயிர்ச் செய்கைகளுக்குக் காப்புறுதி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பயிர் வகைகளுக்கு ஏற்ப காப்புறுதித் தொகையின் அளவும், காப்புறுதி செலுத்தும் தொகையும் வரையறை செய்யப்பட்டுள்ளன. வெங்காயப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 95 ஆயிரம் ரூபாவுக்குக் காப்புறுதி மேற்கொள்ளப்படல் வேண்டும். அதன் 5 வீதத்தைக் காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். உருளைக்கிழங்குப் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவுக்குக் காப்புறுதி செய்யலாம். அதன் 5 வீதத்தை காப்புறுதிக் கட்டணமாக விவசாயிகள் செலுத்த வேண்டும்.

வங்கிகள் பருவகாலப் பயிர்ச் செய்கைக்கு கடன் வழங்கும் போது, காப்புறுதி செய்யப்பட்டிருப்பது மற்றும் செய்கை மேற்கொள்ளப்படும் காணியின் அளவு என்பனவற்றை அதிகாரிகள் குழு நேரில் பார்வையிட்டே கடன் தொகையைத் தீர்மானிக்கவுள்ளது. பயிர்கள் இயற்கை அழிவுக்கும் நோய் தாக்கத்துக்கும் உள்ளாகி சேதமடையும் போது காப்புறுதி அதிகாரசபை வழங்கும் தொகை மூலம் நிவாரணம் பெற முடியும். (வ-11)

# உரிமையைப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் வேண்டும்

## தமிழக மீனவர் தாக்கப்படும் விவகாரம்; மன்மோகனுக்கு மீண்டும் 'ஜெ' கடிதம்



தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலிதா தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக கடந்த 30 மாதங்களில் எழுதும் 32 ஆவது கடிதம் இது என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.

சென்னை, ஒக்.30

பாக்கு நீரிணை மற்றும் மன்னார் வளைகுடாவில் தமிழக மீனவர்களின் மீன் பிடிக்கும் உரிமையைப் பாதுகாக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.

இந்த விடயம் குறித்து இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

"அப்பாவித் தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுகின்றனர். மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்படுகின்றது. இவற்றால் மீனவர்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படையின ரின் தாக்குதலை, இந்திய கடற்படையினரும், கடலோர காவல் படையினரும் தடுப்பதில்லை.

இலங்கைக் கடற்படையினர் வசம் 75 தமிழக மீனவர்களும், தமிழக மீனவர்களுக்குச் சொந்தமான 35 படகுகளும் உள்ளன. இவ்வாறு தொடர்ச்சி யாக நடைபெறுவது ஆபத்தானது.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளான பாக்கு நீரிணை, மன்னார் வளைகுடா போன்ற பகுதிகளில் அவர்கள் மீன்பிடிப்பதற்கான உரிமையைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்திய மத்திய அரசை வலியுறுத்துகின்றேன்." என்று கூறப்பட்டுள்ளது. (ற)

## குண்டுவெடிப்பு சூத்திரதாரிகளை உடன் கைது செய்க- நிதிஷ்



பாட்னா, ஒக்.30

பீகார் தலைநகர் பாட்னாவில் இடம்பெற்ற குண்டுவெடிப் பின் சூத்திரதாரிகளை விரைந்து கைது செய்ய வேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தர விட்டுள்ளார் பீகார் மாநில முதல்வர் நிதிஷ்குமார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பீகாரில் பா.ஜ.க. பிரதமர் வேட் பாளர் நரேந்திரே மோடியின் பரப்புரைக் கூட்டம் நடை பெற்றது. அப்போது அருகருகே தொடர்ச்சியாக 7 இடங்களில் குண்டுகள் வெடித்தன. அதில் 6 பேர் உயிரிழந்ததுடன், 83 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தநிலையில் சட்டம்- ஒழுங்கு தொடர்பான உயர் நிலை ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் பாட்னா வில் நடைபெற்றது. அதில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைக ளில் தெரியவந்த விவரங்களை மாநில முதலமைச்சருடன் பொலிஸார் பகிர்ந்து கொண்டனர். அதன்போது நிதிஷ்குமார் இவ்வாறு உத்தர விட்டுள்ளார். (ற)

## அமைதிக்கு மோடியால் ஆபத்து



புதுடில்லி, ஒக்.30

இந்தியாவின் அமைதிக்கு நரேந்திர மோடி இடையூறாகச் செயற்படுகின்றார் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் பி.சி. சாக்கோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

"பீகார் குண்டு வெடிப்புச் சம்பவத்தைக் கடுமையாகச் சந்தேகிக்கின்றேன். பாரதிய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் மோடி நாடு முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு, மக்களின் சிந்தனையை மாற்றி, எதிர்மறையான சூழலை உருவாக்கி வருகின்றார். ஆனால் அரசியல் வன்முறையில் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படும் ஒரு கட்சியாகவே காங்கிரஸ் உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)

## காங்கிரஸ் கட்சிக்காக களமிறங்கார் சச்சின்



புதுடில்லி, ஒக்.30

காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் தேர்தல் பரப்புரையில் ஈடுபடுவார் என்ற கருத்துகள் முற்றிலும் தவறானவை என்று காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவை நியமன நாடாளுமன்ற உறுப்பினராக உள்ள சச்சின் எதிர்வரும் சட்டசபைத் தேர்தல்களில் காங்கிரஸை ஆதரித்துப் பரப்புரை மேற்கொள்ள வாய்ப்பு இருப்பதாகத் தகவல்கள் வெளியாகின. எனினும் அதைக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரும், இந்தியக் கிரிக்கெட் சபையின் துணைத் தலைவருமான ராஜீவ் சுக்லா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறும் போது,

"சச்சின் டெண்டுல்கர் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை செய்வார் என்ற தகவல்கள் அடிப்படை ஆதாரமற்றவை. அந்தத் தகவல்கள் முழுவதும் தவறானவை. கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருக்கும் போது அவர் பரப்புரையில் எப்படி ஈடு பட முடியும்" என்று கூறியுள் ளார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு அவர் காங்கிரஸுக் காகப் பரப்புரையில் ஈடுபடு வாரா என்று சுக்லாவிடம் கேட்டபோது, "எதிர்காலத்தை எம்மால் கணிக்க முடியாது. ஓய்வுக்குப் பிறகு அவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை அவர் செய்யட்டும். நாம் அவர் மீது எதையும் திணிக்கக் கூடாது" என்று தெரிவித்துள்ளார் அவர். (ற)

## வெள்ளப் பாதிப்புகளை பார்வையிட்டார் சந்திரபாபு நாயுடு

விசாகப்பட்டினம், ஒக்.30

ஆந்திராவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு நேரில் பார்வையிட்டார்.

விசாகப்பட்டினம் மாவட்டத் தில் வெள்ளத்தால் சூழப்பட் டுள்ள கிராமங்களுக்குச் சென்ற அவர், பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது மாநில அரசு, எந்த நிவாரண நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என சந்திரபாபு நாயுடுவிடம் கிராம மக்கள் முறையிட்டனர். (ற)

# மரண அறிவித்தல்கள்

## தம்பியப்பா தில்லைநாயகம்

**(தில்லைநாதன்- மண்டைதீவு)**



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பியப்பா தில்லைநாயகம் நேற்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா-வேதநாயகி தம்பதியரின் அன்பு மகனும், நாகநாதன்-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பொற்சிலை,வாணி, கோணேஸ்வரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சக்திவேல், தாமோதரம் பிள்ளை(ஓய்வுபெற்ற ஆசிரியர், அருணோதயக் கல்லூரி), பரம்சோதி (ஓய்வு பெற்ற தபாலதிபர்), காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தெட்சணாமூர்த்தி, (முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்) மற்றும் சிதம்பரநாதன், காங்கேச பிள்ளை (ஓய்வுபெற்ற அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை), ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஞானசேகரம், (ஆசிரியர்,கொக்குவில் இந்துக் கல்லூரி), சிதம்பரநாதன், சுதாயினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், திருநாவுக்கரசு மற்றும் ஜெயலட்சுமி, அன்னலட்சுமி, புஸ்பவதி(பவளம்), குணேஸ்வரி,காலஞ்சென்ற தயாபரன் மற்றும் தியாகேஸ்வரி, ஜோதீஸ்வரி, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும், காலஞ் சென்ற நடனசபாபதி மற்றும் நித்தியா, புலேந்திரன் ஆகியோரின் சகலனும் விஜித்பாரத், விஜித்சரண்யா, லதாங்கி, சிவகணேசன், பாலகணேசன், சுகினா, சுகிர், சுரேணா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(31.10.2013) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

359/34, நல்லலெட்சுமி அவனியூ,
கோயில் வீதி, நல்லூர்.

(39576)(5.6)

தகவல்:
குடும்பத்தினர்.

## சபாரத்தினம் குகபாலன்



மடத்தடி, மாவிட்டபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிட மாகவும் இலக்கம் 110, முதலாம் ஒழுங்கை, திருநாவற்குளம், வவுனியாவை தற்காலிக வசிப்பிட மாகவும் கொண்ட சபாரத்தினம் குகபாலன் (G.K- முச்சக்கரவண்டி உரிமையாளர்) 27.10.2013 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் -திருமணி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், நந்தினியின் அன்புக் கணவரும், கனகசபை, காலஞ்சென்ற கெங்காதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ஸ்ரீமுருகன், பத்மாவதி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், குகரூபன், பார்த்தீபன், கீர்த்தனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுகந்தினி, சாந்தினி, மாலவன், லஜிவினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (31.10.2013 ) வியாழக்கிழமை மு.ப.9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.110, முதலாம் ஒழுங்கை,
திருநாவற்குளம், வவுனியா.

(39569)(3.6.4)

தகவல்:
குடும்பத்தினர்.

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 20 . 06 . 1950

மறைவு 16 . 11 . 2006

**திருமதி நகுலேஸ்வரி இராகவன்**

(ஆசிரியை-யாழ். இந்து மகளிர் கல்லூரி)

திதி: அபரபக்க ஏகாதசி (30.10.2013)

பாசமுள்ள மனையாளாகி பண்புடைய துணையாளாகி
நேசமது நெஞ்சில் நிறைந்த நிறைமதியாம் நகுலேஸ்வரி
வாசமணம் பரப்பி வண்ணமலர் இதழுதிர்ந்தது போல்
பாசம் துறந்து ஏழாண்டு பறந்திட பரிதவிக்கின்றேன்

அம்பலவாணர் பாதை,
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

அன்புடன் நினைவு கூரும்:
கணவர் மற்றும்
குடும்பத்தினர்.

(33565)(10.6.3)

## இடைக்கால அரசு வேண்டி பங்களாதேஷில் போராட்டம்



டாக்கா, ஒக்.30
நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பதாக பங்களாதேஷில் இடைக்கால அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று கோரி அந்நாட்டு எதிர்க்கட்சி கள் நடத்தும் முழு அடைப்புப் போராட்டம் 2ஆவது நாளாகவும் தொடர்கின்றது. அந்தப் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறைகளால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.
எனினும் எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை நிராகரித்துள்ள அந்நாட்டுப் பிரதமர் ஷேக் ஹசீனா, "மக்களால் தேர்வு செய்யப்படாதவர்கள் தேர்தலை கண்காணிப்பது முறையானது அல்ல" என்று தெரிவித்துள்ளார். அதற்கு கண்டனம் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள், "தற்காலிக அரசு அமைக்கப்படவில்லை என்றால் தேர்தலில் பங்கேற்க மாட்டோம்" என்று தெரிவித்துள்ளனர்.
இந்த நிலையில் நாட்டில் வன்முறைகள் அதிகரித்துள்ளதை அடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

# புகலிடம் கோருவோரின் உரிமைகள் உதாசீனம்

## ஆஸி. அரசைச் சாடுகின்றது அந்நாட்டு புகலிட செயற்பாட்டுக் குழு



மெல்போர்ன், ஒக்.30
ஆஸ்திரேலிய அரசு புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மதிப்பதில்லை என்று அந்த நாட்டு புகலிடச் செயற்பாட்டுக் குழு குற்றஞ் சாட்டியுள்ளது.
புகலிடக் கோரிக்கையாளர்களின் உரிமைகளை மதிக்க வேண்டும் என்று அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான முகவர் நிறுவனம் வலியுறுத்தியிருந்த நிலையிலேயே அந்தக் குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அந்தக் குழுவின் உறுப்பினர் ட்ரவர் க்ரான்ட் "ஆஸி. பிரதமர் டோனி அப்போட் தலைமையிலான புதிய அரசு புகலிடக் கோரிக்கையாளர்களின் அடிப்படை உரிமைகளை உதாசீனம் செய்கின்றது. புகலிடக் கோரிக்கையாளர்கள் காலவரையறையின்றி தடுத்து வைக்கப்படுவதன் மூலம் உள மற்றும் உடல் ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றன. எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் சுமத்தாது, எதற்காக தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றோம் என்பதனையும் அறியாது புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்பப்படுகின்றனர்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## போப்பாண்டவரை பின்தொடரும் ஒரு கோடி பேர்

நியூயோர்க், ஒக்.30
போப்பாண்டவர் பிரான்சிஸ் தனது 'டுவிட்டர்' சமூக வலைத்தளக் கணக்குகளில் ஒரு கோடி பின்தொடர்வோரைக் கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.
அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை, 'டுவிட்டர்' இணையத்தளத்தில் அதிக பின்தொடர்வோரைக் கொண்டுள்ள பிரபலங்கள் குறித்து ஆய்வு நடத்தியது.
அந்த ஆய்வில் பிரபல பொப் பாடகர்கள் ஜஸ்டின் பீவர், கேத்தி பெரி மற்றும் லேடி காகா ஆகியோர் 4 கோடிக்கும் அதிகமான ரசிகர்களை கொண்டுள்ளதாகவும், அவர்களுக்கு அடுத்த இடத்தில் போப்பாண்டவர் பிரான்சிஸ் உள்ளார் என்றும் கூறப்படுகின்றது.
போப்பாண்டவர் பிரான்சிஸ்சுக்கு 'டுவிட்டர்' இணையத்தளத்தில் லத்தீன், போலிஷ், அரபிக் மற்றும் பல மொழிகளில் ஒன்பது கணக்குகள் உள்ளன. அனைத்துக் கணக்குகளிலும் சேர்த்து, ஒரு கோடிக்கும் அதிகமானோர் அவரை பின்பற்றுகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## முடக்கப்பட்ட ஒபாமாவின் பக்கங்கள்

நியூயோர்க், ஒக்.30
அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் 'டுவிட்டர்' மற்றும் 'பேஸ்புக்' பக்கங்கள் நேற்றுமுன்தினம் பலமணி நேரம் முடக்கப்பட்டன. சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆதரவாளர்களாலேயே குறித்த பக்கங்கள் முடக்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.
இந்தப் பக்கங்களை பார்வையிடுவதற்காக இணைப்புகளை சொடுக்கியவர்கள் சிரியாவின் மின்னணு இராணுவம் என்ற இணையத்தளத்துக்கு திசை திருப்பப்பட்டனர். அந்த இணையத்தளத்தில் "உங்கள் நுழைகைக்கு நன்றி! ஒபாமாவின் அபாயகரமான பரப்புரை இணைப்புகளை நாங்கள் முடக்கியுள்ளோம்" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.
ஒபாமாவின் சமூக வலைத்தளப் பக்கங்கள் சில மணி நேரங்களுக்கு முடக்கப்பட்டன என்பதை வெள்ளை மாளிகை அதிகாரிகளும் ஒப்புக்கொண்டுள்ளனர். "அவை முடக்கப்பட்டபோதும் அவற்றை நிர்வகிக்கும் கட்டுப்பாடு அவர்களின் கைகளுக்குப் போகவில்லை. முடக்கப்பட்ட இணைப்புகளை சீரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன" என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (ற)





## சுழன்றடித்தது 'ஜூட்': 13 பேர் சாவு

லண்டன், ஒக்.30
பிரிட்டனையும் பிரான்ஸையும் தாக்கிய 'சென்.ஜூட்' புயலால் 13 பேர் உயிரிழந்துள்ளதுடன் 75 ஆயிரம் வீடுகள் இருளில் மூழ்கியுள்ளன.
பிரிட்டனையும் பிரான்ஸையும் தாக்கிய 'சென்.ஜூட்' புயலால் அந்த நாடுகள் ஸ்தம்பித்தன. பிரான்சின் வடக்குப் பகுதியில் மணிக்கு 139 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கியது 'சென்.ஜூட்'. அதனால் மின் விநியோகம் முற்றாகத் தடைப்பட்டது.
பிரிட்டனில் மணிக்கு 159 கிலோ மீற்றர் வேகத்தில் மழையுடன் கூடிய புயல்காற்று வீசியது. பிரிட்டனில் புயல் தாக்கியதில் 3 பேர் உயிரிழந்தனர். பிரிட்டனின் ஹீத்ரூ விமான நிலையத்தில் 130 விமானங்கள் அவசரமாகத் தரையிறக்கப்பட்டன. கடலில் கொந்தளிப்பு அதிகம் இருந்ததால் பிரிட்டன் கப்பல் சேவையும் முழுமையாக இரத்து செய்யப்பட்டது. இந்தப் புயலால் ஜேர்மனியில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளில் மொத்தம் 13 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ற)

## லிபியாவில் ரூ.300 கோடி துணிகரக் கொள்ளை

சிர்த்தே, ஒக்.30
லிபியாவில் சிர்தே விமான நிலையத்துக்கு லிபியா நாட்டு பணம் மற்றும் வெளிநாட்டுப் பணம் என்பவற்றை ஏற்றி வந்த வாகனத்தை வழிமறித்த கொள்ளையர்கள் துப்பாக்கி முனையில் வாகனத்தில் இருந்த 300 கோடி ரூபாவைச் சுருட்டிக் கொண்டு தப்பியோடியுள்ளனர்.
சுமார் 10 பேர் கொண்ட குழு இந்த துணிகர கொள்ளையில் ஈடுபட்டுள்ளது. இது குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்று லிபியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## சிக்கியது டயானாவின் நாள்குறிப்பு: அம்பலமாகின்றன இரகசியங்கள்



லண்டன், ஒக்.30
பிரிட்டன் இளவரசி டயானாவின் இரகசிய நாள்குறிப்பு ஒன்றில் எழுதப்பட்டிருக்கும் தகவல்கள் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.
டயானா தனது காதலர் பருக்டோடியுடன் காரில் பயணித்த போது பாரிஸில் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.
இந்நிலையில் டயானாவின் இரகசிய நாள்குறிப்புக் குறித்து தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.
தனது மகன்களான இளவரசர்கள் வில்லியம் மற்றும் ஹரிக்கு குதிரையேற்றப் பயிற்சி அளித்த குதிரையேற்ற வீரர் ஜேம்ஸ்ஹெவிட்டுடன் டயானா பழகியுள்ளார். அதேவேளை ரக்பி விளையாட்டு வீரர் வில் கோர்லிங் மீதும் டயானாவுக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. அவர்கள் ஹோர்பர் கிளப் ஜிம்மில் தான் முதன்முதலாக சந்தித்தனர். தனக்கு ரக்பி விளையாட தனியாக பயிற்சி அளிக்குமாறு டயானா வில்லிடம் கேட்டுள்ளார்.
இஸ்லாமிய கலை நிபுணரான ஆலிவர் ஹோயருடன் டயானாவுக்கு தொடர்பு இருந்தது. டயானாவுக்கு டாக்டர் ஹஸனத் கானுடனான உறவு உடல் உறவின் அடிப்படையிலானது அல்ல, அவர்களிடையே நெருங்கிய நட்பு இருந்தது. இளவரசர் சார்ல்ஸுக்கு என்ன பிடிக்கும், எந்தெந்த பெண்களுடன் அவருக்கு தொடர்பு இருந்தது போன்ற பரபரப்பு தகவல்கள் அந்த இரகசிய நாள்குறிப்பில் உள்ளனவாம்.
அதன் காரணமாகவும் டயானா கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது. (ற)

# ஒரு மாத காலத்தில் 6 கோடி மக்கள் 'என்.எஸ்.ஏ' கண்காணிப்பில்

லண்டன், ஒக்.30
ஒரு மாத காலத்தில் 6 கோடிக்கும் அதிகமான ஸ்பெயின் மக்களின் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்க உளவுநிறுவனம் (என்.எஸ்.ஏ.) ஒட்டுக் கேட்டுள்ளது என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியாகியுள்ளது.
உலகின் முக்கிய 35 நாட்டு தலைவர்களின் தொலைபேசி உரையாடல்களை அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனம் ஒட்டு கேட்டு வருகின்றது என்ற தகவலை அமெரிக்க தேசிய உளவு நிறுவனத்தின் முன்னாள் பணியாளர் எட்வேர்ட் ஸ்நோடென் பகிரங்கப்படுத்தியிருந்தார். அவரால் அண்மையில் வெளியிடப்பட்ட ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சலா மார்கெல்லின் கைத்தொலைபேசி உரையாடல்கள் ஒட்டு கேட்கப்பட்டமைக்கான ஆதாரங்களை அடுத்து பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. உலக நாடுகள் பலவும் அதைக் கண்டித்துள்ளதுடன் ஜேர்மனி அதுகுறித்து அமெரிக்காவிடம் விளக்கம் கோரியுள்ளது.
இந்தநிலையில் ஸ்பெயினில் ஒரு மாதத்தில் மட்டும் 6 கோடிக்கும் அதிகமானவர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டமைக்கான ஆதாரம் வெளியாகியுள்ளது. 'எல் முன்டோ' என்னும் ஸ்பெயின் பத்திரிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. ஸ்பெயினின் வெளியுறவுத்துறை அதிகாரிகள், ஸ்பெயினுக்கான அமெரிக்கத் தூதர் ஜேம்ஸ் கோஸ்டாசை சந்திப்பதற்குச் சிலமணி நேரத்துக்கு முன்னர் அந்தத் பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
வெளியிடப்பட்ட ஆதாரங்களில் தொலைபேசி எண் யாருடையது என்ற முகவரியுடன், அவர்கள் எங்கிருந்து, யாருக்கு, எந்த இடத்திற்கு, எவ்வளவு நேரம் பேசியிருக்கிறார்கள் என்பதும் பேசியவர்களின் முகவரியுடன்விரிவானவரைவு உள்ளது என்று கூறப்படுகின்றது.
இதுகுறித்து கவலை வெளியிட்டுள்ள ஸ்பெயின் பிரதமர் மரியனோ ராஜாய், "ஸ்பெயினில் தொலைபேசி ஒட்டு கேட்பது என்பது சட்டப்படி தண்டனைக்குரிய குற்றம். இது ஸ்பெயினது தனிப்பட்ட பிரச்சினை. அதனைக் தனியாகக் கையாளுவோம். பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியுடன் கூட்டு நடவடிக்கை எதுவும் எடுக்கும் திட்டமில்லை" என்று தெரிவித்துள்ளார்.

> இந்த விவகாரம் தொடர்பாக ஸ்பெயினுக்கான அமெரிக்கத் தூதரிடம் உடனடியாக விளக்கமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. குறித்த தகவல்கள் உண்மையாக இருக்குமானால் அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை ஒருபோதும் ஸ்பெயின் ஏற்றுக்கொள்ளாது.
>
> *- ஸ்பெயின் அமைச்சர் இனிகோ மெண்டெஸ்*

இரகசியத் திட்டங்கள் குறித்து வெளியாகும் ஆதாரங்களால் அமெரிக்கா கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது. தற்போது ரஷ்யாவில் தங்கியிருக்கும் எட்வேர்ட் ஸ்நோடனை தம்மிடம் ஒப்படைக்குமாறு அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது. (ற)

# பன்னாலை, தெல்லிப்பழை

# அருள்மிகு சிவ பூதவராயர் திருக்கே

# புனருத்தாரண பஞ்ச குண்டபக்ஷ அஷ்

# மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் -30.

**மஹா கும்பாபிஷேக காலம்: இன்று (30.10.2013) புதன்கிழமை நேரம்: மு.ப.10 ம**

### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசி



இயற்கை வளமும் ஆன்மீக பலமும் கொண்ட பக்தர்கள் வாழும் புண்ணிய பூமியாகிய பன்னாலையம்பதியில் அருளாட்சி புரிந்து கொண்டிருக்கும் சிவபூதவராயர் சுவாமியின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் அனைத்து மக்களையும் பக்திப் பரவசத்தில் ஆழ்த்தும் ஒரு நிகழ்வாக அமைந்துள்ளது.

அனைத்து இயற்கை சக்திகளையும் ஜடப்பொருளில் உள்ள நீரில் அடக்கி மந்திர உச்சாடனத் துடன் விம்பத்தில் அபிஷேகிப்பதால் இறைவனின் தன்மைகள் விம்பத்தில் ஒளிர்கின்றன. மகா கும்பாபிஷேகத்தின் குறிக்கோள் இதுவேயாகும்.

சாந்தியும் சமாதானமும் நிலவி எல்லோரும் இன்பமாக வாழ எல்லாம் வல்ல சிவபூதவராயர் சுவாமி அருள் புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

பிரதிஷ்டா பிரதம குரு
கிரியா திலகம் சிவஸ்ரீ பரமசிவ சிவங்கரக் குருக்கள்
அம்பலவாண வேதவிநாயகர் தேவஸ்தானம், தாவடி.

### நித்திய ஆலய பூசகரின் ஆசியுரை



பன்னாலையிலிருந்து அருளாட்சி செய்து வரும் சிவபூதவராயர் ஆலயமானது இருநூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த ஆலய மாகும். இந்த ஆலயம் 1945,1985, 2001 ஆகிய ஆண்டுகளில் கும்பாபி ஷேகம் நடைபெற்று தற்போது 2013ஆம் ஆண்டு நான்காவது முறையாக கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

இந்த ஆலயம் கடந்த 2013ஆம் ஆண்டு தை மாதம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் நாளொரு வண்ணமாக திருப்பணி சிறப்புற இனிதே நிறைவேறி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. உண்மை யிலேயே மகிழ்ச்சி தரக் கூடியது என்பதில் ஐயமில்லை.

இந்தத் திருப்பணி இனிதே விரைவில் நிறைவுபெற அயராது அல்லும் பகலும் உழைத்த நிர்வாக சபையினருக்கும் மற்றும் இறை தொண்டர்களுக்கும் நிதி வழங்கி யோர் மற்றும் இத் தெய்வீகப் பணியில் நேரடியாக, மறைமுகமாக அர்ப்பணிப்புடன் பணி புரிந்தோர் யாவருக்கும் எல்லாம் வல்ல சிவபூதவராயப் பெருமானின் திருவருள் என்றென்றும் கிடைக்க வேண்டுமென்று திரிமன சுத்தியுடன் பெருமானின் திருவடித் தாமரைகளைப் பணிந்து கும்பாபிஷேகம் சிறப்புற அமைய ஆசிகூறி நிறைவு செய்கின்றேன்.

ம.மகேந்திரசர்மா
ஆதீன கர்த்தா, வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்.

### புதுப்பொலிவு பெறும் சிவபூதவராயர் ஆலயம்



சிவபூமி எனத் திருமூல நாயனாரால் புகழப்பட்ட ஈழமணித் திருநாட்டின் சிரசென.விளங்கும் யாழ்ப்பாண நகரிலே சைவமும், தமிழும் வளர்ந்தோங்கும் பன்னாலைப் பதியிலே தம்மை மெய்யன்போடு வேண்டி நிற்கும் பக்தர்களின் குறைகள் நீக்கும் கருணைக் கடலாகிய சிவபூதவராயர் ஆலயம் புனராவர்த்தனம் செய்யப்பட்டு இன்று மஹா கும்பாபிஷேகப் பெரும் சாந்தி விழா நடைபெறுகின்றது. அடியார்கள் எல்லோருக்கும் மிகுந்த மகிழ்சி யும், ஆனந்தத்தையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாலயம் முன்பிருந்ததைவிட மிகவும் அழகான கட்டுமானத் துடன் புதுப்பிக்கப்பட்டு சுற்றுப் பிரகாரக் கொட்டகை போடப்பட்டு பரிவார மூர்த்திகளாகிய விநாயகப் பெருமானுக்கும் பாலமுருகனுக்கும் புதிதாகக் கோயில் கட்டி புதுப்பொலிவுடன் மிகவும் அழகாகக் காட்சி தருகின்றது. அதுமட்டுமல்லாமல் வேறு எந்த ஆலயத்திலும் இல்லாத மிகவும் அற்புதமான ஊஞ்சலும் அமைக் கப்பட்டுள்ளது. இந்த ஊஞ்சலிலே காளி அம்பாள் அமர்ந்து ஆடுகின்ற புதுமையும் இவ்வாலயத்தின் தனிச் சிறப்பாகும். இப்படிப் பல சிறப்புக்களைக் கொண்ட வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயம் இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு மஹா கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழா நடைபெறுகின்றது. இந்த மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு உதவி புரிந்த அனைவருக்கும் எம்பெருமானின் திருவருட்கடாஷம் கிடைக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"சுபமஸ்த்து"

பிரம்மஸ்ரீ சதாசிவ சுகுமாரக்குருக்கள், (ஆலய பிரதம குருக்கள்)

### குடமுழுக்கு காணும் சிவபூதவராயரின் அருள் பரவ இருள் அகலும்

சிவபூமி என திருமூலரினால் சிறப்பித்துக் கூறப்பட்ட ஈழவள நாட்டின் வட பால் பொன் விளையும் பூமியாக சகல வளங்களையும் கொண்ட (வேளாண்மை முதல் கல்வி வரை) பன்னாலையம்பதியில் கோயில் கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கின்ற சிவபூதவராயருக்கு இன்று குடமுழுக்கு இத்திரு நன்நாளில் விழா சிறப்புறவும் திருவருள் பெருகவும் சிவபூதவராயரை வேண்டி வணங்கி ஆன்மீகம் தழைத் தோங்கவும் வாழ்வு சிறப்புறவும் வாழ்த்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை சிவபூதவராயர் வழங்கியமையை நினைந்து புளகாங்கிதம் அடைகின்றேன்.

இவ் ஆலயத்தில் வேறு எங்குமில்லாத சிறப்பு திருவெம்பாவை நிகழ்விற்கு ஒரு சபை அமைத்து அவர்கள் திருவெம்பாவை பத்து நாள்களும் பன்னாலைக் கிராமம் முழுவதும் அதிகாலை எழுந்து புனித நீராடி ஆலயங்கள் சென்று தேவார பாராயணம் சங்கு, சேமக்கலம் ஒலிக்கச் செய்து வந்து பத்தாம் நாள் திருவாதிரை அன்று திரு ஊஞ்சலுடன் நிறைவு பெறச் செய்து வருவதேயாகும். இந் நிகழ்வு இன்றும் சிறப்புற நடைபெற்று வருகின்றது எனில் இவ்வூர் மக்களின் ஆன்மீகத்தைக் கூறவும் வேண்டுமா? சிவபூதவராயரின் வரலாற்றில் நான்காவது குடமுழுக்காக இடம்பெறும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்து அவனருள் பெற்று உய்வோமாக!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ச. விநாயகரட்ணம், இளைப்பாறிய ஆசிரியர்.

### ஆசியுரை



பன்னாலை சிவபூதவராயர் திருக்கோயில் சுமார் நூறு வருட கால பழைமை வாய்ந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடிபட்டு உடைபட்டுக் கிடந்த கோயிலை அடியார்கள் புனருத்தாரணம் செய்து மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். கோயிலில்லா ஊர் பாழ் என்றார் ஔவையார். எமது கோயில்கள் இறை சக்தி நடமாடும் இடங்களாக மாற வேண் டும் எனில் மக்கள் நடமாட்டமும் அவர் தம் மன ஈடுபாடும் அக் கோயில்களில் பிரதிபலிக்க வேண்டும். சின்னா பின்னமாக சிதறி நின்று காட்சி அளிக்கும் கோயில்கள் யாவும் இனியேனும் புனருத்தார ணம் செய்யப்பட்டு பூஜைகள் தவறாது நடைபெற நாம் எம்மால் ஆனதைச் செய்ய வேண்டும். ஆலயங்கள் அழகுற ஆன்மீக ஒளி வீசத் தொடங்க எங்கள் வாழ்க்கையும் மறுமலர்ச்சி அடையும். கடந்த கால நிகழ்வுகள் எம்மை பரிதவிப்புக்கு உண்டாக்கியுள்ளன. அந்த மனோநிலை மாற அமைதி எமது மனங்களில் நிறையும் இறைவனின் அன்புக் கதிர்கள் எம் மீது படர வேண்டும். கோயில்கள் தான் எம் மனங்களை அமைதியடைச் செய்யக் கூடிய தன்மை வாய்ந்தன. அந்த விதத்தில் பன்னாலை சிவபூதவராயர் திருக்கோயில் ஒரு முன் மாதிரியாகத் திகழ்கின் றது. அடியார்கள் ஆர்வம் அக் கோயிலை மகா கும்பாபிஷேகம் வரை கொண்டு வந்து விட்டது.மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற இறைவனை வேண்டி நிற்கின்றேன். அவனின் ஆசி எல்லோருக்கும் கிட்டுவதாக! அன்பே சிவம்.

க.வி.விக்னேஸ்வரன்
முன்னாள் நீதியரசர்,
வடமாகாண முதலமைச்சர்.

### மஹா கும்பாபிஷேகம் சிறக்க நல் வாழ்த்துக்கள்



தெல்லிப்பழை தென்மேற்கில் அமைந்த பன்னாலைக் கிராமத்தில் எழுந்தருளி நல்லருளாட்சி புரியும்திருவருள் மிகு சிவபூதவராயர் சுவாமிக்கும் ஏனைய பரிவாரத் தெய்வங்களுக்கும் இன்று திருக்குடமுழுக்கு விழா நிகழவிருப்பதால் திருப்பணித் தொண்டர்களுக்கும் புனரமைப்புப் பணி உபயத்தவர் களுக்கும் சகல அடியார்களுக்கும் பன்னாலை சிவபூத வராயர் ஆலய பரிபாலன சபையினர்க்கும் நிர்வாகத் தினர்க்கும் திருவிழா உபயத்தவர்களுக்கும் அவ்வூர் அயலூர்க் கிராம மக்களுக்கும் பக்தர்களுக்கும் சிவபூதவராய சுவாமியின் திருவருள் நல்க எமது நல் வாழ்த்துக்களால் வாழ்த்துகின்றோம். தொடர்ந்து வரும் மண்டலாபிஷேக விழா பூர்த்தி செய்து சிறப்பித்து வாழ் வாங்கு வாழ்வீர்களாக

சோமசுந்தரம் சுகிர்தன்
தவிசாளர்,வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

### வலிகாமம் ...

ஈழமணித் தி...
தில் தமிழ் வள...
யப் பெற்ற பன்...
அருள்மிகு சிவ...
இன்று நடைபெ...
வலிகாமம் வ...
பாட்டுத் தலங்...
நாட்டின் அசாத...
தற்போது புனரு...
மீண்டும் புதுப்...
மேலும் இப்...
நிர்வாகத்தினர்...
நன்றியைத் தெ...
மஹா கும்பாபி...
சிறப்பும் கல்வி...
பெருமானை ...
வாழ்த்துகின்றே...



சிவ...
பெ...
ப...
ப...
நித்...
நி...
நாகதம்பி...
சிவபூ...



சி...
பா...
நா...
நா...

★★★★★★★★★★★★★★★★★ விழா சிறப்புற வா...


சகலவிதமான மரக்கன்று வகைகள் உற்பத்தியாளர், விற்பனையாளர்.
**Agro Care Nursary**
(உரிமையாளர்: இ.சுந்தரலிங்கம்
(மீள் எழுச்சித் திட்டப் பயனாளி)
பன்னாலை,
தெல்லிப்பழை.
தொ.பே.: 077 868 9728

**ரஞ்சனாஸ் புடைவையகம்**
புடைவைத் தினிசுகளின் சங்கமம்
இல.4 A, மத்திய சந்தை,
சுன்னாகம்.
தொ.பே.:
021 224 0278

சகலவிதமான கட்டடப் பொருள்கள் மற்றும் காகிதாதிகளை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
**சாய் ராம் ரேட் சென்ரர்**
அம்பனை சந்தி, பன்னாலை,
தெல்லிப்பழை.
கிளை நிறுவனம்:
கே.கே.எஸ். வீதி,
தெல்லிப்பழை.

**சீலன்**
பல்பொருள் வாணிபம்
சிறுவிளான்,
பண்டத்தரிப்பு வீதி,
இளவாலை.

கட்டடப் பொருள்களை பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
**கஜராம் ஹார்ட்வெயர்**
பண்டத்தரிப்பு வீதி, கூத்தன் சீமா,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
தொ.பே.:
021 320 2380

**Siva...**
**Multi T...**
**Rice...**
பன்ன...
தெல்லிப...
தொ...
021 72...

ஒடர் நகைகள் உத்தரவாதத்துடன் குறித்த தவணையில் செய்து தரப்படும்.
அழகிய தங்க நகைகள் என்றதும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
**லக்ஷகி நகைத் தொழிலகம்**
காங்கேசன்துறை வீதி,
(துர்க்கை அம்மன் கோயில் அருகில்)
தெல்லிப்பழை.
தொ.பே.:077 617 6462

உங்கள் இல்லங்களில் இடம்பெறும் நிகழ்வுகள் எதுவானாலும் டிஜிற்றல் முறையில் போட்டோ அன் வீடியோ பிடித்திட நாடவேண்டிய ஒரே இடம்
**ராசன் போட்டோ அன் வீடியோ**
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
தொ.பே.:077 322 2122

**காமாட்சி**
பல்பொருள் வாணிபம்.
உரிமையாளர்:
K.திலீபன்
இளவாலை வீதி,
ஆயிலடி, பன்னாலை.

**FINE SELECTION**
fancy goods&
Electrical items, Bata
No.77,KKS.Road,
Chunnakam.
T.P: 021 224 0005

ஒடர் நகைகளை நவீன டிசைன்களில் 22 கரட் தங்கத்தில் குறித்த தவணையில் செய்து பெற்றிட நாடுங்கள்
**அபிராமி நகை மாடம்**
இல.46,
டாக்டர் சுப்பிரமணியம்
வீதி, சுன்னாகம்
தொ.பே.:077 057 0238

உதயன்
30/10/2013



## ரயில்வே உணவகங்கள் மூடப்பட்டுக் கிடப்பது ஏன்?

### சந்தேகம் தெரிவிக்கிறது தொழிற்சங்கம்

கொழும்பு.ஒக்.30
ரயில்வே உணவக கேள்விப் பத்திரங்கள் குறித்து தீர்மானம் எடுப்பதை நிறுத்தியிருப்பதன் பின்னணியில் உள்நோக்கம் உள்ளது என்று ரயில்வே திணைக்களத் தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது.




ரயில் நிலையங்களின் உணவகங்கள் பல மாதங்களாக மூடப்பட்டுள்ளன. அதனால், பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்.
உணவகங்களை நடத்துவதற்கான கேள்விப் பத்திரங்கள் பல மாதங்களுக்கு முன்னர் கோரப்பட்டுப் பலர் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள நிலையிலும், அதிகாரிகள் அதற்கு மேல் இதுவரையிலும் செயற்படவில்லை என்று ரயில்வே திணைக்கள தொழிற்சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. கோட்டை, மருதானை உட்பட நாட்டின் 13 முக்கிய ரயில் நிலையங்களில் உணவக வசதி இல்லாமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மாநாட்டில் கலந்துகொள்ள இதுவரை அழைப்பில்லை

### திஸ்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு.ஒக்.30
பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு உத்தியோகபூர்வ அழைப்பு இதுவரையில் கிடைக்கவில்லை என்று கட்சியின்



பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.
பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்குமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கோ, எதிர்க்கட்சித் தலைவருக்கோ இதுவரையில் அரசு அழைப்பு விடுக்கவில்லை என்று அவர் கூறினார்.
கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொது நிர்வாக அமைச்சு அதிகாரியொருவர் தொலைபேசி மூலம் மாநாட்டில் பங்கேற்குமாறு கோரியுள்ளார் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
மாநாட்டில் பங்கேற்குமாறு இதுவரையில் உத்தியோகபூர்வமாக அழைக்கப்படாததால் பங்கேற்பது குறித்து கட்சி தீர்மானிக்கவில்லை என்று அவர், கூறினார்.
எமக்கு அழைப்பு விடுக்கப்படாததில் இருந்து மாநாட்டு ஏற்பாட்டு நடவடிக்கைகளில் குறைபாடுகள் காணப்படுகின்றமை அம்பலமாகியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## 13 வருடங்களின் பின் விடுதலைபெற்ற நபர்

ஹெரோயின் கடத்தி விற்றார் என்ற குற்றச்சாட்டில் 13 வருடங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரைக் கொழும்பு மேல் நீதிமன்றம் திங்கட்கிழமை விடுதலை செய்துள்ளது.
இந்தநபர் 7.2 கிராம் ஹெரோயின் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 1999 ஆம் ஆண்டில் பாலத்துறையில் வைத்துப் போதைப் பொருள் தடுப்பு இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அவர் கடந்த 13 வருடங்களாக விளக்கமறியலில் இருந்த நிலையில் திங்கட்கிழமைகொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணை நடந்துள்ளது.
பொலிஸாரின் சாட்சியத்தில் முரண்பாடுகள் இருப்பதாக சந்தேகநபரின் வழக்கறிஞர் சுட்டிக்காட்டியதையடுத்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்ரமசிங்க சந்தேகநபரை விடுதலை செய்துள்ளார். (ச)

# மாநாட்டுப் பரப்புரையில் பாடசாலை மாணவர்கள்

### கல்விச் செயற்பாடுகள் பாதிப்பு என்கிறது ஆசிரியர் சங்கம்

கொழும்பு.ஒக்.30
இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாடு தொடர்பான பரப்புரை நடவடிக்கைகளில் அரசு மாணவர்களையும் ஈடுபடுத்துவதால், அவர்களுடைய கல்வி பாதிக்கப்படுகின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.
பாடசாலைகளில் இந்த ஆண்டுக்கான இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளன. அதனால் பாடசாலைகளில் கற்பித்தல், கற்றல் செயற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.
இந்த நிலையில் அரசு மாநாட்டுப் பிரசாரத்துக்கான செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதால் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.
பாடசாலைகள் மூடப்படுவதும், பாடசாலை நேரங்களில் கொடிகளைக் கைகளில் ஏந்தி அசைப்பதற்காக மாணவர்கள் அழைத்து செல்லப்படு



வதையும் மேல்மாகாணத்தில் காணமுடிகின்றது என்றும் அவர் கூறினார்.

*சுவிஸ்சர்லாந்து நாட்டின் கலாசார நடனத்தால் பாடசாலையொன்றின் மாணவர்களும், பெற்றோர்களும் குழப்பம் அடைந்துள்ளனர்.*

பொதுநலவாய நாடுகளில் அங்கம் வகிக்கும் 54 நாடுகளின் கலாசார நடனங்களை பிரதிபலிக்கும் வகையிலான பொறுப்புக்களை 54 பாடசாலைகளிடம் கல்வி அமைச்சு ஒப்படைத்துள்ளது.
இந்த நாடுகளில் சுவிஸ்சர்லாந்து நாட்டின் கலாசார நடனத்தால் பாடசாலையொன்றின் மாணவர்களும், பெற்றோர்களும் குழப்பமடைந்துள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார்.
ஏற்கனவே பல்வேறு நாடுகளில் பொதுநலவாய மாநாடு நடைபெற்றுள்ளது. அந்த நாடுகளில் பாடசாலை மாணவர்கள் இவ்வாறு பயன்படுத்தப்பட்டிருக்கமாட்டார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



மஹரகம, தேசிய புற்றுநோய் வைத்தியசாலைக்கு திங்கட்கிழமை சென்ற ஜனாதிபதியின் பாரியாரும் முதற் பெண்மணியுமான ஷிரந்தி ராஜபக்ஷ அங்கு தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளி ஒருவருக்குப் பழங்கள் வழங்கினார். (ச)

## ஐ.தே.க.வின் கருத்தை ஏற்கவே முடியாது

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் மாநாடு குறித்து ஐக்கிய தேசியக்கட்சி வெளியிட்டு வரும் கருத்துக்களை ஏற்க முடியாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் அந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளும் கலந்து கொள்ளும் என்று அமைச்சின் செயலர் கருணாரட்ன அமுனுகம தெரிவித்தார்.
மாநாட்டில் பங்கேற்பதாக இதுவரை 13 நாடுகளின் அரச தலைவர்களே உறுதிப்படுத்தியுள்ளனர் என்று கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்திருந்தார்.
எனினும் பொதுநலவாய நாடுகளின் 35 நாடுகளைச் சேர்ந்த அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்வதாக ஏற்கனவே உறுதியளித்துள்ளனர் என்று அமுனுகம குறிப்பிட்டார். (ச)

## இராட்சத நுளம்பு பிடிபட்டது

கொழும்பு.ஒக்.30
மாத்தளை, கலேவலைப் பிரதேசத்தில் நான்கு அங்குலம் நீளமான இராட்சத நுளம்பு திங்கட்கிழமை பிடிக்கப்பட்டுள்ளது.
கலேவல, மொரகொல்லாகம பிரதேசத்தைச் சேர்ந்த சாந்த பண்டார என்பவரது வீட்டிலேயே இந்த நுளம்பு உயிரோடு பிடிக்கப்பட்டுக் கலேவலை சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
இந்த நுளம்பு டெங்கு நோய் பரப்பும் நுளம்பின் வடிவத்தை உடையதாகக் காணப்படுகிறது என்று கூறப்படுகிறது. அளவில் பெரிய உடம்பைக் கொண்ட இவ்வாறான நுளம்புகள் நோய்க் காவியாகத் தொழிற்பட்டமை பற்றி இது வரை எங்கும் பதிவாகவில்லை. இந்த நுளம்பு குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று கலேவலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ராஜா நவரத்ன தெரிவித்தார். (ச)

## 2,697 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

கொழும்பு.ஒக்.30
நாட்டில் மேற்கொள்ளப்பட்ட திடீர்சோதனைகளின் போது பாவனைக்கு உதவாத உணவு வகைகளை விற்பனை செய்த 2,697 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது. இதுவரை 1258 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டு, அவர்களிடமிருந்து 68 லட்சத்து 96 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்பட்டது என்று அவர் கூறினார். (ச)

## கலைப்பீட மாணவர்களின் விரிவுரை முறையில் மாற்றம்

### கணினி உதவியுடன் சுய தேடல்

கொழும்பு.ஒக்.30
கலைப்பீட மாணவர்களின் விரிவுரை முறைகளில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது என்று உயர் கல்வி அமைச்சின் செயலர் சுனில் ஜயந்த நவரட்ண தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நாட்டுக்குக் கலைப்பீட மாணவர்கள் பிரயோசனமற்றவர்கள் அல்லர். அவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் கற்பித்தல் முறைமையே பிரயோசனமற்றது.
துரித கதியில் அபிவிருத்தியடைந்து வரும் எமது நாட்டில் கலைப் பட்டதாரிகளுக்கு 28 வீத வேலைவாய்ப்பே காத்திருக்கின்றது. அதனால் எஞ்சிய பட்டதாரிகள் வேலைவாய்ப்பின்மையால் அரசைக் குறை கூறும் நிலை நாட்டில் தோன்றியுள்ளது.
இந்த நிலைமை எதிர்காலத்தில் தொடரக்கூடாது என்பதற்காக கலைப்பீடம் மற்றும் வெளிவாரிப் பட்டதாரி மாணவர்களுக்கான கற்பித்தல் முறைமைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன.
அதற்கிணங்க மாணவர்கள் தனியே விரிவுரைகளில் மட்டும் தங்கியிராது தாமே சுயமாகப் பாடத் திட்டத்துக்குட்பட்ட விடயங்களைத் தேடி ஆராய்ந்து கணினி, இணையம், ஆகியவற்றின் உதவியுடன் ஒவ்வொரு மாணவரும் தாமாகப் பாடத்திட்டத்தை விளங்கிக் கொள்ளும் வகையில் கல்வித் திட்டம் நெறிப்படுத்தப்படும். இந்த முறைமையின் கீழ் விரிவுரையாளர் சாதாரண நெறிப்படுத்துபவராகச் செயற்படுவார்.
அதன் மூலம் மாணவர்கள் தேடல், தொழில்நுட்ப அறிவு, தாம் கற்றவற்றைப் பிறருக்கு விளங்கப்படுத்தும் ஆற்றல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல் உட்பட பல்வேறு துறைகளின் கீழ் பயிற்றப்படுவர். இந்தச் செயன்முறையை நடைமுறைப்படுத்தும் வகையில் கலைப்பீட விரிவுரையாளர்கள் தற்போது பயிற்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.
இவற்றுக்குத் தீர்வு காணும் வகையிலேயே புதிய பாடத் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.- என்றார். (ச)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
05.03.1932



மறைவு
24.10.2008

மீசாலை

## அமரர் சோமசுந்தரம் கணேசலிங்கம்

(B.A, Dip. in Ed, M.A, இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

திதி: அபரபக்க ஏகாதசி (30.10.2013)

ஆண்டுகள் ஐந்தாகிப் போனாலும்
போகாதே நின் நிழலாடும் நினைவுகள்
பேசிய மொழிகள் அடி மனதின் அந்தகாரமாய்
ஏகாந்த தனிமையில் சுரம் வடிக்குதே
எம் விழி நீரும் நிதம் சொரியுதே
உம் கனிவு கொண்ட நிஜங்கள்
இங்கு நிஜமற்றுப் போகவில்லை
நிஜமாகி எமையென்றும் வழிப்படுத்தும்
நாள்கள் நடந்தபடி கடந்துமிங்கு-உம் நினைவுகளை
நெஞ்சத்தில் சுமந்தபடி நாமிங்கு வாழ்ந்திடுவோம்.

"சிவகிரி",
மீசாலை வடக்கு, மீசாலை. (39554) (3.6.4)

குடும்பத்தினர்,
72/27, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு
06.11.1931

உதிர்வு
01.10.2013

## அமரர் ஐயம்பிள்ளை நடராசா

(முன்னாள் உரிமையாளர்-
ஸ்ரீ ஜெயாரான்ஸ்போட்)

கடந்த 01.10.2013 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் ஐயம்பிள்ளை நடராசா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (31.10.2013) வியாழக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண் டோருக்கும் தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், மலர் வளையம் வைத்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வெளி யிட்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் எமக்கு உதவிய அன்பு உள்ளங்களுக்கும்
எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"வேல் வாசா"
மாணிக்க தியாகராசா வீதி, சுன்னாகம்.

குடும்பத்தினர்.
077 882 2611

(39553)(6.3.4)

# வினா -விடைப் போட்டி

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்திக் கழகம் ஆறுமுக நாவலரின் குரு பூசையை முன்னிட்டு வினா- விடைப் போட்டியை நடத்தவுள்ளது.
இந்தப் போட்டி தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களிடையே எதிர் வரும் 10 ஆம் திகதி நடத்தப் படவுள்ளது.
போட்டியில் கலந்து கொள்ள விரும்பு வோர் சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி நாவலர் குருபூசை அன்று வழங்கப்படும். (ந)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் உறுப்பினரான வி.குமணன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி ரதிவதனா விவேகானந்தன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாண கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம்.

(C/13462) (10.6.3)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



30.09.2013 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் ஏரம்பு தர்மலிங்கம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.10. 2013) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (33318)(3.6.4)

பெரியரசடி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
01.06.1972



மறைவு
01.10.2013

(33339) (7.6.3)

## திருமதி ஜீவராணி (ஜீவா) லோகிதாசன்

கடந்த 01.10.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (31.10.2013) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் எமது இல்லத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

வல்லை றோட்,
தொண்டமானாறு.

குடும்பத்தினர்.
077 690 4590

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 . 07 . 1938

மறைவு
10 . 11 . 2012

அமரர்

## செல்லப்பா இராமநாதன்

திதி : ஏகாதசி

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறவில்லை உங்கள் நினைவுகள்
என்றும் எம்மை விட்டகலாத தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்

பிள்ளையார் கோயில் முன்,
உடுவில் தெற்கு, மானிப்பாய். (33348)(3.6.4)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வெள்ளம் வழிந்தோட வடிகால்கள் துப்புரவு

மட்டக்களப்பு.ஒக்.30
வெள்ளப் பெருக்கைத் தடுக்கும் நோக்கில் ஓட்டமாவடி பிரதேச சபைப் பிரிவின் பிரதான வீதியில் உள்ள வடிகால்களை துப்புரவு செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களின் பங்களிப்புடன் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக மட்டக்களப்பு -கொழும்பு பிரதான வீதியில் உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.
மழைகாலம் ஆரம்பிக்கவுள்ளதால் பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் கே.பி.எஸ்.ஹமீட் தெரிவித்தார்.(ச)

# தனித்துவமாக இயங்குவதற்கே கிழக்கைப் பிரிக்க முயன்றோம்

## அமைச்சர் அதாவுல்லா கருத்து

மட்டக்களப்பு,ஒக்.30
கிழக்கு மாகாணம் தனித்துவமாக இயங்க வேண்டும் என்பதற்காகவே கிழக்கைப் பிரிக்கக் கோரினோம் என்று தேசிய காங்கிரஸின் தலைவரும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.
மட்டக்களப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு



மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத் திறப்பு விழா திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிழக்கு மாகாணத்தில் வாழுகின்ற மக்கள் அவரவர் கலாசார விழுமியங்களைச் சுதந்திரமாக அனுபவிக்க வேண்டும். அதனாலேயே கிழக்கைப் பிரிக்கக் கோரினோம்.
திருகோணமலை மாவட்டம் பொருளாதார வளம் நிறைந்தது. பொருளாதார விருத்திக்குக் கிழக்கின் தலைசிறந்த மாவட்டமாகத் திருகோணமலை உள்ளது. அதனால் நிர்வாகத்துக்கான மாவட்டமாக மட்டக்களப்பு உருவாக வேண்டும்.
கடந்த காலங்களில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு போதிய நிதி இருக்கவில்லை. பல்வேறு நிர்வாகச் சிக்கல்களுக்கு இந்த மாகாணம் முகம்கொடுத்தது. இன்று அவ்வாறு இல்லை.
கிழக்கு மாகாணத்தைச் சிறந்த மாகாணமாகக் கட்டியெழுப்புவதற்கு மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து நிர்வாக அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.-என்றார். (ச-104)

# கல்முனை முதல்வர் இன்று விசேட உரை

அம்பாறை.ஒக்.30
கல்முனை முதல்வர் பதவியிலிருந்து சிராஸ் மீராசாஹிப் பதவி விலகுவதற்கான காலக்கெடு நாளை வியாழக்கிழமை முடிவடையவுள்ள நிலையில், கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.
கல்முனை மாநகர சபையின் சபா மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்த மாதாந்தக் கூட்டத்தில் தனது பதவி விலகல் தொடர்பிலான விசேட உரையை கல்முனை முதல்வர் நிகழ்த்தவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை, சாய்ந்தமருது பிரதேச மக்களை கல்முனை



முதல்வர் செவ்வாய்க்கிழமை சந்தித்து அவர்களது கருத்துக்களைக் கேட்டறியவுள்ளதாகக் கூறியமை குறிப்பிடத்தக்கது. (ச)

# படையினரின் வசமுள்ள கட்டடத்தை வழங்குங்கள்

## திருகோணமலை நகரசபை வேண்டுகோள்

திருகோணமலை, ஒக்.30
திருகோணமலை நகரசபையால் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மின்சார நிலைய வீதியிலுள்ள ஐக்கிய பொதுச் சந்தைக் கட்டடத்தைப் பாதுகாப்பு படையினர் நகர சபையிடம் கையளிக்க வேண்டும்.
இவ்வாறு திருகோணமலை நகர சபை உறுப்பினர் சி.நந்தகுமார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.
இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இந்த விடயம் குறித்து நகர சபை நிர்வாகத்தால் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. அப்போது ஐக்கிய பொதுச் சந்தைக் கட்டடத்திலிருந்து பாதுகாப்புப் படையினர் மிக விரைவில் வெளியேறுவதாக வாக்குறுதி வழங்கப்பட்டது. எனினும் இது வரை அவர்கள் வெளியேறவில்லை.
அதனால் நகரசபைக்கு நிதி கிடைக்கக் கூடிய வருமான மூலம்மொன்றை இழக்க வேண்டியுள்ளது.
இதேவேளை மட்டக்களப்பு மாநகர சபைக்குச் சொந்தமான வாடி வீடு மீள மட்டக்களப்பு மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டது. எனினும் திருகோணமலை நகர சபைக்குச் சொந்தமான வாடி வீடு மீள் அபிவிருத்தி அதிகார சபையால் திருகோணமலை நகர சபையிடம் இது வரை கையளிக்கப்படவில்லை. இவ்வாறு திருகோணமலை நகர சபைக்குரிய வருமான மூலங்களை அரச நிறுவனங்கள், பாதுகாப்புப் படையினர் கையகப்படுத்தும்போது, வருமான மூலங்களின் மூலம் பெறப்படும் வருமானம் இழக்கப்பட்டு வருகிறது.
அதனால் திருகோணமலை நகர சபையால் மேற்கொள்ளப்படும் நலனோம்பு நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இந்த விடயம் குறித்து உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளனர்.
எனவே திருகோணமலை நகர அபிவிருத்திக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)

> திருகோணமலை நகர அபிவிருத்திக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் காத்திரமான பங்களிப்பை வழங்க வேண்டும்.



சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி லயன்ஸ் கழகமும், கிழக்கு பிராந்திய தேசிய விழிப்புலனற்றோர் சம்மேளனமும் இணைந்து நடத்திய வெள்ளைப்பிரம்பு தின விழிப்புணர்வு ஊர்வலம் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பில் நடைபெற்றது. (ச)

# விவசாயிகள் மீது தாக்குதல்

மூதூர், கங்குவேலி பகுதியிலுள்ள வயல் நிலங்களில் வேலை செய்து கொண்டிருந்த நால்வர் கடும் தாக்குதல்களுக்கு உள்ளான நிலையில் திங்கட்கிழமை மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
ஏ.தேவமனோகரன் (வயது 45), மாணிக்கம் கோணலிங்கம் (வயது-56), சிதம்பரப்பிள்ளை துளசிநாதன் (வயது-46), வைரமுத்து கிருஷ்ணமூர்த்தி (வயது-53) ஆகியோரே இவ்வாறு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
'எமக்குச் சொந்தமான வயல் நிலங்களில் நாம் வேலை செய்து கொண்டிருந்த போதே திடீரென வயலுக்குள் நுழைந்த சிலர் மண்வெட்டி, கோடரிப் பிடிகளினால் எம்மைச் சராமாரியாகத் தாக்கினர். அதனால் நாம் செய்வதறியாது கங்குவேலிப் பகுதி நோக்கி ஓடிவந்தோம்" என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.
இவ்வாறு தாக்குதலில் ஈடுபட்டவர்கள் தமது காணியை அபகரித்து நெற்செய்கையில் ஈடுபட்டவர்கள் என்றும் அவர்கள் கூறுகின்றனர். இந்தச் சம்பவம் குறித்து மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

# 39 பேருக்கு நிரந்தர நியமனம்

மட்டக்களப்பு.ஒக்.30
அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கடந்த ஒருவருட காலமாக பட்டதாரிப் பயிலுநர்களாக கடமையாற்றிய 39 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.
இந்த நியமனம் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பட்டதாரிப் பயிலுநர்களில் முப்பது பேர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்களாகவும், ஒன்பது பேர் பொது நிர்வாக அமைச்சின் உத்தியோகத்தர்களாகவும் நியமிக்கப்பட்டு நிரந்தர நியமனம் வழங்



கப்பட்டது.
இந்த நியமனங்களை நாடாளுமன்ற உறுப்பினர் பி.பியசேன, அம்பாறை அரச அதிபர் நீல் டி அல்விஸ் ஆகியோர் வழங்கினர். (ச)

# சேவைகளை இலகுவாகப் பெற நிர்வாகக் கட்டமைப்பு விஸ்தரிப்பு

## அமைச்சர் உதுமாலெப்பை தெரிவிப்பு

அம்பாறை, ஒக்.30
கிழக்கு மாகாணத்தில் வாழும் அனைத்துப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களும் சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளவதற்காகவே மாகாணத்தின் நிர்வாகக் கட்டமைப்பு மட்டக்களப்புக்கு விஸ்தரிக்கப்படுகின்றது.
இவ்வாறு கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தெரிவித்தார்.
மட்டக்களப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் அலுவலக கட்டடத் தொகுதி திறப்பு விழா திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பல்வேறு அபிவிருத்திப் பணிகள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சால் கிழக்கின் சகல மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
கிழக்கு மாகாணத்தின் மையப் பிரதேசமாக மட்டக்களப்பு விளங்குகின்றது. அதனால் கிழக்கு மாகாணத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்களை மட்டக்களப்புக்கு விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம். இதனால் திருகோணமலை முதல் பொத்துவில் வரை வாழுகின்ற மக்கள் மட்டக்களப்புக்குப் போக்குவரத்து செய்வது இலகுவாகும்.
திருகோணமலையில் சகல நிர்வாகக் கூறுகளும் அமைந்துள்ளதால், தங்களது பணிகளை மக்கள் நிறைவு செய்வதற்குச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அதன் காரணமாகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சு 310 மில்லியன் ரூபா நிதியில் வலையிறவு மற்றும் ஆயித்திய மலை பிரதேசங்களின் பிரதான வீதியை அபிவிருத்தி செய்து, இரு பாலங்களையும் நிறுவி மக்களின் பயன்பாட்டுக்காகக் கையளித்துள்ளது.-என்றார். (ச-104)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு மக்களின் அரசியல் எழுச்சியை அரச தலைவர்கள் மதித்து நடப்பரா?

இலங்கையின் மாகாணங்கள் ஒன்பது. அவற்றுக்குக் கொழும்பு அரசின் பிரதிநிதிகளாக ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஏழு பேரும் குடியியல் சிவில் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள். ஆனால் ஏனோ, தமிழ் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் கிழக்கில், அதன் மாகாண சபைக்கு ஏற்கெனவே கடற்படை முன்னாள் உயர் அதிகாரி ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அதே வரிசையில் அல்லது பாணியில் வடக்கிலும் இராணுவ முன்னாள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு 1988 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலின் பின்னர்-

முதன்முதலாக வடக்கு மாகாண சபைக்கு இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று புதிதாக மக்கள் ஆட்சி ஆரம்பமாகி உள்ளது. ஆனால் ஆளுநர் பதவிக்கு குடியியல் அதிகாரி ஒருவரை நியமிப்பதில் கொழும்பு அரசு அக்கறை கொள்வதற்கான அறிகுறி எதுவும் கிஞ்சித்தும் வெளிப்படவில்லை; மணக்கவும் இல்லை!

இதனை மனதில் கொண்டு வடக்கு மாகாண சபையின் முதல் அமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தமது கன்னி உரையில் வடக்கு மாகாணத்துக்கு குடியியல் அதிகாரி ஒருவரை ஆளுநராக நியமிக்குமாறு வலியுறுத்தி இருந்தார்.

இராணுவ அதிகாரி ஒருவர் வடக்கு மாகாண ஆளுநராகக் கடமை ஆற்றும் பட்சத்தில், குடியியல் நிர்வாகத்தை நடத்த முடியாது. ஜனாதிபதி வடக்கில் உண்மையிலேயே குடியியல் நிர்வாகம் நடைபெற வேண்டும் என்று விரும்பினால், எமது மக்களின் எதிர் பார்ப்புக்குப் பொருத்தமானவரை ஆளுநராக நிய மிக்க வேண்டும்-

இராணுவத்திலிருந்து பிரிவுறாத ஒருவர் ஆளுநராக இருக்கும் போது சிவில் நிர்வாகம் நடைபெறாது. இன்றைய வடக்கு மாகாண ஆளுநர், எவ்வாறு வெளிப்படையாக வட மாகாணத் தேர்தல் விடயங்களில் பக்கச் சார்பாக நடந்து கொண்டார் என்பது நாடறிந்த விடயம்-

ஜனாதிபதி வடக்கில் சிவில் நிர்வாகத்தை வரவேற்பது உண்மையானால், ஆளுநர் பதவிக்கு தகைமை உடைய இராணுவத்தினர் அல்லாத ஒருவரை அந்தப் பதவிக்கு நியமிக்கக் கோருகிறோம்-என்றும் முதலமைச்சர் தெரிவித்திருந்தார்.

அவற்றுக்கும் மேலாக, முதலமைச்சர் தெரிவித்த பின்வரும் காரணம் முழுக்க முழுக்க மக்கள் நலன்களை நாடியவை என்பதனை கொழும்பு அரசாங்கத்தின் பிரதானிகளில் எவரும் தட்டிக் கழிக்க முடியாது.

போருக்குப் பின்னரான சூழலில், புனர்நிர்மாணம், புனருத்தாரணம், புனரமைப்பு, அபிவிருத்தி ஆகியவை சம்பந்தமான அனுபவத்தையும்-

பெண்கள், குழந்தைகள், முதியோர்கள், இளைஞர்கள், முன்னாள் போராளிகளின் வாழ்வில் கரிசனை கொண்டவருமான ஒருவரே ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும்-

இது அவரது சொந்தக்கருத்து என்பதற்கும் மேலாக, அவரை இப்பதவிக்குத் தெரிவு செய்த மக்களின் தேவையும் விருப்பமும் ஆகும். இதனை அரசாங்கம் மிகக் குறிப்பாக ஜனாதிபதி கவனத்தில் கொள்ளவேண்டும்.

மேலும் நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் வடக்கு முதலமைச்சரின் கருத்தை, நிலைப்பாட்டை பிசிறின்றி ஆதரித்துள்ளமை நோக்கற்பாலது.

வடக்கில் மாகாண சபை இப்போது நிறுவப்பட்டுள்ள நிலையில் இராணுவ அதிகாரி அல்லாத ஒருவர் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும்-என்று ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவும் வலியுறுத்தி உள்ளார்.

இராணுவத்தைச் சேராத அதிகாரி ஒருவரே வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட வேண்டும். வடக்கில் ஜனநாயக அரசு நிறுவப்பட்டுள்ளதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக் கப்படுகிறது. அவ்வாறிருக்க, மாகாணசபை தனது நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்-என்றும் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மாகாணம் ஜனநாயக நீரோட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அங்கு ஆளுநராகப் பணியாற்றி வரும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியை அப்பதவியில் இருந்து நீக்கி, சிவில் ஆளுநரை நியமிக்க வேண்டும்- என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொறுப்புச் செயலாளர் வலியுறுத்தி உள்ளதை-

எதிர்க்கட்சி என்றால் எப்போதும் அரசின் முடிவுகள், செயற்பாடுகளுக்கு எதிராகவே கருத்துக்கூறும் என்று அரச தரப்பு தட்டிக் கழிக்கக் கூடிய விடயம் அல்ல இது. வடக்கு மக்களின் வாக்கு மூலமான அரசியல் எழுச்சியைக் கௌரவித்து, அதனை மனம் கொண்டு நிறைவேற்ற அரசு முன்வர வேண்டும்.

இலங்கையில் ஆட்சியில் இருப்பது ஜனநாயக அரசா அன்றி சர்வாதிகார நிர்வாகமா என்பதனை வடக்கு மாகாண ஆளுநர் விவகாரம் அச்சொட்டாகச் சுட்டிக் காட்டும். அனைத்துலக நாடுகளும் அதனை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன என்பதனை மறந்துவிடலாகாது.

# பொதுநலவாய மாநாடு சவாலா, நல்வாய்ப்பா?

**உலகத் தலைவர்கள் ஒன்றுகூடும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய உச்சிமாநாடு இலங்கையில் நடைபெறுவது இதுவே முதற்தடவையாகும்.**

இலங்கை தனது நாட்டில் பொது நலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துவதற்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வாய்ப்பின் மூலம், தன் மீது அனைத்துலக சமூகத்தால் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து விலகிக் கொள்ள முடியும் எனக்கருதுகிறது.

நவம்பர் 2013இல் பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்று கூடும் உச்சிமாநாடு இலங்கையில் முதன்முதலாக நடைபெறவுள்ளது. இந்த உச்சிமாநாடு பிறிதொரு காரணத்துக்காகவும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதாக உள்ளது. அதாவது 1976இல் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு இடம்பெற்றமை தவிர, இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் உலகத் தலைவர்கள் ஒன்றுகூடும் உலகின் இரண்டாவது மிகப்பெரிய உச்சிமாநாடொன்று இலங்கையில் நடைபெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இவ்வாறான மைற்கற்களை இடுவதற்கான தயார்ப்படுத்தல்களை இலங்கை அரசு மேற்கொள்கின்ற அதேவேளையில், அனைத்துலக அரங்கில் இலங்கை தொடர்ந்தும் சவால்களைச் சந்தித்து வருகின்றது. புலம்பெயர் சமூகத்தின் செயற்பாடுகள், இலங்கையின் சமாதான நடவடிக்கையில் வெளிநாட்டு அனுசரணையாளர்கள் பங்கெடுத் தமை மற்றும் 1987இல் இந்திய அமைதிப்படை இலங்கையில் கடமையாற்றுவதற்காக அழைக்கப்பட்டமை போன்ற பல்வேறு காரணிகளால் மூன்று தசாப்தங்களாக இலங்கையில் போர் மிகத் தீவிரமுற்றிருந்தது. இவ்வாறு நீண்ட போரின் இறுதியில், இலங்கை அனைத்துலக சமூகத்தால் உற்றுநோக்கப்பட்டது.

போருக்குப் பின்னான இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள், மீளிணக்கப்பாடு மற்றும் மனித உரிமை விவகாரங்களால் இலங்கை பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. மனித உரி மையை மதித்து நடத்தல் மற்றும் உள்நாட்டில் வாழும் சமூகங்கள் மத்தியில் அமைதியை ஏற்படுத்துதல் போன்றவை இலங்கைக்குப் புதிய விடயமல்ல. ஆனால் இலங்கை யின் வரலாறு, கலாசாரங்கள் மற்றும் சட்ட ஒழுங்குகள் போன்றன நாட்டை ஆள்பவர்களால் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

### குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க பொதுநலவாய மாநாடு

இலங்கையானது, சுயாதீனமாகவும் நம்பகமாகவும் செயற்படக் கூடிய ஆட்சி முறைமை ஒன்றை உருவாக்குவதன் மூலம் நாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். இவ்வாறான ஒன்றை இலங்கை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. தன்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றையும் விசாரிப்பதற்கு இலங்கை சுயாதீனமான நம்பகமான கட்டமைப்புக்களையும் விதிமுறைகளையும் உருவாக்க வேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் தேசிய மனித உரிமைகள் செயற்பாட்டுத் திட்டம் போன்ற இரண்டு தேசிய ஆணைக்குழுக்களின் தீர்மானங்கள் அரசைச் சார்ந்ததாக இருந்தன. இந் நிலையில் இவ்வாறான தேசிய விசாரணை ஆணைக்குழுக்கள் வெளிநாட்டு உறவுகளைப் பேணும் அதே வேளையில், நம்பகமான தீர்வுகளை முன்வைக்க வேண்டும். தற்போது இலங்கை அரசு தனது நாட்டில் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துவதற்குக் கிடைத்துள்ள மிகப் பெரிய வாய்ப்பின் மூலம், தன் மீது அனைத்துலக சமூகத்தால் சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து விலகிக் கொள்ள முடியும் எனக்கருதுகிறது. மூன்று தசாப்தங்களாக நீண்டு சென்று மே 2009இல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் தனது நாட்டுக்கும் சேவை யாற்றுவதற்கான சிறந்த வாய்ப்பைப் பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாடு ஏற்படுத்தித் தந்துள்ளது என் பதை இலங்கை அரசு மிகத் தீவிரமாகக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

தனது நாட்டில் உச்சி மாநாட்டை நடத்துவதன் மூலம் அடுத்த இரு ஆண்டுகளுக்கு அதாவது 2015இல் மொரிசியசில் பொதுநலவாயத்தின் உச்சிமாநாடு நடைபெறும் வரை. இதன் தலைமைப் பதவியை இலங்கை பெற்றுக் கொள்ள முடியும். இலங்கை பெற்றுக் கொள்ளும் இந்த வாய்ப்பின் மூலம் வெளிநாடுகளுடனான தனது உறவுநிலையிலும் தனது நிலைப்பாட்டிலும் மிகப் பெரிய நலனை அடைந்து கொள்ள முடியும். இதற்கும் மேலாக, பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாட்டிலும் அங்கம் வகிக்கும்.

### வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான ஒரு களம்

பொதுநலவாய வர்த்தகப் பேரவையானது, வர்த்தகம் மற்றும் முதலீட்டை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வர்த்தகத் தலைவர்களை ஒன்றிணைக்கும் அமைப்பாகும். பொதுநலவாயம், இந்து சமுத்திரம் - பசுபிக் மற்றும் சார்க் நாடுகளின் செழுமை மற்றும் அபிவிருத்தி போன்றவற்றில் பங்கெடுத்தல் என்பதே 2013இல் பொதுநலவாய வர்த்தக பேரவையின் முதன்மை நோக்காகும். இதன்மூலம் இலங்கையானது, தனது வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கு புதிய பங்காளிகளையும் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொள்ளக்கூடிய மிகப் பெரிய வாய்ப்பைப் பெற்றுக்கொள்கிறது. பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டை நடத்துகின்ற எந்தவொரு நாடும் பொதுநலவாய வர்த்தகப் பேரவையின் நலனை அதிகளவில் பெற்றுக் கொள்கிறது. எடுத்துக்காட்டாக, 2011இல் பேர்த்தில் நடைபெற்ற பொதுநலவாய அமைப்பின் உச்சி மாநாட்டில் ஆஸ்திரேலியாவுக்கு 10 பில்லியன் டொலர்கள் பெறுமதியான நிதியுதவி கிடைக்கப் பெற்றது. 2013இல் பேரவையால் இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்கள் பெறுமதியான திட்டம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டில் முதலீட்டை மேற்கொள்வதற்கு பூகோள தனியார் துறையானது அந்நாட்டின் கோட்பாட்டின் உறுதித் தன்மை மற்றும் பரந்தளவிலான ஆட்சிக் கட்டமைப்பு ஆகிய இரண்டையும் முக்கியமாக நோக்குகிறது. இலங்கையில் தனியார் துறை முதலீடானது நாட்டின் புலம்பெயர் சமூகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், இவ்விரு முக்கிய விடயங்களையும் இலங்கை உறுதிப்படுத்தியுள்ளது.

### இளைஞர் பேரவை அம்பாந்தோட்டையில்

பொதுநலவாய அமைப்பின் பிறிதொரு பிரிவான ஒன்பதாவது பொதுநலவாய இளையோர் பேரவை இவ்வாண்டு நவம்பர் 10-14 வரையான காலப்பகுதியில் அம்பாந்தோட்டையில் 200 இளைஞர்களை ஒன்றிணைத்து செயற்படவுள்ளது. இந்தச் பேரவையான்து, பொதுநலவாயத்தைச் சேர்ந்த இளைஞர்களை ஒன்றிணைத்து உத்தியோகபூர்வமாகக் குரல் கொடுக்கின்றது. இது தனது முதலாவது பொதுக் கூட்டத்தை இலங்கையில் நடத்தவுள்ளது. மே 2014இல் இலங்கையில் இடம்பெறவுள்ள இளைஞர்களின் அனைத்துலக கருத்தரங்கிற்கான முன்னகர்வாகவே தற்போது ஒன்பதாவது பொதுநலவாய இளையோர் பேரவை அம்பாந்தோட்டையில் கூடவுள்ளது. இது பொதுநலவாயத்தில் இளைஞர்கள் தமது கருத்துக்களைப் பிரதிபலிப்பதற்கான மிகவும் அருமையான வாய்ப்பாகக் காணப்படும்.

இந்த அடிப்படையில் இலங்கையானது ஏனைய நாடுகளிலும் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான செயற்திட்டங்கள் சிலவற்றைக் கொண்டுள்ளது. இலங்கை தேசிய இளைஞர் நாடாளுமன்ற கட்டமைப்பு மற்றும் இளைஞர் கழகங்களின் ஒன்றியங்கள் போன்றன இதற்கான எடுத்துக்காட்டாகும். தற்போது இவை இரண்டும் இலங்கையில் முன்னெடுக்கும் மிகச் சிறந்த இளைஞர் செயற்பாடுகளாக உள்ளன.

இலங்கை அடுத்த இரு ஆண்டுகளுக்கும் பொதுநலவாயத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதன் மூலம் நாடுகளுக்கிடையில் அமைதியை ஏற்படுத்தி பிரச்சினைகளையும் தவறான கருத்தாக்கங்களையும் நீக்கிக் கொள்ள முடியும். இலங்கையில் நடைபெறவுள்ள உச்சி மாநாட்டுக்கு 3000 வரையான ஊடகவியலாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் வருகை தரவுள்ள நிலையில் இலங்கை தனது நாட்டின் பலம் மற்றும் மீளெழுச்சி போன்றவற்றைக் காண்பிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.

### எதிர்க்கட்சியும் ஆதரவு

இலங்கையில் உள்ள பல்வேறு அரசியற் கட்சிகள் தேசிய நலனுக்காக ஒன்றிணைவதற்கான சந்தர்ப்பத்தை இந்த உச்சி மாநாடு வழங்கியுள்ளது. இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியானது பொதுநலவாய அமைப்பின் உச்சிமாநாட்டுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது. இதனைப் பயன்படுத்தி இலங்கை அரசானது தனது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் முரண்பாடுகளைக் களையமுற்படவேண்டும்.

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் நிலக்கண்ணிவெடி அகற்றல் ஆகியன இடம் பெற்று வருகின்றன. இவை அனைத்துலக அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அரசுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்றன. நிலக்கண்ணிவெடி அகற்றல் பணிகள் பெருமளவில் முடிவடைந்துள்ளன. இடம்பெயர்ந்து வாழ்ந்த 300,000 வரையான மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இங்கே உளசமூக நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நலன்புரி கிராமங்களிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளன. 595 சிறார் போராளிகள் உட்பட பெரும்பாலான முன்னாள் போராளிகள் அவர்களது குடும்பங்களுடன் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான கடன்கள் மற்றும் வேலை வாய்ப்புக்கள் போன்றனவும் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றின் விளைவாக, 1987இன் பின்னர் முதன்முதலாக இலங்கையின் வடக்குப் பகுதியில் மாகாண சபைத் தேர்தல்கள் இடம்பெற் றுள்ளன. இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாகக் காணப்படுகின்றது. இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்கள் 67.52 சதவீத வாக்குகளை அளித்து தமக்கான அரசைத் தெரிவு செய்துள்ளனர். இலங்கையின் தெற்கு மற்றும் வடக்கின் அதிகாரம் மற்றும் உறவுநிலை போன்றவற்றில் சமநிலை பேணப்படுவதற்கான வழிவகை உருவாக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை தனது நாட்டில் பொதுநலவாய அமைப்பின் அரச தலைவர்கள் ஒன்றுகூடும் உச்சி மாநாட்டை நடத்துவதன் மூலம் அனைத்துலக அரங்கில் தனது நிலையைப் பலப்படுத்தும் அதேவேளையில், உள்நாட்டிலும் தன்னைப் பலப்படுத்திக் கொள்ளும்.

நன்றி-புதினப்பலகை

# மனங்கள் மாறினால் மகிழ்வான வாழ்வு



சி.நற்குணலிங்கம்,

இறைவன் எமக்கு வளமாக, அழகாக, மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக வாழ்வதற்கு வாழ்க்கையைத் தந்திருக்கிறான். இதனை நாம் உணர்ந்து கொண்டு சீரும், சிறப்புமாக வாழவேண்டியது எமது கடமை.

இன்றைய எமது சமூகம் வன் முறைகள் மலிந்ததாகவும், கலாசாரப் பிறழ்வுகள் நிறைந்ததாகவும், தனி மனித ஒழுக்கப் பெறுமதிகள் குறைந்த தாகவும் இருப்பதை நாம் கண்கூடே பார்க்கிறோம். இதற்கு மதுப் பாவனையும் காரணமாக அமைகின்றது. இதனைப் பாவிப்போரின் எண்ணிக்கையும் பருகும் அளவும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேதான் இருக்கின்றது. இதன் அதிகரிப்புக்கு ஏற்ப மதுப்பிரியர்களின் உடல், உள, பாதிப்புடன் குடும்ப, சமூக பாதிப்புக் களும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

### மதுவுக்கு அடிமையாக பல காரணங்கள்

மனிதர்கள் மதுப் பாவனைக்கு, மதுவுக்கு அடி மையாவதற்கு பல்வேறு காரணங்களைக் குறிப்பிடலாம். தனிமை, மன இறுக்கம் உடையவர்கள் மதுவுக்கு அடிமையாகிறார்கள். மக்களை எழுச்சியற்றவர்களாக வைத்திருக்கவும், அடிமைகளாக வைத்திருக்கவும் மதுவைச் சிலர் பயன்படுத் துகிறார்கள். உடல் உழைப்பாளர்கள் தமது கடும் தொழிலுக்கு ஏற்ப போஷாக்கான உணவு உண்ண முடியாத நிலையில்வறுமைகாரணமாகதமது உடலை உஷாரான நிலையில் வைத்திருக்க மது அருந்துகிறார்கள். வயது வேறுபாடின்றி அனைத்து வயதினரும் மதுவுக்கு அடிமையாகின்றனர். நீண்ட காலக் கவலை, வேலையின்மை, ஏமாற்றம், ஏக்கம், தொடர் தோல்விகள், வாழ்க்கையில் பிடிப்பின்மை, காரணமாகவும் மதுவைப் பயன்படுத்தி ஆரோக்கியமற்ற நடத்தையில் ஈடுபடுகின்றனர். மனிதன் தனது வாழ்வில் எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி? என தேடி அலைகின்றான். நிம்மதி என்பது மனம் சம்பந்தப்பட்டது. அது ஒருபோதும் எம்மைத் தேடிவராது. ஆத்திரம், வஞ்சம் தீர்த்தல், மற்றவர்களைப் புண்படுத்துதல், அதிகாரம் செய்தல், கோபம், சுயநலம் என்பவற்றை தூக்கி எறிவதன் மூலம் மனம் அமைதியாகி மனதில் நிம்மதி குடிகொள்ளும். அதனை விடுத்து எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என மது அருந்தும் இடத்தைத் தெரிவு செய்யக்கூடாது.

சிலர் வாழ்க்கையை சந்தோசமாக அமைத்துக் கொள்ள என மது அருந்துகிறார்கள். துக்கம், சோகத் துக்கு மட்டுமன்றி வாழ்க்கையில் ஏற்படும் சந்தோசமான நிகழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும் மதுவைப் பாவிக்கின்றனர்.

### வாழ்வை வெறுமையாக்கும் மது

"உன் நண்பன் யாரென்று சொல். உன்னைப் பற்றி நான் கூறுகிறேன்" இப்படி ஒரு பழமொழி உண்டு. உங்கள் இலக்குகளை அடைவதற்கு நல்ல நண்பர்கள் அவசியம். உங்கள் இலக்குகளை நோக்கிச் செல்வதற்கு அவர்கள்தான் உதவியாக இருப்பார்கள். உங்களுக்கு உந்துதலாக உள்ள சிநேகிதர்களுடன்தான் இணைந்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக மதுப் பிரியர்களுடன் நட்பை வைத்திருந்தால் மதுப் பழக்கம் இலகுவாக எம்மை வந்து சேரும். நண்பனுக்காக நண்பனுடன் சேர்ந்து மது அருந்தி பின் தானாகவே தனித்து மதுவை அருந்தும் தீய பழக் கத்துக்கு அடிமையாகி விடுவான்.

மது அருந்துவதால் பல்வேறான பாதிப்புக்களை அடைய நேரிடும். சுமை தூக்குபவர்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையாகுவதால் தமது உழைப்பைக் கெடுக்கிறார்கள். உடல், உள, ஆரோக்கியத்தை இழக்கிறார்கள். தொடர்ந்து தொழில் செய்யும் வலுவை இழந்து வறுளமை நிலைக்கு உள்ளாகி வாழ்வை வெறுமையாக்குகிறார்கள்.

இளைஞர்கள் சமுதாயத்தின் முதுகெலும்பு என்பார்கள். இன்றைய இளைஞர்கள் நாகரிக மோகத்தில் தலை கீழாக நடக்கிறார்கள். நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்துவதை நாகரிகமாக நினைத்து மது அருந்திய பின் கலாசார பிறழ்வுகளில் ஈடுபடுகின்றனர். மதுவினால் இளைஞர்களின் மூளை பாதிக்கப்படுகின்றது.

> மது அருந்துவதால் பல்வேறான பாதிப்புக்களை அடைய நேரிடும். சுமை தூக்குபவர்கள், சுத்திகரிப்பு தொழிலாளர்கள், கட்டடத் தொழிலாளர்கள் மதுவுக்கு அடிமையாவதால் தமது உழைப்பை கெடுக்கிறார்கள். உடல், உள. ஆரோக்கியத்தை இழக்கிறார்கள். தொடர்ந்து தொழில் செய்யும் வலுவை இழந்து வறுமை நிலைக்கு உள்ளாகி வாழ்வை வெறுமையாக்குகிறார்கள்.

சிறு வயதிலேயே நோயாளியாகின்றனர். எதிர்காலத்தில் இவர்கள் எப்படி நல்ல பெற்றோராகத் திகழ முடியும்?

மதுவில் ஆரம்பமாகி இறுதியில் என்னென்ன போதைப் பொருள்கள் உள்ளனவோ அவை எல்லாவற்றுக்கும் ஒட்டுமொத்த அடிமையாக ஆக வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. இன்று உலகில் சுமார் 18 கோடி தனிநபர்கள் போதைப் பொருள் பழக்கத்துக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அதுவும் இளைஞர்கள் இந்தக் கொடிய பழக்கத்துக்கு அடிமையாகி விடுகிறார்கள். நவீன நாகரிக குடும்பங்களில் பாசம், அன்பு, அரவணைப்பு குறைந்து அதிக சுதந்திரம் கூடி வருவதே இந்தப் பழக்கத்துக்கு இளைஞர்கள் அடிமை யாகக் காரணம். பாடசாலை மாணவர்கள் இதில் தம்மை இணைத்து பிணைப்பை ஏற்படுத்துவதுதான் மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இதனால் இவர்கள் தமது கல்வியை சிறுவயதிலேயே தொலைக்க நேரிடும். அது மட்டுமல்ல வாழ்க்கையில் தோற்றவர்களின் பட்டியலில் உங்களின் பெயரும் இடம்பெற்று விடும்.

மது மனித குலத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய சக்தி வாய்ந்த நச்சுப் பொருளாகும். மூளையில் மன நிலையை மாற்றம் செய்யும். குடிப்பதால் அந்த நேரத்துக்கு அழுத்தங்கள், பிரச்சினைகள் எல்லாம் குறைந்த மாதிரித் தோன்றும். ஆனால் அது ஒரு மாயை. மதுப் பாவனையால் பணம் விரயமாகுவதுடன் கண், ஈரல் போன்ற உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன. பல்வேறு நோய்களுக்கு ஆளாகி இளமையிலேயே முதுமைத் தோற்றத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

மதுவுக்கு அடிமையானவர்கள் ஒவ்வொரு நாளும் மது அருந்துவார்கள். இதனால் அவருக்கு மட்டும் சில வேளை தற்காலிக இன்பம், கிடைக்கலாம். ஆனால் வீட்டிலோ, குடும்பத்திலோ நிரந்தரமான துக்கத்தை இது தோற்றுவிக்கும். குடும்பத்தகராறு, பிள்ளைகளின் கற்றல் சூழல் பாதிக்கப்படல், தந்தை-பிள்ளை, கணவன்-மனைவி, உற வினர்கள் உறவில், அயலவர்கள் உறவில் விரிசலை, மனக் கவலையை தோற்று விக்கும். தந்தையுடன் பிள்ளை வாழ விரும்பாத நிலையும் தோற்றம் பெற்று பிரிவு ஏற்படும். கணவன் மனைவிக்கிடையில் பொருளாதாரப் பிணக்கு ஏற்பட்டு கௌரவப் பிரச்சினைகள் ஏற்பட்டு இறுதியில் விவாகரத்தில் போய் முடிகிறது.

மதுவைப் பாவிக்கின்றவர்கள் குழு மோதல், கொலை, பொதுச் சொத்துகளை அழித்தல், குழப்பங்களை ஏற்படுத்தல் என்ற தீய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எல்லா மனிதர்களுக்கும் மனச்சாட்சி என்ற ஒன்று இருக்கின்றபோதும், மதுவின் காரணமாக அந்த மனச்சாட்சி அவன் மனதிலிருந்து அழிக்கப்பட்டு தீயவழிகளில் ஈடுபடும் துணிவை வழங்குகின்றது.

### வெற்றிக்கு வழிகள் பலவுண்டு

மதுப் பிரியர்கள், மதுவுக்கு அடிமையானவர்கள். இனியாவது அதிலிருந்து விடுபட வேண்டும். நாம் வெற்றி அடைவதற்கு பல வழிகள் உண்டு. தோல்விகளைக் கண்டு துவழக் கூடாது. அவற்றை நிர்வகிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அவற்றுக்கு வழி, மன அமைதியே ஆகும். போதைக்கு அடிமையாகி நோயாளியானவர்களுக்கு சிகிச்சை அளிக்க அரசு பல கோடிக் கணக்கான பணத்தை வைத்தியசாலைகளுக்கு ஒதுக்குகின்றது. வைத்தியசாலைகளில் இவர்களுக்கென சீர்மியச் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. எனவே வெட்கப்படாது உடனடியாக வைத்தியசாலையை நாடி வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

முக்கியமாக இன்றைய இளம் சமுதாயத்தினர் இணையத்தளத்தை தங்கள் உலகமாகக் கருதி வாழ்வதால் பல கெட்ட நடத்தைகளுக்கு ஆளாகின்றனர். இளம் சமுதாயத்தினர் மீது பெற்றோர் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். சிறுவயதிலிருந்தே இசையில் நாட்டத்தை ஏற்படுத்தல், விளையாட்டு, இறை வழிபாடு, வாசிப்பு பழக்கம், நல்ல நண்பர் தெரிவு, கட்டுப்பாடான பழக்கங்கள், நேரமுகாமைத்துவம், உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கத் திட்டமிடல், எப்பொழுதும் எதிர்மறையான எண்ணங்களை தவிர்த்து ஆரோக்கியமான நல்ல எண்ணங்களை மட்டும் மனதில் நிறுத்திக் கொள்ளல் போன்ற சிறந்த நடத்தைகளை பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு ஊட்டி வளர்த்தால் இளம் சமுதாயத் தினர் மதுப் பாவனை போன்ற கெட்ட நடத்தைகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள முடியும்.

எம்முடைய ஆற்றலை உறுதியான முறையில் பயன்படுத்துகின்றபோது, எமது வாழ்விலும் அற்புதங்கள் நிகழும். வாழ்க்கையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு உங்களுக்குள் ஏராளமான திறன்கள் காத்திருக்கின்றன. எம்முடைய திறமையைக் கொண்டு பல உன்னதங்களை நாம் நிகழ்த்த முடியும் என்று நம்புங்கள்.

---

செ.ரமேஷ்

# வடக்கு தேர்தல் பற்றிய அறிக்கை ஒரு பார்வை

> வடமாகாணத்தின் வரலாற்று ரீதி யான வடமாகாண சபைத் தேர்தல் சர்வதேசம் கண்காணிக்கக் கூடியதாக சர்வதேசப் பார்வையில் நடந்து முடிவடைந்த நிலையில், தேர்தல் வன் முறைகளை கண்காணிப் பதற்கான நிலையம் (ஸீஎம்வீ) அதன் இறுதி அறிக்கை யாழ். ரில்கோ ஹோட்டலில் உலகறிய கடந்த 22 ஆம் திகதி வெளியிட்டது.
> இந்த நிகழ்வில் தேர்தல் வன் முறைகளை கண்காணிப்பதற்கான கண்காணிப்பு நிலையத்தின் சார்பில் கலாநிதி பா.சரவணமுத்து, சுனில் ஜெயசேகர, உதய கலுபத்திரன, மஞ்சுளா ககநாயக்கா, சந்திரசேகரன், மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டனர். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

21.09.2013 இல் இடம்பெற்ற தேர்தலில் மொத்த மாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 7.5 வீத நிராகரிப்புடன் 67.52 வீத வாக்க ளிப்பு பதியப்பட் டது.

வடமாகாணத்தில் சிவில் நிர்வாகத்தின் ஒரு முழுமையான மீள் திரும்புதலுக்கான அதன் சாத்தியத்தையும், போராளிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட 4 வருடங்களின் பின்னர் போருக்கு பிந்திய இலங்கையில் ஐக்கியம், ஜனநாயகம், நல்லிணக்கம் என்பவற்றை கவனத்தில் கொண்டதாக இந்தத் தேர்தல் தேசிய அளவிலும்- சர்வதேச அளவிலும் வரவேற்கப்பட்டது. ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, ஆளும் ஐ.ம.சு.கூ. இலுள்ள குழுக்கள் தேர்தல் நடத்துவதை இடை நிறுத்துவதற்கும், அதே போன்று அரசியலமைப்பின் கீழ் மாகாண சபைகளுக்கு அளிக்கப்பட்ட காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்குமான முயற்சிகளில் முன்னணியில் இருந்தன.

எனினும் இறுதியில் தங்கள் முயற்சிகளில் அவர்கள் தோல்வி காண நேரிட்டது.

இதனைவிட இந்தியாவில் இருந்து சர்வதேச அழுத்தம், 2013 செப்ரெம்பர் இல் தேர்தல் நடத்தப்படும் என ஜப்பான் அரசுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதி என்பன முதற்கட்ட பங்களிப்பாகக் கருதப்பட்டன.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் க. வி.விக்னேஸ்வரன் முதலமைச்சராக உறுதிப்படுத்தப்பட்ட பின்னர், கொழும்பில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் பல தரப்பையும் சந்தித்துப் பேசி இருந்தார்.

இதனைவிட 2013 நவம்பர் மாத பொதுநலவாய மாநாடு முக்கிய ஒரு கருப்பொருளாக இருந்த நிலையில் இந்தியாவின் ஆதரவு தேடல் உச்சமாக உள்ள நிலை அவதானிக்கப்பட் டது.

இந்த நிலையில் தேர்தல் தினத்தன்று தேர்தல் வன்முறைகளைக் கண்கா ணிப்புக்கான நிலையம் சார்பில் மொத்தமாக 283 கண்காணிப்பாளர்களில் களக் கண் காணிப்பாளர்களுக்கு மேல திகமாக 27 பேரை 12 நடமாடும் அணியிலும், 240 பேரை வாக்களிப்பு காலம் முழுவதிலுமாக வாக் களிப்பு நிலையங்களில் தங்கியிருந்து கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுத்தி செவ்வை பார்த்தது.

தேர்தல் தினத்துக்கு முன்னும் பின்னுமாக இந்த அறிக்கை முழுமையாக தொகுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமாகாண சபைத் தேர்தலில் இராணுவ பிரசன்னம் , அரச தலையீடு, ஏனைய இடையீடுகளை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் குறிப்பாக இந்தத் தேர்தலில் விடயப் பரப்புக் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் காப்பகம் பரிந்துரை செய்துள்ளது.

உண்மையில் வடமாகாண சபைத் தேர்தலில் இராணுவப் பிரசன்னம் தேவையற்ற ஒன்று. இது சிவில் நிர்வாகத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

17, 18 ஆவது சரத்துக்களில் செய்யப்பட்ட மாற்றங்களை மீளவும் கொண்டு வரப்பட வேண்டும். இதனை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற் கான நிலையம் கூற முனைகின்றது.

தேர்தல் காலங்களில் அரச அதிகாரிகள் பக்கச் சார்பின்றி இருக்க வேண்டும். இல்லாமல் கட்சி ஒன்று சார்பாக நடப்பார்களாயின் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

தேர்தல் அறிவிக்கப்பட்டதற்கு முன்பும் பின்பும் செய்தி நிறுவனங்கள் , செய்தியாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக உதயன் பணிமனை கிளிநொச்சியில் தாக்கி அழிக்கப்பட் டமை இங்கு குறிப்பிட முடிகிறது.

எமது கண்காணிப்பாளர்கள் வாக்குப் பெட்டி கொண்டு சென்றது முதல் வாக்குப் பெட்டி மீள கொண்டு வந்து சேர்த்தது முதல் தங்களது பணியை முறையே நிறைவாகச் செய்து முடித்துள்ளனர்.

இவ்வாறாக தேர்தல் நிறைவு பெற்று முதலமைச்சரும் , உறுப்பினரும் தெரிவாகியுள்ளனர். இந்த விடயங்கள் மக்களுக்கும் சர்வதேசத்துக் கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

இதற்காகவே ஊடகவியலாளர்களை அழைத்துச் செய்தியை பரம்பல் அடை யச் செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பில் உள்ளூராட்சி வார நலனோம்புத் திட்டங்கள்

வலி.தென்மேற்கு, ஒக்.30
உள்ளூராட்சி வாரத்தையும் வாசிப்பு மாதத்தையும் முன்னிட்டு நலனோம்பு வேலைத் திட்டங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.
ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மருத்துவ சேவை நிகழ்வில் மக்களின் பயன்பாட்டுக்குத் தேவையான மருத்துவப் பரிசோதனைக்குரிய உபகரணங்கள் உட்பட நவீன கருவிகள் பிரதேச சபையால் கொள்முதல் செய்யப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டன. அத்துடன் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் மக்களுக்கு விளக்கமளிக்கப் பட்டது.
இந்த நிகழ்வில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.
மறுநாள் வெள்ளிக்கிழமை குறித்த அலுவலகத்தில் முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டும் போட்டி நடத்தப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.
வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 25 உறுப்பினர்களைக் கொண்ட வாசகர் வட்டம் ஒன்றும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கல்வி அதிகாரிகளின் ஆலோசனைக்கமையப் பாடசாலை மாணவர்களுக்குரிய நூல்களும் தெரிவு செய்யப்பட்டு நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.
இதேவேளை முத்து ஐயன்கட்டுப்பகுதியில் ஆயுள்வேத நடமாடும் சேவை நடத்தப்பட்டதுடன் இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மக்களுக்கு இலைக்கஞ்சியும் வழங்கப்பட்டது. (வ-115)

# புனரமைக்கப்பட்டும் பயனில்லை பழைய கோலத்திலேயே பாலம்

## முறிப்பு உப்புக்குளம் வீதியில் இந்த அவலம்

கிளிநொச்சி, ஒக்.30
கிளிநொச்சி முறிப்பு உப்புக்குளம் வீதியில் அமைந்துள்ள பெரிய பாலமொன்று புனரமைக்கப்பட்ட இரண்டு மாதங்களில் பழைய கோலத்தில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்கு உட்பட முறிப்பு உப்புக்குளம் வீதியில் காணப்படும் இந்தப் பாலம் கடந்த வருடம் தனியார் நிறுவனம் ஒன்றினால் புனரமைக்கப்பட்டது. ஆனால் புனரமைக்கப்பட்டு இரண்டு மாதங்களிலேயே சேதமுற்று உடைந்த நிலையில் காணப்படுகின்றது.
இது தொடர்பாகப் பிரதேச மக்களால் பலமுறை சுட்டிக் காட்டப்பட்ட போதிலும் மீள் புனரமைப்புப் பணிகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அந்தப் பகுதி மக்கள் அதிகளவில் பயன் படுத்தும் இந்த வீதிப் பாலம் சேதமடைந்து காணப்படுவதால் மழை காலத்தில் இடர்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
ஆகவே, பிரதேச சபை இதில் அதிக அக்கறை செலுத்துவதுடன் பாலத்தை மீண்டும் புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-14)



முறிப்பு உப்புக் குளத்திலுள்ள பாலம்

# அனுமதியற்ற விளம்பர பதாகைகளுக்கு தடை

யாழ்ப்பாணம்.ஒக்.30
வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பிரதேச சபையின் அனுமதியின்றி விளம்பரப் பதாகைகள் வைப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் எஸ்.சிவராசா தெரிவித்தார்.
அந்தப் பகுதியில் தமது உற்பத்தி விற்பனைகள் தொடர்பாக விளம்பரப்படுத்த விரும்பும் உற்பத்தியாளர்கள் மற்றும் நிறுவனங்கள் வேலணைப் பிரதேச சபைக்கு விண்ணப்பித்து அனுமதிபெற்ற பின்னரே தமது விளம்பரப் பதாகைகளை வைக்கமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-7)



கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து அழைத்து வரப்படுகின்றனர். (வ-8)

# பட்டிமன்ற போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 30
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இன்று புதன் கிழமை வலி.மேற்கு பிரதேச சபையில் பட்டிமன்றப் போட்டியொன்று இடம்பெறவுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட உயர்தரப் பாடசாலை மாணவர்கள் இதில் கலந்து கொள்ளலாம் எனச் சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் அறிவித்துள்ளார். (ஓ-50)

# தென்னை மீள் செய்கை குறித்த கூட்டம்

தென்மராட்சி, ஒக்.30
தென்னை அபிவிருத்திச் சபையினரால் சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தென்னை மீள் செய்கை தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.
குறித்த பிரிவில் வசிக்கும் குடியிருப்பாளர்களில் குடும்பத் துக்கு ஒருவர் வீதம் கூட்டத்துக்கு வருகை தருமாறு கிராம அலுவலர் பீ.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (வ-9)

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேடம்**: சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றிஅடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**இடபம்**: வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். ஆடம்பரச் செலவுகளைத் தவிருங்கள். நட்பு வட்டாரம் விரிவடையும்.

**மிதுனம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்துவந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

**கடகம்** : எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்**: மனதில் இனம்புரியாத பயம் வந்துப் போகும். அடுத்தவர்கள் மனம் காயப் படும்படி பேசாதீர்கள். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப் பார்கள். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி**: திட்டமிட்ட காரியங்களை அலைந்து முடிக்க வேண்டி வரும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். வெளிவட்டாரத்தில் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும்.

நாளை
ஐப்பசி-14 வியாழக்கிழமை 31.10.2013
திதி: துவாதசி மு.இ.09.02 வரை
நட்சத்திரம்: உத்தரம் பி.இ.12.42 வரை
சுபநேரம்: 07.33 - 09.03 வரை
இராகுகாலம்: 01.33 - 03.03 வரை

**துலாம்**: எண்ணம்போல் செயற்பட வேண்டும்மென எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**விருச்சிகம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. அயல் வீட்டாரின் அன்புத் தொல்லை விலகும்.

**தனுசு**: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சகஊழியர்களின் ஆதரவு கிட்டும். அரசு காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்

**மகரம்**: அநாவசிய பேச்சைத் தவிர்ப்பது நல்லது. குடும்பத்தில் உள்ளவர்களுடன் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. உங்களைப் பற்றி அவதூறாகப் பேசுவார்கள். அதை பெரிது படுத்த வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும்.

**கும்பம்**: சோர்வு நீங்கிப் புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த நபரே உங்களை வந்து சந்தித்து மகிழ்ச்சியில் ஆழ்த்துவார். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

**மீனம்**: நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத் தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 3 | 7 | | | | |
| 6 | | 3 | 2 | | | 8 | 4 | |
| 1 | 7 | | | | | 9 | | |
| | | 5 | 4 | 2 | | 6 | 9 | 1 |
| | 1 | | | | | | 2 | |
| 2 | 6 | 9 | | 1 | 8 | 4 | | |
| | | 1 | | | | | 8 | 6 |
| | 2 | 6 | | | 5 | 3 | | 9 |
| | | | | 8 | 2 | | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 3 | 5 | 6 | 4 | 7 | 8 | 1 |
| 8 | 5 | 6 | 7 | 9 | 1 | 2 | 3 | 4 |
| 4 | 7 | 1 | 2 | 8 | 3 | 6 | 9 | 5 |
| 5 | 2 | 8 | 4 | 3 | 9 | 1 | 7 | 6 |
| 9 | 3 | 4 | 6 | 1 | 7 | 5 | 2 | 8 |
| 6 | 1 | 7 | 8 | 2 | 5 | 9 | 4 | 3 |
| 3 | 6 | 2 | 1 | 7 | 8 | 4 | 5 | 9 |
| 1 | 8 | 5 | 9 | 4 | 2 | 3 | 6 | 7 |
| 7 | 4 | 9 | 3 | 5 | 6 | 8 | 1 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## இயற்கை இடர் தொடர்பான விழிப்புணர்வு கிளிநொச்சியில்

### முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன், ஒக்.30
இயற்கை இடர் தொடர்பான விழிப்புணர்வு சகல தரப்பினரிடமும் ஏற்படுத்தப் பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் கு.சுகுணதாஸ் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இயற்கை இடர் தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"இனிவரும் நாள்கள் இயற்கை இடர்கள் அதிகம் உள்ளதாக அமைய வுள்ளன. இதனால் கிளிநொச் சிக் கல்வி வலயத்தில் இயற்கை இடர்கள் ஏற்படக் கூடிய இடங்கள் உள்ள பாடசாலைகளைத் தெரிவு செய்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளோம்.

மழை காலத்தில் மாணவர்களை இடி மின்னல் தாக்கங்களிலிருந்து காக்க வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## காலபோக நெற்செய்கைக்கு விவசாயிகள் ஒத்துழைக்குக

### கிளிநொச்சி அரச அதிபர் கோரிக்கை

இந்த வருடம் மேற்கொள்ளப்படவுள்ள காலபோக நெற்செய்கையின்போது சகல விவசாயிகளும் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அதன் மூலம்தான் ஒரு முழுமையான பலனை அடைய முடியும். இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டமும் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

இந்த ஆண்டுக்கான காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்குச் சகல விவசாயிகளும் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

இதன் மூலமே நல்ல பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியும். தீர்மானிக்கப் பட்ட கால அட்டவணைகளின் பிரகாரமே பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நீர்ப்பாசனக் குளங்களின் கீழான பயிர்ச்செய்கைகளின் பிரகாரம் ஆரம்ப நீர் விநியோகம் மேற்கொள்ளப்படவுள்ளது. இது அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி நிறைவு பெறும். நெல் விதைப்பு அடுத்த மாதம் 10 ஆம் திகதியுடன் பூர்த்தியாக்கப்படல் வேண்டும். கால்நடைகள் உடனடியாகக் கட்டுப்படுத்தப்படுதல் வேண்டும். மேலும் கால் நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான இறுதித் திகதி அடுத்த வருடம் மார்ச் மாதம் 25 எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது- என்றார். (க-6)

## முதலமைச்சர் குழுவினருக்கு வட்டக்கச்சி ஆலயத்தில் ஆசி

யாழ்ப்பாணம், ஒக். 30
கிளிநொச்சி வட்டக்கச்சி ஸ்ரீரங்கநாதப் பெருமாள் ஆலயத்துக்கு கடந்த வாரம் சென்றிருந்த வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள், அவைத் தலைவர் ஆகியோருக்கு ஆலய பிரதம குருவினால் ஆசி வழங்கப்பட்டு காளாஞ்சியும் வழங்கப்பட்டது.

இதில் வடமாகாண சபை முதலமைச்சருடன் அமைச்சர்களான பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம், பொ.ஐங்கரநேசன் , த.குருகுலராஜா, அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோர் ஆசி பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

விசேட பூசை வழிபாட்டைத் தொடர்ந்து இந்த ஆசி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. (க-50)

### புதுக்குடியிருப்பு பொதுச் சந்தை

# கட்டடம் அமைப்பதில் தாமதம் திரும்பியது 50 லட்சம் ரூபா

முல்லைத்தீவு, ஒக.30
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொதுச் சந்தைக்குரிய கட்டடத்தை அமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கட்டுமானப் பணிகளுக்கென நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட சுமார் ஐம்பது லட்சம் ரூபா நிதி மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பொதுச் சந்தை நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படாததால் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இயங்கி வருகின்றது. இதனால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் பிரதேச சபையினால் சந்தைக் கட்டடத்தை அமைப்பதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் செயலாளர் மிதிலைநாதனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையில் நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஐம்பது லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியது. குறித்த ஒப்பந்த காலத்தில் ஏற்பட்ட தடைகள் காரணமாக அதனை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.- என்றார்.

சந்தை அமைப்பதற்குரிய நிதியை வழங்கிய அரச சார்பற்ற நிறுவனத்தின் பொறுப்பு நிலை அதிகாரியொருவரைத் தொடர்பு கொண்டபோது; எமது நிறுவனம் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அதனடிப்படையில் புதுக்குடியிருப்பு பொதுச் சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு ஐம்பது லட்சம் ரூபாவை ஒதுக்கியிருந்தது.


குறித்த சந்தைக்குரிய நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு ஏ-35 வீதியில் பிரதேச சபையினால் வழங்கப்பட்ட காணியைத் துப்புரவு செய்தபோது அங்கு பிணக்கு ஏற்பட்டது. இதனால் அந்த இடம் கைவிடப்பட்டு அதன் பின்னர் ஆனந்தபுரம் பகுதியில் சந்தைக்கான இடம் ஒதுக்கப்பட்டபோதும் அதனைப் பலர் நிராகரித்திருந்தனர்.

இதன் பின்னர் கடந்த ஜூலை மாதம் 14 ஆம் திகதி குறித்த சந்தை ஏற்கெனவே போருக்கு முன்பு இயங்கிய இடத்தில் இயங்க ஆரம்பித்தது அங்கு ஐம்பது லட்சம் ரூபா செலவில் சந்தைக் கட்டடம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், ஆளுநரின் அனுமதி கிடைக்காததால் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. மேலும் கட்டடம் அமைப்பதற்கான ஒப்பந்த காலம், நவம் பர் 15 ஆம் திகதியுடன் நிறைவடைவதால் இதற்குரிய நிதி திரும்பியுள்ளது எனத் தெரிவித்தார். இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, சந்தை அமைப்பதற்குரிய காணி சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பே பிரதேச சபையிடம் எமது அலுவலகத்தால் ஒப்படைக்கப் பட்டது.

ஆனால் சந்தைக் கட்டடம் அமைப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அதற்குரிய நிதி மீளப்பெறப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தார். (க-6)

## தற்காலிகக் கொட்டகையில் 30 குடும்பங்கள் ஆனைவிழுந்தானில் தொடரும் அவலம்

அக்கராயன், ஒக். 30
கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் 30க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிகக் கொட்டகைகளில் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் அவல வாழ்வு வாழ்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



இப்பகுதியில் குடியமர்ந்துள்ள குடும்பங்களில் நிரந்தர வீடு கிடைக்காத 30 குடும்பங்களே இவ்வாறு தற்காலிகக் கொட்டகைகளில் வாழ்ந்து வருகின்றன.

ஆனைவிழுந்தான் கிராமம் 1983 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென உருவாக்கப்பட்டது. மாரி காலத்தின் போது மழை வெள்ளம் கிராமத்தின் மையப் பகுதியில் கடல் போன்று தேங்கி நிற்பதாக இங்கு வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டால் வெள்ளப் பாதிப்பில் இருந்து மீட்சி கிடைக்குமெனவும் இவர்கள் கூறுகின்றனர். மேலும் இந்தக் கிராமத்திலுள்ள குளத்தின் அலைக் கட்டு நீளமாக அமைக்கப் படுமாயின் கிராமத்தினுள் மழை வெள்ளம் தேங்கி நிற்கும் நிலை ஏற்படாதெனவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

## ஆரம்ப பிரிவு இணைப்பு

அக்கராயன், ஒக்.30
கிளிநொச்சி கண்டாவளைக் கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள தருமபுரம் மகா வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு அடுத்த ஆண்டு தருமபுரம் இல.01 பாடசாலையுடன் இணைக்கப்படவுள்ளது.

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள தருமபுரம் மகா வித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவு தனியாக இயங்க முடியாத நிலையில் தருமபுரம் இல. 01 பாடசாலையுடன் இணைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தருமபுரம் இல.01 பாடசாலை ஓர் ஆரம்பப் பாடசாலைக்குத் தேவையான நிறைவான கட்டடங்கள் மற்றும் பௌதிக வளங்களைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## கிராம சேவை அலுவலருக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்

### காணி கையகப்படுத்துவதாக குற்றச்சாட்டு

கனகராயன்குளம் பகுதியிலுள்ள பொதுக்காணி ஒன்றை கிராம அலுவலர் ஒருவர் அத்துமீறி அபகரித்துள்ளதாகத் தெரிவித்து அப்பகுதி மக்கள் கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

இறுதிக்கட்டப் போரின் பின்னர் இப்பகுதியில் மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டபோது, கிராம அலுவலரின் பயன்பாட்டுக்கென தாம் அலுவலகம் ஒன்றை அமைத்துக் கொடுத்ததாக வும், அந்தக் காணியை அப்பகுதியில் முன்னர் கிராம அலுவலராகப் பணியாற்றியவர் கையகப்படுத்தி விட்டாரெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக, நெடுங்கேணி பிரதேச செயலரிடம் அப்பகுதியைச் சேர்ந்த பொதுஅமைப்புக்கள் முறையிட்டதை அடுத்து குறித்த கிராம அலுவரை வேறு பகுதிக்கு இடமாற்றம் செய்ததுடன், காணியையும் பொது உடைமையாக மாற்றும்படி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் அதனையும் பொருட்படுத்தாத குறித்த கிராம அலுவலர் காணியை அபகரிக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளார் அப்பகுதியிலுள்ள விதவைகளின் பயன்பாட்டுக்கென அரச சார் பாற்ற நிறுவனம் ஒன்றினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பொதுக் கிணற்றையும் பயன்படுத்துவதற்கு அவர் தடை விதித்திருந்தார்.

கனக ராயன் குளம் பகுதியில் சனசமூக நிலையங்களின் கட்டடங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம் பெற்றது. இதில் வவுனியா மாவட்ட அரச அதிபரும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போதே அப்பகுதியைச் சேர்ந்த பல பொது அமைப்புக்களும், பொதுமக்களும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட கிராம அலுவலருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். காணியை மீட்டுத் தருமாறு கோரி அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திரவிடம் மனு ஒன்றையும் மக்கள் கையளித்துள்ளனர். (ஐ-422-400)

## மன்னார் செபஸ்தியார் ஆலயத்தில் வைர விழா திருப்பலி நிகழ்வுகள்

மன்னார், ஒக்.30
தூய செபஸ்தியார் பேராலயத்தின் 60 ஆம் ஆண்டுப் பூர்த்தியைக் குறிக்கும் வைர விழா, திருநாள் திருப்பலி நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மன்னாரில் நடைபெற்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 6:15 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலைப் பகுதியில் அமைந்துள்ள மெழுகுதிரிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகிய ஊர்வலம் தூய செபஸ்தியார் பேராலயத்தைச் சென்றடைந்தது.

பின்னர் திருவிழாத் திருப்பலி ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையின் தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப் பட்டது.

இந்தத் திருவிழாத் திருப்பலியை செபஸ்தியார் பேராலயத்தின் பங்குத்தந்தை வண. பெப்பி சோசை அடிகளார் , மன்னார் குருமுதல்வர் வண. விக்டர் சோசை அடிகளார், வண.சத்தியராஜ் அடிகளார், வண.தமிழ்நேசன் அடிகளார், வண. இராயப்பு அடிகளார், வண.யேசுராஜ் சில்வா அடிகளார் ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.





சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் தூய செபஸ்தியாரின் அருளைப் பெறுவதற்குக் கூடிநின்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

ஆயர் வண. இராயப்பு ஜோசப் இறை சொற் பொழிவுகளை நிகழ்த்தினார். இறை பக்தர்கள் இறை சொற் பொழிவுகளை பக்தியுடன் கேட்டு தூய செபஸ் தியாரின் அருளைப் பெற்றனர்.

இறுதியாக தூய செபஸ்தியாரின் திருச்சொருப ஆசிர்வாதமும் வழங்கப்பட்டது. (க-12)

# மரண அறிவித்தல்

## வீரசிங்கம் விக்னேஸ்வரராஜா (ஈசு)



யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் விக்னேஸ்வரராஜா கடந்த 26.10.2013 சனிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்- பவளம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், நவநீதசெல்வியின் அன்புக் கணவரும்-
கவிமிராஜ், புவிராஜ், உதித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் , செல்வநாயகி, பாலசரோஜினி, சிவபாலசிங்கம், தேவராணி, இந்திராணி, சண்முகராசா, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்-
ராஜதுரை, கௌரி, ஜெயமலர், சுஜாத்தா, சோதிநாதன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும், வசந்தரூபி, றேணுகாதேவன், சுகந்தினி, தேவதாஸ், நவதாஸ், சுதா, கிரிஜா, றீகன் , ஜெகன், ரமநீசன், ரமணி, கஜநீசன், ஜெகநீசன், பிரியா, மயூரிஜா, கௌசலன், பினகா, அருண்புஜன், ருத்திலா, அருணன், சந்துஜன், நிலாஜன், நற்சுஜன், நற்சுஜனி ஆகியோரின் அன்பு மாமனும்-
காலஞ்சென்ற அலன் மற்றும் செல்வராஜா, நாகராஜா, சிவலோகநாதன், யோகா, கமலாதேவி, கமலேஸ்வரி, ருத்திரசீலி, நவநீதசீலன் காலஞ்சென்ற பக்தகுணசீலன் மற்றும் புவிராஜசீலன், நற்குணசீலன், ஜெயசீலி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
றீகா, ஜீகா, லிகந்தா, பியந்தா, பாலேந்திரன், பிரபாகரன், காலஞ்சென்றவர்களான சுதன், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், ஜீகன், ஸ்ரிகன், கவிகா, ரூபிகன், சாட், நிசாட் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2013) புதன்கிழமை Le Funerarium 25, Rue Macel Sembat 93430 Villetanevse France எனும் இடத்தில் பிரான்ஸ் நேரப்படி முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**பூங்கனிச்சோலை,**
**இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.**

(சி/13455) (3-6)

தகவல் :
**குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

## வீரசிங்கம் விக்னேஸ்வரராஜா (ஈசு)



ஒரு வயிற்றில் உருவாகி
ஒரு மனையில் உறவாடி
தாயாகித் தாலாட்டுப் பாடிய எனைத்
தரணியிலே தவிக்க விட்டு
தன்னந்தனியே சென்றதேனோ?


மண்ணுலகில் மருமக்கள் கதறியழ
விண்ணுலகைச் சென்றடைந்தாயோ?
உன் பாசத்தைத் தேடி
பார் முழுதும் அலைந்து திரிகின்றோம்
திரும்பி எமை வந்தடையாயோ?

**ஈர விழிகளுடன்...!**
**இந்திராணி - சகோதரி**
**றீகன் - மருமகன்**
**ஜெகன் - மருமகன்**

**கலைமணி ஒழுங்கை,**
**கட்டப்பிராய்.**

(சி/13456) (3-6)

# ...கோயில்
# ...அஷ்டபந்தன
# ...30.10.2013
## ...10 மணி முதல் 11 மணி வரை



### வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடபகுதியிலே வலி வடக்குப் பிரதேசத்தில் தமிழ் வளமும், சமய வளமும், கலை வளமும் ஒருங்கே அமையப் பெற்ற பன்னாலை என்னும் ஊரிலே கோயில் கொண்டிருக்கும் அருள்மிகு சிவபூதவராயர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறு வதையிட்டு பேருவகையடைகின்றேன்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள உன்னத வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாக விளங்கும் இத்திருக்கோயிலானது நாட்டின் அசாதாரண சூழ்நிலை களால் பாதிப்புற்றாலும் அன்பர்களின் முயற்சியினால் தற்போது புனருத்தாரணம் செய்யப்பட்டு அடியவர் களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு மீண்டும் புதுப் பொலிவுடன் காட்சி தருவது மகிழ்ச்சிக்குரியது.

மேலும் இப்பணி சிறப்புற அமைவதற்கு ஈடுபாட்டுடன் செயற்பட்ட ஆலய நிர்வாகத்தினர், ஆச்சாரியப் பெரு மக்கள், அச்சமூக மக்கள் அனைவருக்கும் பெரிதும் நன்றியைத் தெரிவிப்பதோடு, மங்களகரமான கிரியை களைக் கொண்டு விளங்கும் இம் மஹா கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புறவும், ஊர் மக்களும் நாட்டு மக்களும் செல்வச் சிறப்பும் கல்விச் சிறப்பும் பெற்று வாழவும் நாட்டில் சாந்தி, சுபீட்ச வாழ்வு அமையவும் பெருமானை வேண்டி நிற்பதோடு, இந்நிகழ்வானது சிறப்புற அமைய பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பிரதேச செயலாளர், வலி.வடக்கு, தெல்லிப்பழை.



### சிவபூதவராயர் குடமுழுக்கு காணவாரீர்!

சிவநெறியே தவநெறி பெரு நெறி அறநெறி
வழுவாது சைவத்தின் பெருமிதம் பேணிடும்
சிவபூமியாம் ஈழமணித் திருநாட்டின் வடபால்
தெல்லிநகராம் பன்னாலையம் பதியினில்
சிவபூதவராயராய் குடிகொள் பன்னெடும்
பல காலமாய் கருணை பொலியும் புண்ணிய
சிவத்தலப் புனராவர்த்தன குடமுழுக்கெனும் அற்புதப்
பெருஞ்சாந்தியில் கலந்து திருவருள் பெற்றிட வாரீர்.

பசுமையான மண்ணை வேளாண்மையால் பெருக்கி
பசுக்குலம் காத்து சிவ சிவ என்றிட சிவ தீட்சை வழி
நித்தமும் சிவப்பணியே அருள்பணியாய் தொண்டாற்றி
நினைப்பார் உள்ளமதில் பூதநாதனாய் பூரிப்புடன்
விநாயகர், வேலவனாய், ஊஞ்சலில் காளியாய்
நாகதம்பிரானோடுவைரவநாதனார் உறைபதியாய் இலுப்பையடி
நிழலில்இனிதாய் மலர்ந்த எழில் பொங்கிடும்
சிவபூதவராயர் குடமுழுக்கு காண வாரீர் திருவருள் பெறுக.

சைவப் புலவர்,
சைவ சித்தாந்த பண்டிதர்
செஞ்சொற் திலகம் க.நித்திய தசீதரன்(M.A)
இந்து தர்மாசிரியர் (சமயப் பிரசாரக செயலர்-சைவப் புலவர் சங்கம்)



சீரோடு நிகர் திருவும் பொலியும் பன்னாலைப் பதியுறை சிவபூதவராயர்
பாரறியும் அவனருள் மகிமை கண்டுள்ளம் சிலிர்த்துக் கை கூப்ப
நாளொரு வண்ணமாய் நல்லுருப் பெற்று எழிலுறு தோற்றம் காணும்
நாதனவன் நற்கும்பாபிஷேகம் காணு நாளில் நலங்காண அவனடி தொழுவோம்.

கிராம உத்தியோகத்தர்
திருமதி மாலாதேவி மதிவதனன்,
பன்னாலை.

### ஆலய வரலாறும் வளர்ச்சிநிலையும்

"சிவபூமி" எனத் திருமூலர் விதந்திட்ட திருநாடாய் ஈழநாடு அமைகிறது. இந்த நாட்டின் வட பால் வரலாற்றுக்கு முற்பட்ட திருத்தம்பலேஸ்வரம் என்னும் நகுலேஸ்வரம் என்னும் தலச்சூழலும் மாருதப்புரவீகவல்லியின் மாவிட்டபுரம் முதலாக வருத்தலம் கற்பக கணபதிவரை சூழ்பதியே தெல்லிப்பழை மேற்கு பன்னாலை என்னும் அழகிய கிராமம்.

வேளாண்மையோடு கல்வியில், கலையில், பொறியியல், வைத்தியத்துறையில் சட்ட நிபுணர்களாய், பாவலர், காவலர், தத்துவ ஞானிகள், வித்துவான்கள் சூழ்பதியே பன்னாலையம் பதியென்பர். அதற்கெல்லாம் அருள் காட்டும் சந்நிதிகளில் பன்னாலை நகரத்தந் சீமா என்னும் பெயருடைய நிலப்பரப்பில் விளங்கும் சிவபூதவராயரும் ஒன்றாகும்.

அதாவது பெத்த நன்னியர் வேளாண்மை செய்து பசுக்குலம் காத்து வாழ்ந்து வந்தவர். தனது மாட்டுத் தொழுவத்தின் அருகே இலுப்பை மரம் அதன் அடியில் வெள்ளைக் கல் ஒன்றை வைத்து தன்னையும் தன்குலம் சார் ஜீவன்களையும் காத்தருளுவீர் என வழிபட்டு வந்தார். ஒரு வேளை பெத்த நன்னியர் உறக்கத்தில் இருந்த போது கனவுகண்டு நான் சிவபூதவராயன் எனக் கூறியுள்ளார். அன்றிலிருந்து சிவபூதவராயர் என்று வழிபாடாற்றினார்.

"கற்பனைக்கடந்த சோதி கருணையே உருவமாகி....." என்ற பாடல் வரிக்கமைய திரையில் உருவம் ஆத்தி பெரியாரின் பரம்பரை சுண்ணாம்பு சுதையும் ஓலைத்தளிர் கொண்டு கோயில் சிறிதாக அமைத்த அதற்கு வரத்தலம் கற்பக விநாயகர் ஆதீனகர்த்தா சிவஸ்ரீ பிள்ளையார் பட்டர் முத்துச்சாமிக்குருக்கள் அன்று அர்ச்சகராய் வழிபாடாற்றினார்கள்.

இலுப்பை மரத்தில் புதுவருடப் பிறப்பன்று ஆள் இல்லாது இரவு ஊஞ்சல் சத்தத்துடன் ஆடுகிற காட்சியை கனவில் கண்ட திருமதி சின்னத்தம்பி வள்ளியம்மை சிவபூதராயன் சக்தி நான் எனக் கூறுகிறார். அதனால் கருவறைக்கு நேரே கிழக்கு முகமாய் ஊஞ்சல் அமைத்து வைத்தனர். இவ்வாறு அன்புடை அடியார்க்கு அற்புத நாயகனாய் விளங்கி வந்த நிலையினைக் காணுகின்றோம்.

இவ்வாலய முகாமைத்துவப் பணிகள் பெத்த நன்னியர் பரம்பரையில் வைரவப்பிள்ளை அவர்களைத் தொடர்ந்து மகன் நாகமுத்து என்பவரும் பின்னர் அவர் மகன் சுப்பிரமணியம் அவர் வழி நாகமுத்து சகோதரி திருமதி அம்பலம் மாணிக்கம் என்போர் வழியில் சிறப்புற ஆலய வழிபாடுகளும் புனருத்தாரணமும் நடைபெற்று வந்தன. 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற குட முழுக்குடன் வழிபடுவோர்சங்கம் பரிபாலன சபை ஒன்று தெரிவு செய்து அவர்களின் வழியில் இவ்வாலயம் இன்று எழில் பொங்கிடும் சந்நிதியாய்த் திகழ்கிறது.

அந் நிலையில் ஆகம முறைக்கு உட்படாத நிலையிலும் பூஜைகள் வழிபாடுகளை ஆகமத்திற்கு உட்படுத்திய நிலையில் முதன் முதல் 1948 வைகாசி திருவோண நட்சத்திரத்தில் மாவை சிவஸ்ரீ சாமிக்குருக்கள் இரத்தினக்குருக்கள் தலைமையில் குடமுழுக்கு இடம்பெற்றது. 1982 இல் இராஜராஜ நகுலேஸ்வரக் குருக்களின் தலைமையில் குடமுழுக்குஇடம்பெற்றுள்ளது.

அவற்றை தொடர்ந்து அலங்கார உற்சவங்கள் மாத உற்சவம் நித்திய நைமித்தியம் சிறப்பாய் நடைபெற்றுவந்துள்ளன. நாட்டின் குழப்பத்தினால் இடப்பெயர்வு ஏற்பட்டு மீண்டும் பல ஆண்டு கழிந்து மீள் குடியேற்றம் ஏற்பட்டு வந்து இன்றைய பரிபாலன சபை பிராயசித்த குடமுழுக்குடன் 2001 ஆம் ஆண்டு சிவஸ்ரீ நா.பத்மநாதக்குருக்களின் தலைமையில் பஞ்சகுண்ட குடமுழுக்கு இடம் பெற்றன.

ஆனால் இன்று ஆலயத்தில் எழில் பொங்கிடு மண்டபங்களுடன் உள்/வெளிக் கொட்டகைகள் வர்ணப்பூச்சுக்கள் என பல புனருத்தாரணப் பணிகளை மேற் கொண்டனர். பிள்ளையார் சிவபூதவராஜர், முருகன், காளி, நாகதம்பிரான், வைரவர் மூர்த்தங்கள் கோயிலாக வசந்தமண்டபம், மணிக்கோபுரம், மடப்பள்ளி, களஞ்சியசாலை, வாகனசாலை, பொங்கல் மண்டபம், அன்னதானமண்டபம் என்னும் சிறப்புக்களுடன் புனராவர்த்தன பஞ்சகுண்டகுடமுழுக்கு இன்று முத்துச்சாமி குரு பரம்பரை மகேந்திர சர்மா, சிவஸ்ரீ சுகுமாருகுருக்கள் வழிகாட்டலில் பிரதமகுருவாய் சிவஸ்ரீ பரமசிவ சிவசங்கரக்குருக்கள் 2013 ஆம் ஆண்டுக்கான குடமுழுக்கு காணவாருங்கள் "குடமுழுக்கு காணாது போதிரே பூம்பாவை" என ஞானசம்பந்தர் கூறினார். நாமெல்லோரும் சிவபூதவராஜரின் குடமுழுக்கில் கலந்து அவர் திருவருளைப் பெற்றுக் கொள்வோம்.

-பரிபாலனசபை

...புற வாழ்த்துவோர் ★★★★★★★★★★★★★★★★★

Sivako Multi Traders Rice Mill
பன்னாலை,
தெல்லிப்பழை.
தொ.பே.:
021 720 0979

பொன்மலர்
பல்பொருள்
வாணிபம்
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

அம்பாள்
மர அரிவு காலை
அன்
மர வியாபாரம்
பாரதி வீதி, சங்கானை
தொ.பே.:
077 654 3809

கட்டடப் பொருள்கள்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
ரஜீவன் ட்ரேட் சென்ரர்
பண்டத்தரிப்பு வீதி,
தெல்லிப்பழை.
தொ.பே:
077 899 6535

JUPITER CONSTRUCTION
Civil Engineering, Construction works
and Supplier of Building Materials.
ICTAD Regd.No. C-10952
Regd.No.DS/VN/BR/144
T.P: 021 205 9717
S.Mukunthan, Pannalai,Tellippalai.

...களில்
...ணையில்
...க
...யம்
...0238

போட்டோ கொப்பி சேவை,
இன்ரநெற் சேவை, மற்றும்
டிவிடி,சிடி விற்பனையாளர்கள்
Version
கே.கே.எஸ்.வீதி,
தெல்லிப்பழை சந்தி.
தொ.பே.:021 205 9212

கட்டடப் பொருள்களை குறைந்த
விலையிலும் தரமாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே
இடம்.
கவி ஹாட்வெயர்
கே.கே.எஸ்.வீதி,
தெல்லிப்பழை சந்தி.
தொ.பே.:077 602 3502

விவசாயிகளின் தோழன்
விநாயகர்
விவசாயக் களஞ்சியம்
அம்பனை,
தெல்லிப்பழை.

விநாயகர்
சைவ உணவகம்
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
தொ.பே.:021 320 5490

விநாயகர் களஞ்சியம்
அன்
விநாயகர் சுப்பர் சிற்றி
கூட்டுறவாளர் வீதி,
அளவெட்டி.
தொ.பே.:021 205 9601


பாராட்டி வாழ்த்துகின்றோம்
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி - 2013
Congratulations
தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில்
சித்தியடைந்தோர்
Congratulations
கே.ஸ்ரீநாராயணி 186
ப.யதுசுதன் 186
அ.மற்றில்டா 181
மு.திபிஜா 175
மு.பவனுஜா 174
ந.ஹேசிகா 174
வி.கவீனா 172
பு.தனுஷன் 172
பே.டிலக்ஷனா 171
ய.நிதோஷன் 169
பா.மதுசாயினி 169
ம.அபிசாளினி 167
செ.சாகித்யா 166
றி.பபிஷிகன் 165
செ.ஜனனி 162
தி.கிருஷாந்தி 157
க.விசாலினி 157
ஜெ.கோகுலன் 156
ஜெ.துர்சிகா 156
பி.வைஷ்ணவி 156
நி.தருண் 156
இ.பவனீதரன் 156
சு.குகசாம்பவி 155
ஜெ.அபிசனா 155
ர.வைஷ்ணவி 155
150 புள்ளிக்கு மேல் பெற்றோர்
ச.பிரவீன் - 153
ப.திலக்சிகா - 153
ப.கோமகள் - 153
த.துவாரகா - 152
ரா.தமிழினி - 151
க.கஜலக்சுமி - 151
ர.அபிமன்யு - 151
க.பியூலா - 150
நா.கிருசிகா - 150
Best Wishes
சித்தியடைந்த மாணவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 75 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு அவர்களின் இச்சாதனைக்கு வழிகோலிய கல்லூரி அதிபர் திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம் அவர்களுக்கும் மற்றும் வகுப்பாசிரியர் திருமதி சேபமாலையம்மா றொபேட்கெனடி ரட்ணராஜா, திருமதி ரோகினி குலசிங்கம், திருமதி ஜிரபாவதி தேவராஜ், செல்வி ஜாஜி திருநாவுக்கரசு, திருமதி தேவகி ஜிரதீபன் ஆகியோரையும் ஏனைய ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களையும், பிரத்தியேக வகுப்புக்களை நடத்திய எஸ். உதயசிலன் ஆசிரியர், த.சரத்பாபு ஆசிரியர் ஆகியோரையும் நன்றியுடன் பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
Best Wishes
தரம் - 5 மாணவர்களின் பெற்றோர்
யா//மானிப்பாய் மகளிர் கல்லூரி
Best Wishes

பணியாளருக்கான ஓய்வூதியத் திட்டத்தை

# இலங்கையில் முதலில் ஆரம்பித்தவை யாழ். மாவட்ட தெ.ப.கூ.சங்கங்களே!

## யாழ்.கூ.அ.உதவி ஆணையாளர் பெருமிதம்

யாழ்ப்பாணம், ஒக்.30

இலங்கையிலேயே கூட்டுறவுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை முதலில் ஆரம்பித்து வைத்த பெருமை யாழ்.மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களையே சாரும். அதனைச் சிறந்த முறையில் தொடர்ந்தும் அந்தச் சங்கங்கள் நடைமுறைப்படுத்தியும் வருகின்றன என்று யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

91 ஆவது சர்வதேசக் கூட்டுறவு தின விழாவும், கௌரவிப்பு விழாவும் நேற்று முன்தினம் வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டின் கடல்வளம், பனை வளம், நில வளம் ஆகிய 3 பிரதான வளங்கள் பொருளாதாரத்தை ஈட்டித் தரக்கூடியதாக உள்ள போதும் பனை வளத்தைப் பயன்படுத்தி 18 சங்கங்களும், 4 சங்கக் கொத்தணிகளும் யாழ்.மாவட்டத்தில் சேவையாற்றி வருகின்றன. சிறந்த நிர்வாகக் கட்டமைப்பும், நிதிப் பிரயோகத்தையும் பயன்படுத்தி சங்கங்கள் பல இடர்கள் மத்தியிலும் உரிய சேவைகளை ஆற்றி வருகின்றன.

அரச, அரச சார்பற்ற நிதி உதவிகள் இல்லாமல் சொந்த நிதியில் சங்கத் தலைவர்கள், மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் நிகழ்வுகளை நடத்தி வருகின்றன.

நாட்டில் இடப்பெயர்வு, அழிவுச் சம்பவங்களின் போது மக்களுக்கான தேவைகளைப் பெற்றுக் கொடுப்பதே கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கமாகவுள்ளது.

சமூக, பொருளாதார , கல்வி சார்ந்த விடயங்களில் மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்காகவே கூட்டுறவு நிறுவனம் உருவாக்கப்பட்டது. இந்த இலக்குக்கு அமைவாகவே சேவையாற்றி வருகிறது. வடமாகாணத்தில் பனை, தென்னை வளம் சார்ந்த ஆவணங்களைப் பாதுகாத்த பெருமையும் இந்தச் சங்கங்களையே சாரும்.

யாழ்.மாவட்டத்தில் 60 வீதமான பனை வளத்தைப் பயன்படுத்தி கைப்பணிப் பொருள்கள், பழச்சாறுகள் , வெல்ல உற்பத்தி என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. எதிர்காலத்தில் சந்தை வாய்ப்பைக் கருத்திற் கொண்டு தொழில்நுட்ப ஆலோசனைகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகிறது.

உற்பத்திப் பொருள்களை சந்தையில் கவரக் கூடியதாக உற்பத்தி செய்யப்பட வேண்டும். 40 இற்கும் மேற்பட்ட பொருள்கள் பனைசார் உற்பத்திப் பொருள்களில் இருந்து தயாரிக்கப்படுகின் றன.

எஞ்சிய 40 வீதமான பனை வளத்தையும் பயன்படுத்தி எதிர்காலத்தில் மக்கள் கேட்கும்போது கிடைக்கக் கூடியதாக சிறந்த தரமான உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம் பனை வளம் சார் பொருளாதாரத்தை கட்டி யெழுப்ப முடியும் -என்றார். (வ-14)

## புலனாய்வுப் பிரிவினராக நடித்து வயோதிபப் பெண்ணிடம் கொள்ளை

தென்மராட்சி, ஒக். 30

ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் வந்த 12பேர் தாம் புலனாய்வுப் பிரிவினர் என்றும் வீட்டை சோதனையிடவுள்ளோம் என அங்கிருந்த வயோதிபப் பெண்ணிடம் கூறி சோதனையிடுவது போல் நாடகமாடி வீட்டிலிருந்து 5பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியையும் பெருந்தொகைப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பட்டப்பகலில் கல்வயல் ஐயனார் வீதியில் இடம்பெற்றது. குறித்த வீட்டில் நடராஜா சிவக்கொழுந்து என்னும் வயோதிப்பெண் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார். அவரை மிரட்டியே இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## மாணவர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்துகொள்வார். (வ-8)

## கும்பாபிஷேகம்

வட்டுக்கோட்டை பங்குரு கந்தசாமி ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் பூசைகள் ஆரம்பமாகி காலை 9.29 மணிக்கு வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கும் ஏனைய பரிபாரங்களுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும்.

எதிர்வரும் 2 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ந)

## கணிதபாட பயிற்சிப் பரீட்சை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கணித பாட பயிற்சிப் பரீட்சை இன்று அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.

டி.பி.எம்.எஸ். கணினி கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் கணித பாடம் (பகுதி I,II,) பரீட்சையின் விடைத்தாள்களை பரீட்சை முடிந்ததும் சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலகத்தில் அன்றைய தினமே ஒப்படைத்து திருத்தப்பட்ட விடைத் தாள்கள் நவம்பர் 6 ஆம் திகதி பெற்றுக் கொள்ளுமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (வ-9)

**வீடு வாடகைக்கு** திருநெல்வேலி பனிக்கர் லேனில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் விரும்பத்தக்கது.
(39662) (6.3.4) தொடர்பு: 077 618 3205

**VAN FOR SALE**
MARUTI SUZUKI - OmniE
தொடர்பு: 071 818 6363 (33295) (5.6.3)

**காணி விற்பனைக்கு**
குருந்தடி வைரவர் கோயில் ஒழுங்கை, ஏழாலை தெற்கு, ஏழாலையில் அமைந்துள்ள 7 பரப்பு 9 9/10 குழி கிணற்றுடன் அமைந்துள்ள காணி உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு:077 710 7487 (39566) (6.3.4)


Day care for Infants, Toddlers & Kids
We provide Infant/Toddler care
Mon - Fri - 7.30 - 5.30
Kid care
Mon - Fri - 12.30 - 5.30
*age-appropriate activities
*well supervised environment
* Snacks & Meals on request
Visalam
127/1 Temple Road Jaffna
021 221 9695, 075 979 9695
admin@visalamholdings.com


**காணி விற்பனைக்கு**
நல்லூர் கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நாவலர் வீதியில் 03 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (39573) (6.3.4)
தொடர்பு:077 576 4052

**வீடு வாடகைக்கு**
வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் தெல்லிப்பழை மெயின் றோட் முகப்பில் தளபாடங்களுடன் கூடிய சமையலறை இன்னும் 5 அறைகளுடன் கூடிய வசதியான வீடு வீட்டை நன்கு பேணக்கூடிய குடும்பத்திற்கு உடனடியாகக் குடிபுகக் கூடிய நிலையில் வாடகைக்கு உண்டு. (சி/13404) (5.3.4)
தொ.பே:077 203 5419, 077 375 3094

**தவறிவிட்டது**
சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த அல்பிறட் அலென் என்பவரின் தே.அ.அ. இல (763141357V), ATM Card, BOC Bank book, Nursing Job Card (02) என்பன மந்திகை ஆதார வைத்திய சாலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு:077 666 8387 (39567) (6.3.4)


**காணி விற்பனைக்கு**
தெல்லிப்பழையில் 5பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (கமநல சேவை நிலையத்துக்கு அண்மையில்)
தொடர்பு:- 077 3234757 (39611)(6.3.4)

**SHARP PHOTO COPIERS**
SHARP நிழற்பட பிரதி இயந்திரங்கள்
தீபாவளி சிறப்பு தள்ளுபடி விலையில்
இதோ இப்பொழுது புத்தம் புதிய Model ஒன்றை அறிமுகப் படுத்துகிறோம்

* நிமிடத்திற்கு 20 பிரதிகள் மற்றும் பிறின்ட்கள்
* Black/ White Scanner
* Double Tray- இரட்டை தட்டுக்கள்
AR-5520 95,000/= + VAT மட்டுமே!
வேகமானது இலகுவானது வசதியானது
★ ஒரு வருடம்/60000 பிரதிகளுக்கான உத்தரவாதம்
★ ஒரு வருடம் இலவச திருத்தல் சேவை
இச்சலுகை நவம்பர் 30 கையிருப்பு உள்ள வரை மட்டுமே
8 வருடகாலமாக தங்கள் நம்பிக்கையை வென்ற Brown & Company PLC-IBS இன் முகவர்
டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்
62/16, ஸ்ரான்லி வீதி, (சம்பத் வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 662 3824, 021 222 4040 (சி/13452) (4.6.3)

**அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்**
கிளி/ பூநகரி நல்லூர் மகா வித்தியாலய மாணவன்
செல்வன் ஆனந்தராசா சஜிராம்
அவர்கள் 2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து எமது பாடசாலைக்கு பெருமை தேடித் தந்துள்ளார். அவரை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இப்பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்
கிளி/பூநகரி நல்லூர் ம.வி.

Congratulation

**10ஆவது பிறந்தநாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்**
இன்று 30.10.2013 இல் பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடும் ஜெயரஞ்சன்-சிவறதி தம்பதியரின் செல்வப் புதல்வி
Happy Birthday
Congrats!
யதுசா

யா/ஈவினை அ.த.க. பாடசாலையில் கல்வி கற்று 2013 தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளதைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவரை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
ஈவினை தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.
அம்மம்மா, தங்கை, தம்பி.
(39552)(4.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

Congratulation
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைக்குப் புதிய அதிபராக
நாகராசா மகேந்திரராசா
அவர்கள் 28.10.2013 முதல் அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றமையையிட்டு மனம்நிறைந்த பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை. (39570)(5.6.3)


அராலியூர்
**ந.சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடகங்கள்**
மாணவர்களே!
நீங்கள் நவீன நாடகமும் வானொலி நாடகமும் கற்கவேண்டியுள்ளது.
கலாபூஷணம் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் சமூக நாடகங்களை யாழ் சேவை மட்டும் ஒலிபரப்புகின்றது!
அவற்றைக் கேட்டு இலங்கை மண்வாசனை நாடகங்கள் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்!
(39583)(10.6.3)

## சுமார் 65,525 ஏக்கர் காடுகள் குத்தகைக்கு

கொழும்பு.ஒக்.30
கடந்த இரண்டாண்டு காலத் துக்குள் அபிவிருத் தித் திட் டங்களுக்காக 65,525 ஏக் கர் காடுகள் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை இலங்கையின் சுற்றாடல்கள் மற்றும் இயற்கை வளங்கள் அதிகார சபை தெரி வித்துள்ளது.
சுண்ணக்காடு பாதுகாப்பு வனத்தில் 15 ஆயிரம் ஏக்கர்களும் லுணுகம் வெஹெரவில் உள்ள அரசுக்குச் சொந்தமான காடுகளில் 3,000 ஏக்கர் களும் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளன என்று அதி கார சபையின் தேசிய அமைப்பாளர் ரவீந்திர காரியவசம் தெரிவித்தார்.
சுவீடனில் உள்ள கௌனன் பர்க் பல் கலைக்கழகம் மழை வீழ்ச்சிக் காடுகள் சம் பந்தமாக மேற்கொண் டுள்ள ஆய்வில், மழை வீழ்ச்சிக் காடுகளை அழிக்கும் செயற்பாட் டில் இலங்கை நான் காவது இடத்தை வகிப் பது தெரியவந்துள் ளது. (ச-22)

### அறிவித்தல்

**வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பல் நோயாளர்களுக்கு இலவச பற் சிகிச்சை**

லண்டனில் கடமை புரியும் Dr. செல்வன் மேதர், B.D.S. (Sri Lanka) B.D.S. (London) D.D.P.H.R.C.S. (London), Diploma in Sedation (London) பல் வைத்திய நிபுணர் அவர்களால் மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் நவம்பர் மாதம் 9ஆம் தகதி தொடக்கம் 13ஆம் திகதி வரை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை பற் சிகிச்சை நடத்தப் படும். பல் நோயாளர்கள் இங்கு வந்து பயன் பெறுங்கள்.

Dr.V.R. David, **வைத்திய மேலதிகாரி,**
**077 617 1451**
(18577) (10.14)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் 23.10.2013 அன்று **சமாதான நீதிவானாக** சத்தியபிரமாணம் செய்த
**தணிகாசலம் தயாபரன்** B.A (Hons)
அவர்கள் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் சிறந்தோங்க மனதார வாழ்த்துகின்றோம்.

MED **நண்பர்கள்**
**பிரதேச செயலகம், சங்கானை.**
(C/13467) (10.6.14)

### காணவில்லை

விநாயகபுரம் இயக்கச்சியைச் சேர்ந்த
**அந்தோனிப்பிள்ளை நெப்போலியன்**



வயது 41, வாய்பேச முடியாதவர், மன நலம் குன்றியவர். இவரை 18.10.2013 ஆம் திகதியில் இருந்து காணவில்லை. யாராவது அவரை பெயர் கேட்டால் "அண்ணா" என்றே கூறுவார். யாராவது இவரை அடையாளம் கண்டால் தயவு செய்து பின்வரும் தொலைபேசிக்கு தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 314 6099
(29684)(10.14)
தகவல்: அந்தோனிப்பிளை இராசேஸ்வரி, விநாயகபுரம், இயக்கச்சி.

### யாழ்ப்பாணம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதிவுசெய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து மதில் அமைப்பதற்கான கேள்விகோரல்**

மேற்படி எமது சங்கம் கீழ்வரும் வேலையினை நிர்மாணிப்ப தற்கு முழுச்செலவுக்குமான கேள்விக் கோரிக்கை கோரப்படு கின்றன. விண்ணப்பங்களை வழங்க விரும்புவோர் சங்கத் துடன் தொடர்பு கொண்டு வேலை தொடர்பான மேலதிக தகவல்களை பெற்று 15.11.2013 இக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பப் படல் வேண்டும்.

**முனீஸ்வரன் கிளை - மதில் அமைத்தல் 360 அடி நீளம்**

**பொதுமுகாமையாளர்**
**யாழ்ப்பாணம் பனை தென்னைவள அபி.கூ.சங்கம்,**
**இல. 330, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.**
(f/13468) (10.14)

## ஆஸி. பயண முயற்சி இருவருக்கு மறியல்

கொழும்பு,ஒக்.30
சட்டவிரோதமான முறையில் ஆஸ்ரேலியாவுக்குச்செல்ல முயன்ற ஒருவரும் அந்த நபருக்கு உதவிய வரும் மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒரு வெல்ல கடற்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.
குறித்த இரு நபர்களும் பயணித்த வாகனமும் ஒரு தொகுதி பொருள்களும் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.
கைது செய்யப்பட்ட வர்களிடமிருந்து அரிசி, பருப்பு, பால்மா, குடி தண்ணீர் போத்தல்கள், கேஸ் சிலிண்டர், மிளகாய்த் தூள், தேயிலைத் தூள் உள்ளிட்ட உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட் டுள்ளன.
கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுமுன்தினம் மாரவில நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்டனர்.
அதன்போது இஅவர்களை எதிர் வரும் 30ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத் தரவிட்டுள்ளார். (ச)

### University of Jaffna Invitation for Bid

**Supplying and Filling of Gravel to Low Lying Areas of Land for Proposed Hostel Complex and Drilling of a Tube Well at Campus Lane. Thirunelvely, Jaffna**

1. The Vice Chancellor of the University of Jaffna on behalf of the University Procurement Committee will receive sealed bids for **Supplying and Filling Gravel to Low Lying Areas of Land for Proposed Hostel Complex and Drilling of a Tube Well at Campus Lane, Thirunelvely, Jaffna.** This work consists supplying and filling of existing land including levelling, watering & compacting (using 8 ton road roller) and consolidating in 150mm layers (500 $m^3$) with approved gravel and drilling a tube well.
2. Interested bidders who have valid **Business Registration and experience** in this field may submit their bids. Bid document can be purchased from the Capital Works & Planning branch of the University of Jaffna upon the payment of **non-refundable fee of Rs. 500.00 at Shroff Counter** of the University during working days **until 06.11.2013** from **9:00 hrs to 15:00 hrs** . Further information can be obtained from Deputy Registrar, Capital Works & Planning, University of Jaffna, Thirunelvely, Jaffna (021-2219201).
3. Bids shall be sent by registered post to reach the Registrar, University of Jaffna or deposited in the tender box kept at Registrar's office on or before **14:00 hrs on 07.11.2013**. The bids will be opened immediately after closing of bids.

**Chairperson, Procurement Committee,**
**University of Jaffna. 29.10.2013**
(C/13466)(6.3.4)

## வடபகுதி ரயில் சேவைக்கு
# இந்தியாவிடமிருந்து 6 ரயில் இயந்திரங்கள்



கொழும்பு.ஒக்.30
வடபகுதி ரயில் மார்க்கத்தின் ரயில் பயணங்களுக்கு 6 ரயில் இயந்திரங்கள் மற்றும் பயணிகளுக்கான 78 ரயில் பெட்டிகளை இந்தியாவில் இருந்து கொள்வனவு செய்வதற்கு போக்குவரத்து அமைச்சு தீர் மானித்துள்ளது.
6 ரயில் இயந்திரங்கள் மற்றும் பயணிகளுக்கான 78 ரயில் பெட்டிகளை கொள்வனவு செய் வதற்கு இந்தியக் கடன் திட்டத் தின் கீழ் 100 மில்லி யன் அமெரிக்கா டொலர்கள் ஒதுக் கப்பட்டுள்ளது.
இந்தக் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படவுள்ள 78 பயணிகள் ரயில் பெட்டிக ளில் 12 ரயில் பெட்டிகள் குளி ரூட்டல் வசதியுள்ள ரயில் பெட் டிகளாக உள்ளன.
ஏனைய 66 ரயில் பெட்டிக ளும் குளிரூட்டல் சாதனங்கள் அற்ற பெட்டிகளாகும்.
வடக்கு ரயில் மார்க்கத்தில் ஏற் கனவே கிளிநொச்சி வரையி லான ரயில் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இந்த ரயில் சேவை எதிர்வரும் ஜூன் மாதம் அளவில் காங்கே சன்துறை வரையிலும், டிசெம் பர் மாதம் அளவில் தலை மன் னார் வரையிலும் நீடிப்பதற்கு ரயில்வே திணைக்களம் திட்ட மிட்டுள்ளது.
அதற்கமைய தினமும் காங்கே சன்துறை வரை 6 ரயில்க ளையும் தலை மன்னார் வரை தினமும் 4 ரயில்களையும் சேவையில் ஈடு படுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் எதிர் பார்த்துள்ளது. (ச-22)

### பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி நகரில் இயங்கும் பிரபல வர்த்தக ஸ்தாபனத்துக்கு பின்வரும் பணியா ளர்கள் தேவை

1. கணக்காளர் 2. கணக்காய்வாளர்

தொடர்பு:
021 228 0155, 077 772 2305
(37569) (10.14)

### விற்பனைக்கு

காலுறை(Socks) தயாரிக்கும் இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. செக்கோசிலவாக்கியா தயாரிப்பு. பாட சாலைக்குரிய காலுறைகள் தயாரிக்க முடியும். நடுத்தர கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு ஏற்றது.
தொடர்பு :- 0750395688, 0771317347

### கார் விற்பனைக்கு

HE-xxxx இலக்க Nissan Sunny Super Sallon FB 15 லீசிங் உடன் விற்பனைக்கு.

T.P: 077 234 9997
(39581) (10.14)


### கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.


### ICT வகுப்புக்கள்

தரம் 10,11 மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம் (ICT) வகுப்புக்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புக்கு: 077 236 7508
(39585) (10.14)


தீபாவளி பண்டி கைக்கால மாபெரும் LapTop கணினி மலிவு



HP 18,750/= தொடக்கம்
D/CORE, $I_3$, $I_5$, $I_7$ HP
2 வருட உத்தரவாதம்
ST. ANTONY'S 187 , KKS ROAD JAFFNA TWON
021 222-4865/ 0750698608
16 ஆவது வருட சேவையில்


### பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு 30 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
**தொடர்பு 077 3238956**

### பஸ் விற்பனைக்கு

63-xxxx தொடரிலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள பஸ் விற்ப னைக்கு உண்டு

தொடர்பு:
021 224 2312, 077 659 2246
(39575) (10.14)

### தவறிவிட்டது

23.10.2013 அன்று சரசாலை-சாவகச்சேரி செல்லும் பாதையில் எனது பேர்சுடன் அடை யாள அட்டை, லைசன்ஸ், தவறிவிட்டன. கண் டெடுத்து தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
077 036 5619, 077 471 0318
(29586) (10.14)

### காணி விற்பனைக்கு

எழுது மட்டுவாழ் சந்தியில் இருந்து 200 m தூரம் நாகர் கோயில் செல்லும் வீதியில் 4பரப்புக் காணிபயன்தருமரங்களுடன் விற்பனைக்குண்டு.
**தொடர்பு 077 6702513 (சிவகுமார்)**

### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 கார்த்திகை 2ஆம் பாதம் 62 கிரகபாவம் உடைய செவ்வாய் குற்றமற்ற மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. தரகர்களும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்பு: 077 236 7508
(39584) (10.14)

### முள்ளியவளை தமிழ் வித்தியாலயத்தின் பாராட்டுக்கள்



எமது பாடசாலையில் இருந்து ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தி யடைந்த மாணவர்களை வாழ்த்துவதுடன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்ந்த மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஜெ. கஜனிகா (170 புள்ளிகள்), கோ.இறையின்பன் போல் (164 புள்ளிகள்), க.வர்ஷிகன் (156 புள்ளிகள்), வி.ரிஷானா (163 புள்ளிகள்), க.தருண்நிலா (159 புள்ளிகள்), த.அஸ்வினி (154 புள்ளிகள்) ஆகியோரையும் அவர்களின் வகுப்பாசிரியர் திருமதி கோ.கலாரஞ்சினி மற்றும் வித்தியாலய அதிபர் வ. நடராசா ஆகியோரையும் பாராட்டி வாழ்த்துவதுடன், 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற வி. லவிசயன் (144 புள்ளிகள்), ஜீ தர்மிலன் (141 புள்ளிகள்), பா. அபிவர்ணா (123 புள்ளிகள்), தி.தக் சிகா (121 புள்ளிகள்), தி.கஸ்தூரி (118 புள்ளிகள்), ஜெ.கவிந்தன் (116 புள்ளிகள்), நே. விதுஷாயினி (113 புள்ளிகள்), த. துவாரகன் (112 புள்ளிகள்), ஆகியோரையும் பல்லாண்டு காலம் பல சிறப்புகளையும் பெற்று நீண்டகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
**முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்**
(39589) (10.14)

# மறுக்கிறது ராணுவம்

கொழும்பு, ஒக். 30

தம்புள்ளை காளிகோயில் படைத் தரப்பினராலேயே இடித்தழிக்கப்பட்டுள்ளது என கோயில் நிர்வாகம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்த இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய, இது முற்றுமுழுதாக இராணுவத்துக்குக் களங்கம் விளைவிக்கும் - சேறுபூசும் நடவடிக்கை என்றும் தெரிவித்தார்.

தம்புள்ளை காளி கோயில் படை யினராலேயே தகர்க்கப்பட்டுள்ளது என கோயில் நிர்வாகத்தினர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தம்புள்ளையில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடவில்லை. அங்கு பொலிஸார்தான் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான நிலையில், இராணுவத் தினர் மீது அவதூறாகப் பழி சுமத்துவது, அவர்களைஅபகீர்த்திக்கு உள்ளாக்கும் செயலாகும் என்று தெரிவித்தார்.

அத்துடன், இராணுவத்தினர் சிவில் உடையில் வந்து தம்மை அச்சுறுத்தினர் என ஆலய பூசகர் கூறும்போதே இது பொய் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது எனத் தெரிவித்த அவர், அண்மையில், மட்டக்களப்பில் இந்து ஆலயம் ஒன்று தாக்குதலுக்குபட்ட போதும் படைத் தரப்பினர் மீதே குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால் உண்மையான குற்றவாளியை பொலிஸார் பின்னர் கைதுசெய்தனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

# வட மாகாணசபையை கலைக்க வேண்டும்

## ஆளுநருடன் முரண்பட்டால் வேறு வழியில்லை என்கிறது ஹெல உறுமய

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையின் கீழுள்ள வட மாகாண சபையானது அதன் ஆளுநருடன் முரண்படுமானால் மாகாணசபை யைக் கலைக்கக்கூடிய சூழ்நிலையே உருவாகும்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளது அரசின் பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய.

> "வடக்கு ஆளுநரை அப்பதவி யிலிருந்து நீக்குவதா அல்லது இல்லையா என் பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கின்றது.

வடமாகாண சபையின் ஆளுநராகப் பதவி வகிக்கும் முன்னாள் இராணுவ அதிகாரியான ஜி.ஏ.சந்திர சிறியை நீக்கிவிட்டு அப்பதவிக்கு சிவில் அதிகாரியொருவரை அரசு நியமிக்க வேண்டும் என ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்த கூட்டமைப்பு மாகா ணத்தில் ஆட்சியமைத்த பின்னரும் அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருந்து வருகின்றது.

இந்நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் 'ஆளுநர் மாற்றம்' நிலைப்பாடு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேற்கண்ட வாறு கூறினார்.

"வடக்கு ஆளுநரை அப்பதவியிலிருந்து நீக்குவதா அல்லது இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கின்றது. ஆளுநரை நீக்கும் சக்தி அரசியல் கட்சிக ளுக்கு இல்லை.

எனவே, இவ்வாறான கருத்துகளை முன்வைப்பதால் வீண் முரண்பாடுகள்தான் ஏற்படும். ஆளுநரை நீக்கக்கோரி வட மாகாணசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் விரிசல் நிலை மேலும் உக்கிரமடையும். இவ்வாறு தொடர்ந்தும் ஆளுநருடன் முரண்பட்டுக் கொண்டிருந்தால் மாகாண சபையை கலைக்கவேண்டிய நிலையே ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அதே வேளை, மாகாணசபைக் கட்டமைப்பைக் குழப்புவதற்கு விக்னேஸ்வரன் முற்படுகின்றார். அவ்வாறு ஏதும் நடக்குமாயின் அதற்கான முழுப்பொறுப்பையும் அவரே ஏற்கவேண்டும்" எனவும் ஹெல உறுமயவின் பேச்சாளர் தெரிவித்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## காளி கோயில்

தனமான இச்செயற்பாடு இலங்கைவாழ் இந்து மக்களின் மனதில் பெரும் வேதனையையும் கொதிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, சர்ச்சைக்குரிய தம்புள்ளை பள்ளிவாசல் மீது அடுத்த இலக்கு வைக்கப்படலாம் என அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

"புனித பூமியான தம்புள்ளை நகரில் பௌத்த விகாரை மட்டுமே இருக்கவேண்டும் எனக் கூறியே பிக்கு தலைமையிலான குழுவினர், இந்து சமயத்தை அழித்தொழிக்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்" என ஆலய பூசகர் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதல் நேற்று அதிகாலை சுமார் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது. காளி கோயில் பூசகர் அம்மையாருக்கு நேற்றுமுன்தினம் கடுந்தொனியில் மிரட்டல் விடுத்த பிக்கு தலைமையி லான குழுவினர், ஆலயத்தை உடனடியாக அகற்றவேண்டும் என்று அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

இந்நிலையிலே நேற்று அதிகாலை இனந்தெரியாதோர் ஆலயத்தை பலவந்தமாக தகர்த்தெறிந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தம்புள்ளை காளி கோயில் பூசகர் அம்மையார் கே.லட்சுமி (வயது-62) கருத்து வெளியிடுகையில்,

"கடந்த 32 வருடங்களுக்கும் மேலாக இந்த காளிகோயிலில் நாம் வழிபாடு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறோம். அண்மைக் காலமாக இந்த ஆலயத்தின்மீது இனந்தெரி யாத குழுவினர் தாக்குதல் நடத்தினர். இந்நிலையில், நேற்றுக்காலை (நேற்றுமுன்தினம்) 7 மணியளவில் பிக்கு ஒருவருடன் சிவில் உடையில் வந்த இராணுவக் குழுவினர் ஆலயத்தை உடனடியாக அகற்றுமாறு எம்மை அச்சுறுத் தினர்.

"இந்த ஆலயத்தை அகற்ற இடமளிக்க முடியாது" என நாம் கூறியபோதும், நாளை (இன்று) புதன்கிழமைக்குள் ஆலயத்தை அகற்றியேயாக வேண்டும் என்று அவர்கள் கடுந்தொனியில் எம்மை அச்சுறுத்தினர்.

"இராணுவத்தினருடன் வந்த பௌத்த பிக்குவும், இது புனித பூமி இங்கு பௌத்த விகாரை மட்டுமே இருக்கவேண்டும் எனக்கூறி எம்மை அச்சுறுத்தினார். அத்துடன் அன்றைய தினம் மாலையும் மறுபடியும் எம்மை அச்சுறுத்தினர்.

"இராணுவத்தினரின் கடும் மிரட்டலால் அச்சமடைந்திருந்த நாம், இன்று காலை (நேற்றுக்காலை) ஆறு மணியளவில் பூஜை செய்வதற்காக ஆலயத்துக்குச் சென்றபோது, ஆலயம் முற்றுமுழுதாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட் டிருந்தது. கோயிலிலுள்ள காளியம்மனின் சிலையை நாம் பாதுகாப்பாக வைத்திருந்தமையால் அந்தச் சிலையை மட்டும் எம்மால் காப்பாற்ற முடிந்தது.

"பிக்குவுடன் வந்து நேற்று (நேற்றுமுன்தினம்) எம்மை அச்சுறுத்திய இராணுவக் குழுவினரே இந்த அநாகரிகச் செயலில் ஈடுபட்டுள்ளனர். இந்த காளி கோயில் விவகாரத்தை பிரதமர் டி.எம்.ஜயரட்ண, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், நாடாளுமன்ற நாமல் ராஜபக்ஷ ஆகி யோரின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை.

"ஆலயத்தைப் பாதுகாப்பதாக இவர்கள் அளித்த வாக்குறு திகள் நிறைவேற்றப்படவில்லை. இந்து மக்களுக்கு இழைக்கப்படுகின்ற அநியாயங்களைத் தட்டிக்கேட்க எவரும் இல்லை" - என்றார்.

பள்ளிநிர்வாகம் முறைப்பாடு

தம்புள்ளை காளி கோயிலுக்கு கடந்த செப்ரெம்பர்மாதம் முதலே பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும், இதுவரையில் ஏன் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது குறித்து தம்புள்ளை பள்ளிவாசல் நிர்வாகசபை உறுப்பினர் சலீம் தம்புள்ளை பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். (த)

## இராணுவ

பார்வையிடச்சென்ற கூட்டமைப்பின் எம்.பி. சரவணபவன் தலைமையிலான குழுவினர் மற்றும் ஊடகவியலாளர்களை அங்கு நின்ற இராணுவ அதிகாரி ஒருவர் அச்சுறுத்தியமை தொடர்பில் நேற்று அமெரிக்காவுக்கு செல்வதற்கு முன்னர் கருத்துத் தெரிவிக்கும்போதே மாவை சேனாதிராசா எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"வலிகாமம் வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட தமிழ் மக்களின் 6,382 ஏக்கர் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமிப்பதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் மக்கள் போராட்டங்களை நடத்தினர். அதன் பின்னர் இது தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து, இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டிருந்தனர். மீண்டும் கடந்த சில தினங்களாக அங்குள்ள தமிழ் மக்களின் வீடுகளை இடித்தழிக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

திங்களன்று இதனைப் பார்வையிடச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையிலான குழுவினரையும், அவர்களுடன் சென்ற ஊடகவிய லாளர்களையும் அங்கு நின்ற இராணுவ அதிகாரியொருவர் அச்சுறுத்தி தனது காட் டுமிராண்டித்தனத்தைக் காட்டியுள்ளார்.

தமிழ் மக்களின் வீடுகள் இடித்தழிக்கப்படுவது இராணுவத்தினரையும், இராணுவத்தின் குடும்பங்களையும் குடியமர்த்துவதற்காகவே என்று குறித்த இராணுவ அதிகாரி தெரிவித்ததன் ஊடாக அவர்களின் உண்மையான நடவடிக்கை அம்பலமாகியுள்ளது.

நிலத்துக்குச் சொந்தக்காரரான தமிழ் மக்கள் அகதிவாழ்வு வாழ அங்கு இராணுவத்தினரும் அவர்களின் குடும்பங்களும் குடியமர்வது எந்தவகையில் நியாயமானது?

நடந்துமுடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தெளிவான ஆணையை இலங்கை அரசுக்கும், சர்வதேச சமூகத்துக்கும் வழங்கியுள்ளனர். அதாவது, இராணுவத்தின் தலையீடுகள் எதுவுமின்றி வடக்கில் தமிழரைத் தமிழரே ஆளவேண்டும் என்பதே வடக்கு மக்களின் ஆணையாகும்.

இதனையும் மீறி இராணுவத்தினர் மீண்டும்பழை யபடி வலிகாமம் வடக்கில் தமது அராஜக நடவடிக்கைகளைஅரங் கேற்ற தொடங்கியுள்ளனர்.

இராணுவத்தினரின் இவ்வாறான செயல்கள் தமிழ் மக்களை மீண்டும் ஆயுதவழிப் போராட்டத்துக்கே இட்டுச்செல்லும்.

எனினும், அந்த வழிக்கு நாம் திரும்பாமல் அஹிம்சை வழியில் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் எமது பிரச்சினைக்குத் தீர்வைக் காண விரும்புகிறோம்.

சர்வதேசத் தலைவர்களின் உதவியுடன் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் தொடரும் இராணுவத்தின் அராஜகத்திற்கு விரைவில் முடிவுகட்டுவோம்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் நாம் அங்குள்ள உயர்மட்ட அதிகாரிகளுடன் இது குறித்துக் கலந்துரையாடுவோம். அதேவேளை, பொதுநலவாய மாநாட்டுக்காக இலங்கை வரும் சர்வதேச நாடுகளின் தலைவர்களுடனும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பினால் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக எடுத்துரைப்போம்" - என்றார். (த)

## சிங்களக்

தொழில்கள் நிமித்த மும், சுய விருப்பத்துடனும் வடக்கில் குடியேறுவதைத் தடுப்பதும் எதிர்ப்புத் தெரிவிப்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் நிலைப்பாட்டை எதிர்க்கின்றேன். வடக்கில் சிங்கள மக்களுக்கு எதிராக இவ்வாறான ஒரு நிலை உருவானால் தெற்கிலும் தமிழ் மக்கள் வந்து குடியேற முடியாது. அதற்கு இடமளிக்கமாட்டோம் என்று சிங்கள மக்கள் மத்தியில் எதிர்ப்புத் தோன்றும்.

இது மீண்டும் இனங்களிடையே முரண்பாட்டைத் தோற்றுவிக்கும். இனவாதத்திற்கு இது சாதமாகிவிடும். எனவே சிங்கள மக்கள் தமது சுயவிருப்பின் பேரில் வடக்கில் மட்டுமல்ல எங்கும் வாழ முடியும். அதே போன்றுதான் தமிழ் மக்களும் எங்கும் வாழலாம். இதற்குத் தடைபோட எவருக்கும் அதிகாரம் இல்லை. ஆனால் வடக்கில் சிங்கள மக்களை அரசின் தலையீட்டுடன் குடியேற்றுவதை எதிர்க்கின்றேன்.

வட பகுதியில் தமிழ் மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் இராணுவத்தினரின் நடமாட்டத்தை தடை செய்ய வேண்டும். இராணுவத்தினர் அவர்களுக்குரிய இடங்களில் இருக்க வேண்டும். அத்தோடு, சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீட்டை இல்லாது செய்ய வேண்டும்.

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு உளவுப் பிரிவினர் நடமாடலாம். ஆனால் இராணுவம் சீருடையுடன் மக்கள் மத்தியில் நடமாடுவதென்பது, மக்கள் மத்தியில் அச்சத்தையும், தாம் இராணுவமயமாக் கலுக்குள் சிக்கியிருக்கின்றோம் என்ற உணர்வையும் ஏற்படுத்தும்.

எந்தவொரு மாகாண சபை முதலமைச்சருக்கும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. எனவே வடக்கு முதலமைச்சருக்கும் இதே நிலைதான். வடக்கு மாகாண ஆளுநராக சிவிலியன் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும் - என்றார். (த-5)

## வடமாகாண

செவ்வாய்க்கிழமை குருணாகலில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறி னார்.

அவர் மேலும் கூறியதாவது:- தாங்கள் பெற்ற வெற்றியின் மூலம் தமிழ்த் தனி இராச்சியமொன்றைப் புலம்பெயர்ந்தோருடன் இணைந்து ஏற்படுத்த தமிழர்கள் முயற்சி செய்தால் வடமேல் மாகாண சபை அதற்கு எதிராக செயற்படும். ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைவரும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் - என்றார். (த)

## புலிகளுக்கு

மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் சுரேஷ் சிறிஸ்கந்தராஜா கடந்த ஜூலை மாதம் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டிருந்தார்.

இதையடுத்து இவருக்கு 15 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்க வேண்டும் என்று அமெரிக்க அரசு சட்டவாளர் நீதிபதியிடம் கோரியிருந்தார். எனி னும், இவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனையை மட்டும் மாவட்ட நீதிபதி ரேமன்ட் டியரி நேற்று முன்தினம் அளித்துள்ளார்.

ஏற்கனவே அமெரிக்காவில் இவர் 10 மாதங்கள் சிறைத் தண்ட னையை அனுபவித்து விட்டநிலையில், எஞ்சிய 14 மாத சிறைத்தண்டனையை அனு பவித்தால் போதும் என்றும் நீதிபதி கூறியுள்ளார்.

## காணாமற்

போனவர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் பிரஜைகள் குழு, வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் காணாமற் போனார் தொடர்பான விவரங்களைத் திரட்டியது. கடந்த இரு வாரகால மாகத் திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2 ஆயிரம் பேர் காணமல் போயுள்ளதாகப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பதிவுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு கொழும்பில் வைத்து கையளிக்கப்படவுள்ளன. (த-5)

## இராணுவத்தால்

ஊடகங்களில் வெளியானால் இராணுவப் பலத்தை காட்ட வேண்டி வரும் என்று எச்சரித்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் ஊடகங்களில் வீடுகள் இடித்தழிக்கும் படங்கள் வெளியாகியுள்ள நிலையில், தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து சம்பவத்துடன் தொடர்புடைய 5 ஊடகவியலாளர்களும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்தனர்.

இது தொடர்பாக கொழும்பு தலைமை அலுவலகத்துடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனராஜ் தெரிவித்தார். (த-5)

## அடிகாயங்களு

கப்பட்டுள்ளது.

அவர் கொலை செய்யப்பட்டுக் கிணற்றில் போடப்பட்டாரா ? என்பது இன்று நடைபெறும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே தெரியவரும் என்று கூறப்பட்டது.

புத்தூர் கிழக்கைச் சேர்ந்த அமிர்தலிங்கம் - மைதிலி (வயது 26) என்ற இளம் பெண்ணே காயங்களுடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளவராவார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு குறித்த பெண் வீட்டில் தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்துள்ளார். அப்போது அவரது கையடக்கத் தொலைபேசிக்கு அழைப்பு ஒன்று வந்துள்ளது அதற்கு பதிலளிப்பதற்காக வெளியே சென்றவர் மீண்டும் வீட்டுக்கு வரவில்லை. இதனை அடுத்து உறவினர்கள் அவரைத் தேடியபோதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந் நிலையில் நேற்று மதியம் குறித்த பெண்ணின் வீட்டிலிருந்து 500 மீற்றர் தூரத்திலுள்ள தோட்டக் கிணறு ஒன்றில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அச்சுவேலி பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து அவர்கள் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் மல்லாகம் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். சம்பவ இடத் துக்கு வந்த நீதிவான் சடலத்தை மீட்டு வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இதன் பின் கிணற்றிலிருந்து சடலம் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலத்தின் நாடிப் பகுதியில் துளை போன்ற காயம் காணப்படுவதாகவும், நெஞ்சுப் பகுதியிலும் உரசல் காயங்கள் காணப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பெண் அணிந்திருந்த மேற்சட்டை அகற்றப்பட்டு பின்னர் அது ஊசியால் இணைக்கப் பட்டிருந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர்.

மல்லாகம் நீதிவானின் உத்தரவுக்கமைய உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றிலிருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றும் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (த-4-11-400)

# வடக்கில் புனிதர்களின் போர்


18 வயது ஹென்றிஸ் அணி


14 வயது ஹென்றிஸ் அணி


16 வயது ஹென்றிஸ் அணி

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்.மாவட்டத்தில் 'புனிதர்களின் போர்' என வர்ணிக்கப்படும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி, இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 14 வயது, 16 வயது, 18 வயது, 20 வயது என நான்கு பிரிவுகளில் அணிகள் மோதவுள்ளன. (த-422)

## ஈகிள்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.30
வவுனியா உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டார வன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

அல் இக்பால் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## விபுலானந்தன் கிண்ணம் இறுதிப் போட்டிகள் இன்று

வலி.வடக்கு, ஒக்.30
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வன் அமரர் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவ முதல்வர் சபையினால் நடத்தப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்று புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னாள் மாணவத் தலைவனும் அலையன்ஸ் காப்புறுதி நிறுவன முகாமையாளருமான எம்.மகேந்திரராஜ் கலந்து கொள்ளவுள்ளார். போட்டியில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**பெண்கள் அணி**
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி எதிர் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

**ஆண்கள் அணி**
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. (த-23-86)


யாழ்.இந்துக் கல்லூரி


யாழ்.இந்து மகளிர் கல்லூரி


யாழ்.மத்திய கல்லூரி


இராமநாதன் மகளிர் கல்லூரி


## இன்றைய ஆட்டம்



யாழ்ப்பாணம், ஒக்.30
வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டார வன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் 786 விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

## ஆசிய உதைபந்தாட்டத்தில் இரு மன்னார் வீரர்கள்


யோண்சன்


கிசோர்

யாழ்ப்பாணம், ஒக்.30
இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்ட சங்கத்தின் 19 வயதுப் பிரிவினருக்கான 41 ஆவது ஆசிய உதைபந்தாட்டப் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகி 16 ஆம் திகதி வரை தாய்லாந்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை அணியில் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியைச் சேர்ந்த யோண்சன், இ.கிசோர் ஆகிய மாணவர்கள் இடம்பெறவுள்ளனர். (த-23-12)

## வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.30
மாலுசந்தி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்டத்தில் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே லீக் முறையில் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொலிகண்டி விண்மீன் விளையாட்டுக கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பொலிகண்டி விண்மீன் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.




கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# மக்களின் மனநிலை மாற்றம் வேண்டும்



விளையாட்டு வீராங்கனைகள் தொடர்பான மக்களின் மன நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என இந்திய ரென் னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா குறிப் பிட்டுள்ளார்.
ஒரிசாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட சானியா மிர்சா இதனைத் தெரிவித்துள்ளார்.
இந்தியாவில் பெண் ஒருவர் விளையாட்டுத்துறையில் பிரபலமானவராக இருப்பது என்பது கடினமான ஒரு விடயம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். விளையாட்டுத் துறையில் உள்ள பெண்கள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் படுகின்றமை அவர்களது திறமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அவர் கூறியுள்ளார். (த)



# தொடர்ந்து முதலிடத்தில் இந்திய அணி

ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசைப் பட்டியலில் இந்திய அணி தொடர்ந்து முதலிடத்தை வகித்து வருகிறது. ஒருநாள் போட்டிகளின் அடிப்படையில் அணிகளின் தர வரிசைப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்டுள்ளது. இதன்படி 122 புள்ளிகளுடன் இந்திய அணி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது.
இந்தியாவுக்கு எதிரான கடைசி இரண்டு ஒருநாள் போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணி வென்றால், 119 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் நீடிக்கும். இந்தியா 120 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடரும்.
கடைசி 2 ஆட்டத்தில் இந்தியா வென்றால் புள்ளிகள் 123 ஆக உயரும். ஆனால் ஆஸ்திரேலியாவின் புள்ளிகள் 114 ஆகக் குறையும். இங்கிலாந்து. இலங்கை அணிகள் 111 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளன. (த)

# சதத்துடன் தொடங்கிய ரைடர்




நியூசிலாந்து கிரிக்கெட் வீரர் ஜெஸ்ஸி ரைடர் தனது முதல் தர கிரிக்கெட் போட்டியின் முதன் இன்னிங்ஸைச் சதத்துடன் தொடங்கியுள்ளார்.
இடக்கை வீரரான ஜெஸ்ஸி ரைடர் நியூஸிலாந்து அணிக்கு கிடைத்த பொக்கிஷமாகக் கருதப்படுகிறார்.
கடந்த ஏப்ரல் மாதம் நடந்த சோதனையில் போதைப் பொருள் பயன்படுத்திய குற்றத்துக்காக அவருக்கு ஆறு மாதங்கள் தடை விதிக்கப்பட்டிருந்தது.
மேலும் மார்ச் மாதம் மதுபான விடுதி ஒன்றில் நடந்த தகராறில், தலை மற்றும் நுரையீரலில் அடிபட்டுச் சில காலம் சுயநினைவற்ற நிலையில் இருந்தார்.
இந்நிலையில் பூரணமாக குணமடைந்துள்ள ரைடர், நியூசிலாந்து அணியில் இடம்பிடிக்க ஆர்வமாக உள்ளார். இதற்காக முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் ஒடாகோ வோல்ட்ஸ் அணிக்காக தற்போது விளையாடி வருகிறார்.
இதில், வெல்லிங்டனுக்கு எதிரான போட்டியின் முதல் இன்னிங்ஸில் 164 பந்துகளில் 117 ஓட்டங்கள் எடுத்து அசத்தியுள்ளார். இப்போடியில் 151 பந்துகளில் 19 நான்குகளுடன் சதத்தை கடந்த ரைடர், தனது முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் 14ஆவது சதத்தைப் பதிவு செய்தார்.
29 வயதான ரைடர் இதுவரை நியூசிலாந்து அணிக்காக 18 டெஸ்டுகள் மற்றும் 39 ஒருநாள் போட்டிகளில் விளையாடி உள்ளார். தற்போது அடித்த சதத்தின் மூலம் தனது உடல் தகுதியை நிரூபித்துள்ள ரைடர், விரைவில் நியூசிலாந்து அணியில் மீண்டும் இடம் பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# கிளார்க்கை விமர்சித்த பொண்டிங்

ஆஸ்திரேலியாவின் மைக்கல் கிளார்க்குக்கு ஒரு அணித் தலைவருக்கு உரிய திறமை எதுவும் இல்லை என சாடியுள்ளார் முன்னாள் அணித்தலைவர் பொண்டிங்.
ஆஸ்திரேலியாவின் முன்னாள் அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் சுயசரிதைப் புத்தகத்தை எழுதியுள்ளார். 699 பக்கங்களைக் கொண்ட இந்த புத்தகத்தில், கிளார்க்கை கடுமையாக விமர்சித்துள்ளார். அதில் நெருக்கடியான சூழ்நிலையை கிளார்கால் சரியாகக் கையாளத் தெரியவில்லை. ஒரு அணி வீரராக அவர் செயல்படுவதில்லை. கிளார்க்குக்கு சுயநலமே பெரிதாக இருக்கிறது. குடும்பத்தைக் குறித்துத்தான் அவர் அதிகம் கவலைப் படுகிறார். மாறாக தனது அணி நன்றாக செயல் படுகிறதா என்பதை அறிய ஆர்வம் காட்டுவதில்லை. வெளியில் தான் எல்லாவற்றையும் சரியாகச் செய்வதாகப் பேசுகிறார். ஆனால் உள்ளுக்குள் அவர் அணியினருடன் ஆத்மார்த்தமாக எதையும் விவாதிப்பதில்லை.
குழு விவாதங்களில் சரியாகப் பங்கேற்பதில்லை. ஒரு அணித் தலைவராக அவர் சரிவர செயற்படுவதில்லை என்பது எனது கருத்து என்று கூறியுள்ளார். மேலும், அணி சரிவர விளையாடாவிட்டால் பதற்றம் அடைந்து அறைக்குள் முடங்கிப் போய் விடுகிறார், இது ஒரு அணித் தலைவருக்கான அழகா என்றும் கேட்டுள்ளார் பொண்டிங். இவரை போன்றே ஆஸ்திரேலிய பயிற்சியாளராக இருந்து பின்னர் நீக்கப்பட்டவரான தென்னாபிரிக் காவின் மிக்கி ஆர்தரும் கூட கிளார்க் நெருக்கடியில் இருப்பதாகவே கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)





# யுவராஜுக்கும் ரெய்னாவுக்கும் தொல்லை தரும் ஜோன்சன்

இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர்கள் யுவராஜ், ரெய்னாவுக்கு ஆஸ்திரேலியாவின் மிட்செல் ஜோன்சன் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருகிறார். இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய அணி ஏழு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. முதல் மூன்று போட்டிகள் முடிவில் இந்திய அணி 1-2 என பின்தங்கியுள்ளது. ராஞ்சி, கட்டாக் போட்டிகள் மழையால் ரத்தானது. இதனால் தொடரை வெல்ல மீதமுள்ள இரு போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தவிர இந்திய அணியின் பந்துவீச்சும் மோசமாக உள்ளது.
துடுப்பாட்டத்தில் நடுவரிசையைப் பொறுத்த வரையில் இந்தியாவின் ரெய்னா, யுவராஜ் சிங் இருவரும் ஏமாற்றுகின்றனர். இதுவரை நடந்த போட்டிகளின் முடிவில் ரெய்னா 56 ஓட்டங்கள், யுவராஜ் சிங் 7 ஓட்டங்கள் தான் எடுத்துள்ளனர். இவர்களுக்கு பெரும் தொல்லையாக இருப்பது ஆஸ்திரேலியாவின் ஜோன்சன் தான். இந்தத் தொடரில் ஜோன்சனின் 5 பந்துகளைச் சந்தித்த யுவராஜ் சிங் 1 ஓட்டம் எடுத்தார், 2 முறை ஆட்டமிழந்தார். இவரது 16 பந்துகளை எதிர்கொண்ட ரெய்னா 15 ஓட்டங்கள் எடுத்து ஒரு முறை ஆட்டமிழந்தார்.
ஒட்டுமொத்த அளவில் சர்வதேச கிரிக்கெட்டில் யுவராஜ் சிங் ஜோன்சனின் 129 பந்தில் 76 ஓட்டங்கள் மட்டும் எடுத்து, 5 முறை ஆட்டமிழந்துள்ளார். ரெய்னாவை பொறுத்தவரையில் 47 பந்தில் 51 ஓட்டங்கள் எடுத்தாலும், ஒவ்வொரு 12 பந்துக்கும் ஒருமுறை ஜோன்சனிடம் வீழ்ந்தார்.
இந்நிலையில் இதுகுறித்து ஆஸ்திரேலிய வீரர் வொட்சன் கூறுகையில், யுவராஜ் சிங் சிறப்பான வீரர். இவருக்கு கொஞ்சம் இடம் கொடுத்துவிட்டால் போதும், அசத்தல் ஆட்டத்தை வெளிப்படுத்துவார். ராஜ் கோட் '20/20' போட்டியில் யுவராஜ் சிங்குக்கு எதிராக எங்கள் திட்டம் பலன் தரவில்லை. இதையடுத்து வேறுமாதிரி திட்டமிட்டோம், இதனால் ஒருநாள் தொடரில் பலன் கிடைத்தது. இதேபோல ரெய்னாவும் உலகத்தரம் வாய்ந்தவர், சரியான நேரத்தில் ஜோன்சன் வந்ததால் இவரை ஆட்டமிழக்க செய்ய முடிகிறது என்று தெரிவித்துள்ளார். (த)

## பந்தைச் சேதப்படுத்துவதற்கு தண்டனைகள் ஒழுங்கில்லை

பந்தைச் சேதப்படுத்துவதற்கான தண்டனைகள் ஒழுங்காக வழங்கப்படுவதில்லை என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. சில நேரங்களில் அதிகமான தண்டனைகளும், சில நேரங்களும் குறைவான தண்டனைகளும் வழங்கப்படுவதாக அந்தச் சபை குற்றஞ் சாட்டியுள்ளது. பாகிஸ்தான், தென்னா பிரிக்க அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டியில் பந்தைச் சேதப்படுத்திய டு பிளெஸிஸ் இற்கு அவரது போட்டி ஊதியத்தின் 50 சத வீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.
இதற்கு முன்னர் 2010ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய, பாகிஸ் தான் அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பந்தைச் சேதப்படுத்தும் விதமாக அந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணித் தலைவராகப் பதவி வகித்த ஷகிட் அப்ரிடி பந்தைக் கடித்திருந்தார். அதற்கான தண்டனையாக அவருக்கு இரண்டு 20/20 சர்வதேசப் போட்டிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், பாகிஸ் தானுக்கெதிரான டெஸ்ட் போட்டியில் டு பிளெஸிஸ் பந்தைச் சேதப்படுத்தியமைக்காக அவருக்குக் குறைவான தண்டனை விதிக்கப்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிருப்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிடம் விசாரணை நடத்தியதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. அப்ரிடி, டு பிளெஸிஸ் இருவருக்கும் வெவ் வேறான தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளதாக அந்தச் சபை குறிப்பிட்டுள்ளது. (த)

PCB

## பந்து பட்டு கிரிக்கெட் வீரர் சாவு


கிரிக்கெட் பந்து தலையில் பட்டதால் தென்னாபிரிக்கா வீரர் டேரின் ரேண்டல்(வயது 32)என்பவர் பரிதாபமாக உயிரிழந்தார்.
தென்னாபிரிக்காவின் அலைஸ் நகரில் பார்டர் கிரிக்கெட் சபையின் ஆதரவுடன் ஓல்ட் செல்போர்னியான்ஸ் அணிக்கும், ஃபோர்ட் ஹேர் பல்கலைக்கழக அணிக்கும் இடையே லீக் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.
இந்தப் போட்டியில் களத்தடுப்பின் போது, துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து டேரின் ரேண்டல் தலையில்பட்டது.இதனால் சுருண்டு விழுந்த ரேண்டலை உடனடியாக மருத்துவமனைக் கொண்டு சென்றனர்.எனினும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. (ங)

## ஆஸ்திரேலிய ஏ அணி அறிவிப்பு

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஷஷ் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இங்கிலாந்து அணிக்கும், ஆஸ்திரேலிய ஏ அணிக்குமிடையிலான போட்டிக்கான ஆஸ்திரேலிய ஏ அணி அறிவிக்கப்பட்டுள்ளது.
மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் தலைமையில் இந்த அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 11 பேர் கொண்ட அணியாகவே இது அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆஷஷ் தொடர் நவம்பர் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள நிலையில், அந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா சார்பாகப் வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கும் விதமாக இந்தப் போட்டி அமை யவுள்ளது.
முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்புக்களைக் கொண்டவர்களில் உஸ்மான் கவாஜா, ஷோன் மார்ஷ், அலெக்ஸ் டூலன் ஆகியோர் இவ்வணியில் இடம்பெற்றுள்ளனர். இந்தப் போட்டியில் இவர்கள் வெளிப்படுத்தும் திறமை இவர்களது ஆஷஷ் வாய்ப்புக்களை அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது.
நவம்பர் 6ஆம் திகதி ஆரம்பித்து இடம்பெறவுள்ள இந்த 4 நாள் போட்டியில் ஆஸ்திரேலிய ஏ அணி சார்பாகப் பங்குபற்றவுள்ள அணி அதிக துடுப்பாட்டப் பலத்தைக் கொண்டதாக அமைந்துள்ளது.
அறிவிக்கப்பட்டுள்ள அணி:
மொய்ஸஸ் ஹென்றிக்கஸ், கிளென் மக்ஸ்வெல், ட்ரென்ட் கோப்லான்ட், பென் கட்டிங், அலெக்ஸ் டூலன், கலம் போர்குசன், ஜோன் ஹொலன்ட், உஸ்மான் கவாஜா, மைக்கல் கிளிங்கர், ஷோன் மார்ஷ், ரிம் பெய்ன். (த)

# பலமான எதிரணி வேண்டும்

## சொல்கிறார் மிஸ்பா



ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. இந்தத்தொடரில் பாகிஸ்தான் அணி முழுமையான பலத்தை வெளிப்படுத்த வேண்டுமென பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக் தெரிவித்துள்ளார்.
2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நிறைவடைந்த நிலையில், 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரே இன்று ஆரம்பிக்கவுள்ளது.
இத்தொடரில் தென்னாபிரிக்க அணியின் ஹசிம் அம்லா பங்குபற்றுவாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் முதலிரண்டு போட்டிகளிலும் வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்ரெய்ன் பங்குபற்ற மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகச் சற்றுப்பலம்குறைந்த அணியாக தென்னாபிரிக்க அணி களமிறங்கவுள்ளது.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மிஸ்பா உல் ஹக், "எதிரணியின் பலம் குறைவடையும் சந்தர்ப்பங்களில் பாகிஸ்தான் அணி சுயதிருப்தியடைந்து போட்டிகளில் தோல்வியடைவதை அண்மைக்காலமாக காண முடிகிறது. ஏனெனில் பலவீனமான அணியாக எதிரணி யை நினைத்து அலட்சியமாக ஆடுவதாலேயே இப்படி எதிர்பாராத தோல்விகளை சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. எனவே எமக்கெதிராக விளையாடு அணி முழுமையான , பலமான அணியாக இருப்பதையே நான் விரும்புகின்றேன். இரண்டு முக்கிய வீரர்கள் இல்லாவிட்டாலும் கூட தென்னாபிரிக்க அணியின் பலமான மாற்று வீரர்கள் காணப்படுகிறார்கள். பாகிஸ்தான் அணி வீரர்கள் மன ரீதியாக பலமாகக் காணப்பட வேண்டும். எதிரணியில் யார் விளையாடுகிறார்கள், யார் விளையாடவில்லை என்பது குறித்துக் கவனஞ் செலுத்தக் கூடாது"- என்றார்.
இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடரின் முதற் போட்டியில் பாகிஸ்தான் அணி இலகுவான வெற்றியைப் பெற்ற போதிலும், இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் வெற்றியைப் பெற்று தொடரைச் சமப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ங)

## சுதந்திரமாக விளையாடட்டும் அர்ஜுன்





சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் அவரது விருப்பப்படி விளையாடட்டும் என்று முன்னாள் கிரிக்கெட் வீரரான சுனில் கவாஸ்கரின் மகன் ரோஹன் தெரிவித்துள்ளார்.
இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான சுனில் கவாஸ்கரின் மகன் ரோஹன் கவாஸ்கர்.
இவரும் தந்தையை பின்பற்றி கிரிக்கெட் விளையாடினார். ஆனால் அவரால் தனது தந்தையை போன்று ஜொலிக்க முடியவில்லை.கவாஸ்கரைப் போலவே ரோஹனும் விளையாட வேண்டும் என்று மற்றவர் கொடுத்த அழுத்தமே அவரின் கிரிக்கெட் வாழ்க்கை பிரகாசமற்றும் போனமைக்கு முக்கிய காரணம்.
இந்த நிலையில் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் பற்றி ரோஹன் கூறுகையில்,
"இதுகுறித்து நான் பேச விரும்பவில்லை.
அர்ஜுனை தொந்தரவு செய்யாமல், அவருக்கு பிடித்தபடி கிரிக்கெட் விளையாட விடுங்கள். அப்போது தான் அவரது உண்மையான திறன் வெளிப்படும்" என்று தெரிவித்துள்ளார்.
10 ஆண்டுகளுக்கு மேல் விளையாடி ஓய்வு பெற்ற ரோஹன்இந்திய அணிக்காக 11 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.
தற்போது அவர் கிரிக்கெட் வர்ணனையாளராக உள்ளார். (ங)

FRENCH LANGUAGE CENTRE
FOR BETTER FRENCH
FRENCH CLASSES
France,Canada,Belgium செல்வோர், சிறுவர்கள்(9-13வயது) French கற்று International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்..
ஆசிரியர்: Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்.
வடக்கில் இருந்து எம் மாணவர்கள் மட்டுமே கடந்த DELF A1 Exam இல் சித்தி... நேரம்,பணம் வீணாகாது 8 மாதத்தில் DELF Exam எழுதலாம்....
ஆரம்பம் : 09.11.13 Sat at 8am. No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ Hospital க்கு அண்மையில்).
11.11.13 Mon at 4.30pm. No. 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
0779 789 456
Deutsch,IELTS,B1,Sinhala Classes உம் நடைபெறுகிறது...

ஐரோப்பிய நாடான போலந்தில் படிக்க மாதம் 125000/= உழைக்க வெறும் 7இலட்சம் போதும். இது தொடர்பான சட்ட ஆவணங்களையும் பார்வையிடலாம்.
போலந்து பற்றிய அறிமுகக் குறிப்பு
ஐரோப்பிய யூனியனில் 9 ஆவது பெரிய நாடு.
எல்லை நாடு ஜேர்மனி குறிப்பிடத்தக்கதாகும்.
தனியாள் வருமானம் 13334 அமெரிக்க டொலராகும்.
சட்ட ஆலோசனைக்கு
7 நாள்களும் காலை 8.30- பி.ப. 6.00 மணி வரை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



ஒத்துமாறல்
கொழும்பில் அரச திணைக்களம் ஒன்றில் பொது முகாமைத்துவ உதவியாளர் தரம் III இல் கடமையாற்றும் ஒருவர் யாழ்ப்பாணத்தில் (வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் தவிர்ந்த பிரதேசம்) கடமையாற்றும் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். (33330)(5.6.3)
தொடர்பு: 077 516 2318, 077 669 9155

Vacancy
சங்கென் வடமாகாண கிளைக்கு வீட்டு கட்டுமானத்துறையில் அனுபவமுள்ள மின் பொறியியலாளர்கள் தேவை.
சுய விவரக் கோவையை அனுப்ப வேண்டிய முகவரி.
Jayanthi@sanken.lk

தீபாவளியை முன்னிட்டு
வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து வகையான கண்ணாடித் தளபாடங்களை முதன் முறையாக அறிமுகம் செய்கின்றோம்.



குறிப்பு:- 1000/= பணத்தைச் செலுத்தி உங்கள் விரும்பிய தளபாடங்களை முற்பதிவு செய்து கொள்ளலாம். இச் சலுகை கையிருப்பில் உள்ள வரை மட்டுமே
தொ.பே:-0773583879 0212227892
ஏசியன் தளபாட நிலையம் 133.மின்சார நிலைய வீதி (பஸ் நிலையம் அருகில்) யாழ்ப்பாணம்

NALIN IT தீபாவளியை முன்னிட்டு
10ற்கும் மேற்பட்ட வகை LAPTOPS 46,500/= தொடக்கம்
Assembled,Branded Systems 42,500/= தொடக்கம்
Pendrive, Dongle External Hard Drive
என்றும் இல்லாத விலைக்கழிவுகளுடனும்....... வெகுமதிகளுடனும்....30,31,01ம் திகதிகளில்........
வடக்கின் முன்னணி கணனி வலையமைப்பு
195/4 Parameswara Junction, Palaly Road,Jaffna. TP-0212221121 0777667975
116G,K.K.s Road, Chunnakam. TP-0212242222 0777140431

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.